# ஞான சம்பந்தம்

N49.8.5
209158

# ஞானசம்பந்தம்


7 ஸ்ரீ

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு. 8-5

...சிரியர்:- தருமபுர ஆதீனம் நாகலிங்கத் தம்பிரான்...

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
948
29 APR 1949
MADRAS

...புர ஆதீன - சமயப்பணி:



சமயப்பிரசார வாகனம்.

சமயப்பிரசாரச் சுற்றுப்பிரயாணம் 18—4—49ல் தொடங்கும். ...துரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் பிரசாரம் நிகழ்த்த ஏற்பாடா... ...குறெது. திருவாசகம், திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. ...ான்ற பல பேரறிஞர்கள் இப்பணியில் ஈடுபடுகின்றார்கள்.

...தாரி - பங்குனி தருமபுர ஆதீனம்

உ
சிவமயம்
குருபாதம்

# புது வருட வாழ்த்து

சீரணி திகழும் திருத்தரு மைப்பதி
காரணி மிடறுடைக் கண்ணுதல் சொக்க
லிங்கப் பெருமான் பங்கத் தமரும்
அங்கயற் கண்ணி யம்மையோ டனுதினம்
உலகஞ் செழிக்க உயர்தர நெறியினில்
பலகாற் பூசை புரியுஞ் சுப்பிர
மணிய குருவின் மலரடித் துணைகொடு
எண்ணிய எண்ணியாங் கியாவரும் எய்த
ஊனசம் பந்தம் உலகில் அகற்றி
ஞானசம் பந்தம் நல்கி யருளும்
"ஞானசம் பந்தம்" எனுநன் மாரி
ஞானப் பூங்குழல் நாதன் அருளால்
புத்தாண் டெனுமிவ் விரோதி யாண்டில்
சித்தாந் தமெனுந் தெய்வப் பயிரை
இத்தா ரணியில் எங்கும் வளர்த்து
பலரும் புகழுமிப் பாரினில்
நலம்பல மிகுத்து நாளும்வா ழியவே!

---

வித்துவான், திரு. மு. நடராஜ தேசிகரவர்கள், திருவிடைமருதூர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 APR 1949
MADRAS

உ
சிவமயம்
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 8 | சர்வதாரி௵ பங்குனி௴ APRIL 1949. | இதழ்

பொன்றயங் கிலங்கொளி நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.
— சம்பந்தர்.

## இவைகளுக்கும் மசோதாவில் இடங்கொடுக்க.

தேவஸ்தானங்கட்குச் சோழ மன்னர்கள் சொத்தளித்த காலத்துத் தமிழ் உடலில் தெய்வ உயிரைப் புகுத்திப் பண்ணாகிய ஆபரணங்களைப் பூட்டிச் செவி வழியாக எல்லோர் உள்ளத்திலும் இருக்கச் செய்தார்கள். இறைவனை உண்மையில் காணும் இடம் தேவார திவ்யப்பிரபந்தங்களே என்பதை நிரூபித்துவந்தார்கள். அதற்காகவே சிதம்பரத்திலும், திருக்காரூயிலிலும்,

திருஆரூரிலும், தஞ்சை இராஜராஜேச்சரத்திலும் நிரம்பிய சொத்தை அளித்துத் திருக்கைகொட்டித் திருப்பதியம் ஓதுவார்க்கு ஆதரவளித்து வந்தார்கள் என அழியாதமாறாத கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

இரண்டாவதாகச் சமயம்பரப்பும் வேலையை எந்தக் காலத்திலும் அரசாங்கம் மேற்கொள்ளக்கூடாது. அரசாங்கம் ஒரு ஓடுகின்ற ஆறு. அதில் எல்லாச் சமயங்களுக்கும் கொள்கைகட்கும் கலக்க இடமுண்டு. ஒன்றையே கவனிக்க - பரப்ப, முடியாது என்பதைக் கண்டார்கள். அதற்காகப் பெருவாரியான சொத்துக்களைக் கோயிலுக்கென ஒதுக்கி அவைக்கொண்டு சமயப் பிரசாரம் தக்கமுறையில் செய்வித்து, மக்களைக் கடவுட் கொள்கையில் நிலைநாட்டிவந்தனர். இத்தகைய அறிவுப் பணிக்கென வைக்கப்பட்ட பொருளாகிய தேவாலய வருமானத்தில், இன்றைக்கு வரப்போகும் இந்துமத அறநிலையச் சீர்திருத்த மசோதாவில் பத்தாவது அயிட்டமாகச் சமயப் பிரசாரம் சேர்க்கப்பெற்றுள்ளது. தேவாரம் ஓதுவித்தல், தேவாரப்பாடசாலையமைத்தல் முதலிய திட்டங்கள் சேர்க்கப்பெறவேயில்லை. முதலிடங் கொடுக்கவேண்டிய சமயப் பாதுகாப்பை - தேவார பாராயணத்தை - சமயப்பிரசாரத்தை ஒன்பது செலவினங்கட்குப் பின் ஒருசிறிது வைத்திருப்பது கூடாது. கடவுளுக்குச் செய்யவேண்டிய அபிஷேக ஆராதனைச் செலவினங்கட்கு அடுத்தபடியாகச் சமயப்பிரசாரத்திற்கும், தேவாரப்பண்ணிசைக்கும் திட்டம் அமைக்கப்பெற வேண்டும் என மசோதாவில் சீர்திருத்தம் செய்விக்க வேண்டும்.

சமய வளர்ச்சியில்விருப்பங்கொண்ட நமதுசர்க்கார் இதனைக் கவனித்துத் தக்க பாதுகாப்பு அளிப்பாராக.

---

# அப்பரும் அரன் கழலும்

[வித்துவான், G. சுப்பிரமணிய பிள்ளை, M. A, B. L.,]

தலையானமனிதர்களாய உண்மை அடியார்களின் நினைவு, சொல், செயல் என்னும் மூன்றாலும் நிகழும் தொழில் அனைத்தும் இறைவன் திருமுன்னரே நீங்காது நிகழ்ந்து கொண்டிருக்கும். தாயை ஒளித்த சூல் இல்லை. இறைவனை ஒளித்த எண்ணமில்லை. அறியாமையால் மக்கள் கடவுளும் அறியார் எனக் கபடம்கரந்த கருத்தராய்த் திரிகின்றனர். இவர்கள் ஊர்முனிபாண்டமாய்ச் சுடலைக்கே செல்லும் நடலைவாழ்வுகொள் நாணிலிகள். தன்னெஞ்சறிவதைப் பொய்த்து வாழும் போலிகள். மக்கட்பதடிகள். இவர்களைச் சுடுவதற்குச் சுடலைத் தீயும் வேறு வேண்டுமோ? அவர்கள் நெஞ்சே அவர்களைச் சுட்டுவருத்தும். உலகை ஏமாற்றலாம்; உலகின் முதல்வனை இறைவனை ஏமாற்ற முடியாது.

"வஞ்சித் தொழுகு மதியிலிகாள்! யாவரையும்
வஞ்சித்தே மென்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு."

என்று நீதிநெறி விளக்குகின்றது. உள்ளத் துதிக்கும் எண்ணங்களை உடனுக்குடன் உளவறிந்து களவுகாணும் உத்தமன் முன்னர் பேசவும் நமக்கு வாயுண்டோ? சொல்லுவார் சொல்லெல்லாம் சோதிக்கும் சோதியான் சிவன். மனத்தில் கருத்தெழுகின்ற பொருத்தமில் நினைவுகளை வெளியில் விரித்துரைக்கவும் முடியாது. மறைத்துரைக்கவும் முடியாது. மெய்யிறைவன் முன் எங்ஙனம் பொய்யுரைப்பது என்கிறார் தாயுமானவர்:—

"உள்ளத்தி னுள்ளே ஒளித்திருந்தென் கள்ளமெல்லாம்
வள்ளலறிந் தாலெனக்கு வாயுமுண்டோ பைங்கிளியே!"

ஒவ்வொருவர் எண்ணங்களையும் உடனுக்குடன் அறிந்து கொண்டு உள்ளுறையும் கடவுளையே ஏமாற்றும் கள்ள மனத்தராம் கயவரைக்கண்டு இடிப்பொடியச் சிரியடா சிரி என்று சிரிக்கின்றார் அப்பரடிகள்:—

"கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப்
தெள்ளியேனாகி நின்று தேடினேன் நாடிக் கண்டேன் [போக்கித்
உள்குவா ருள்கிற் றெல்லாம் உடனிருந் தறிதியென்று
வெள்கினேன் வெள்கி நானும் விலாஇறச் சிரித்திட்டேனே."

அப்பர் அடிகள் ஒவ்வொரு விநாடியும் இறைவன் திருவடி நீழலில் இருந்தே தம்வாழ்க்கையைக் கழித்தவர். இறைவனை மறைத்த எண்ணமோ, பேச்சோ, செயலோ, ஒன்றும் அவருக்கில்லை. தனது உயிர் அரன் கழலின் கீழே தவிராது தங்கியிருக்கும் உணர்ச்சியை அவர் இடையறாது பெற்றவர் என்பதை அவர் பாடிய ஆருயிர்த் திருவிருத்தப்பாடல்களே தெரிவிக்கும்.

"எட்டாந் திசைக்கு மிருதிசைக் கும்மிறைவா முறையென்
றிட்டா ரமரர்வெம்பூச லெனக்கேட் டெரிவிழியா
ஒட்டாக் கயவர் திரிபுர மூன்றையு மோரம்பினால்
அட்டான் அடிநிழற் கீழதன்றோ என்னாருயிரே."

என்பது அவற்றுள் ஒன்று

இதனால் அப்பருடைய தெய்வ உணர்ச்சியும், மாசற்ற மனமும், தூயவாழ்க்கையும் இனிது புலனாகும். இறைவன் அளக்கு நெறியினன். அன்பர்கள் தம்மனத் தாய்ந்து கொள்வான் என்பதறிந்து தமது நெஞ்சை இறைவனுக்கே இடமாகவைத்தார். அவனைத் தினைத் தனைப் பொழுதும் மறந்து தாம் உய்வதில்லை என்பதை உணர்ந்தார். அவனைப் பேசாதநாளெல்லாம் பிறவா நாளெனக் கொண்டார்.



தாம் சிவனடி சேர்ந்தெய்தும் இன்பவளத்தை யெலாம் இம்மையிலேயே அடைந்து இனிது அனுபவித் ததால், அவ்வின்பம்மறுமையில் ஒருகால் வாயாதுபோய் விடுமோ என்றுவாடி மிக வருந்தினார்.

"நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின் ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்."

என்பது தமிழ் மூதாட்டியாராகிய ஔவையார் வாக்கு. இவ்வடிகளில் அமைந்துள்ள இரண்டு உண்மைகளையும் நாயனார் ஒருமைப்படுத்தி ஆங்காங்கே தம் பாசுரங்களிற் பொதிந்து வைத்திருப்பதை நன்கு அறியலாம்:—

"சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர் துன்னும்
நிழலாவன"

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை யெதிர் கிடைத்த குளிர்மரம்போல், பிறவிப்பாலையில் துன்ப வெயிலால் துவண்டுலர்ந்து அழுங்குகின்ற உயிரினுக்கு இறைவன் திருவடி நீழல் தந்து இதம் செய்யும். அவ் விறைவன் திருவடிநீழலே இவ்வுயிருக்கு முடிவாய் நிலை யாய் உரிமையாய் எய்த வேண்டிய பேரின்பவீடு. உயிருக்கு உடல் சதமில்லை; நிலையான வீடில்லை. இவ் வுடல் இரண்டு காலால் எழுப்பிய பொய் வீடு. இதை மெய் என்பது பேதமையிலும் பேதைமையாகும். பிணி என்னும் கூரையால் வேய்ந்திருப்பது இந்த இரண்டுகால் வீடு. நான்கு காலால் நிற்கும் வீடே நிற்காது. இரண்டு கால் வீடு எத்தனை நாள் நின்றுவிடும். திடீரென்று வீழ்ந்து முறியும். அப்பொழுது இவ்வுயிருக்கு ஒரு தலை மறைவு, ஒதுக்கிடம், நிலையான வீடு ஒன்று வேண்டுமே. அது இறைவன் திருவடி நீழலன்றிப் பிறிதில்லை. அத் தகைய பேரானந்தப் பெருவாழ்வளிக்கின்ற திருவடி நீழல் வாழ்க்கையை நிரந்தரமாய்த் தமக்கு அளித்தருள வேண்டுகிறார் அப்பர்:—

"முருகார் நறுமலர் இண்டை தழுவி வண்டே முரலும்
பெருகா றடைசடைக் கற்றையினாய்! பிணிமேய்ந்திருந்த
இருகாற் குரம்பையிது நானுடைய திது பிரிந்தால்
தருவாய் எனக்குன் திருவடிக் கீழோர் தலைமறைவே"

எத்தகைய சுற்றுநிலைச் சூழலிலும் இறைவன் திருவடிநீழலின்பத்தைத் துய்க்கும் பேறுபெற்றவர் அப்பர். சமணர்கள் நீற்றறையின் உள்ளே நிறுத்திவைத்து மூடினர். திருநீற்றை மெய்யழுத்தி அஞ்செழுத்தை நெஞ்சழுத்திய அப்பரடிகள் காமன் உருநீற்றும்பெருமானை உறவழுத்தி இனிதிருந்தார். குழல்வண்டு தமிழ்ப்பாட்டிசைக்கும் தாமரைக்குளமாக வெம்அறை வெம்மை மாறியது. மாலைமதியம் மேலே உதித்தது. மன்றல் மணம்கமழத் தென்றல்வந்துலாவியது. இளவேனிலின் பொலிவே எங்கும் தவழ்ந்தது. வீணைநரம்பொலி இழுமென ஒலித்தது. எந்தை ஈசனின் இணையடி நீழலில் இனிது வீற்றிருந்தார் அப்பர் அடிகள். அந்நிலையில் அவர் அருளியபாடல் நாம் செய்த தவத்தால் நமக்குக் கிடைத்திருக்கிறது:-

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே."

இச்செய்யுளில் சிவனடி நீழலானது கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறிவனவாகிய ஐம்புலவின்பமும் ஒருங்கே அழியாவகையில் அளிக்கவல்லது என்பது ஊகித்தறியத்தகும். வீணை என்றதால் செவியின்பமும், மாலைமதியம் என்றதால் காட்சியின்பமும், தென்றல் என்றதால் ஊற்றின்பமும், வண்டு ஒலிக்கும் பொய்கையென்று மலரையும் மதுவையும் குறித்ததால் மூக்காலும் நாக்காலும் எய்தும் இன்பங்களும் ஆகிய ஐம்பொறி யின்பங்களும் அறியப்படும். இறைவன் பாதப்போதுகள், ஐம்பொறிகளும் ஒருங்கே துய்க்கப்



பெறும் பேரின்பத்தினை விளைக்குந்தகையன என்னும் உண்மையை,

"கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலும் ஐங்கருவி
கண்டவின்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்
ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப
கண்டசதிர் கண்டொழிந்தேன் அடைந்தேனுன் திருவடியே"

என்னும் திருவாய்மொழியாலும் நாம் தெரிகின்றோம். ஒண்டொடி கண்ணே யுளவென்னும் ஐம்பொறி இன்பம் சிற்றின்பம். இறைவன் திருவடிக்கீழ்க்கண்ட இன்பம் பேரா இயற்கைப் பேரின்பம். அதனை மாசற்றஇயற்கை இன்பத்தோடு ஒப்பிட்டுக்கூறிய அப்பரது பாடலின் அருமை செப்புந்தரமன்று. அவ்வருமைப் பாடலுக்கு விரிவுரை வகுத்தது போன்று திருவருட்பாவிற் கண்ட ஒரு பாடலையும் உடன்வைத்து ஒப்பிட்டு நோக்கலாம்:

"இளவேனில் மாலையாய்க் குளிர்சோலையாய்மலர்
இலஞ்சி பூம்பொய்கை யருகாய்
ஏற்ற சந்திரகாந்த மேடையாய் அதன்மேல்
இலங்கும் அரமிய அணையுமாய்
தளவேயும் மல்லிகைப் பந்தராய்ப் பால்போல்
தழைத்திடு நிலாக்காலமாய்த்
தனியிளந் தென்றலாய் நிறை நரம்புளர்வீணை
தன்னிசைப் பாட லிடமாய்

களவே கலந்த கற்புடைய மடவால்புடை
கலந்தநய வார்த்தை யுடனாய்க்
களிகொள இருந்தவர்கள் கண்டசுகம்
நின்னடிக் கழல் நிழல் சுகம் நிகருமே
வளவேலை சூழ் உலகு புகழ்கின்ற தவசிகா
மணி உலக நாத வள்ளல்*
மகிழவரு வேளூரில் அன்பர் பவரோகம்அற
வளர் வைத்திய நாதனே." -

* உலகநாதவள்ளல், தருமபுர ஆதீனத்துப் பதினைந்தாம் குருமூர்த்திகளான மாசிலாமணி தேசிகரிடம் ஞானதீக்கை பெற்று, புள்ளிருக்குவேளூர் கட்டளை விசாரணைப்பணியில் ஈடுபட்டுவிளங்கினர்.

மெல்லியற்பாவையாம் நல்லியலுமையாள் எல்லியாடும் இறைவன் தனது அல்லிப்போதின் அடிவருடிப் புல்லிப்போற்றும் பொற்பையெல்லாம் நாயனார் ஓர் அருமைத் தேவாரத்தில் அழகுறச் சித்திரிக்கிறார்:—

"சுணங்கு முகத்துத் துணைமுலைப்பாவை சுரும்பொடுவண்
டணங்குங் குழலி அணியார் வளைக்கரங் கூப்பிநின்று
வணங்கும் பொழுதும் வருடும் பொழுதும் வண்காந்தளொண்போ
தணங்கும் அரவிந்த மொக்கும் ஐயாறன் அடித்தலமே."

இயற்கை மணத்தால் தன் கூந்தலிற்படும் வண்டின் ஏதுவாக வருந்துவாள் என்றதால் உமாதேவின் உடல் மென்மை நன்கு போதரும்; அவளுடைய கரங்கள் காந்தள் மலர்போன்று மிருதுவான வனப்புடையன. அக்கரங்களால் அன்னை அத்தனது தாமரைப் போதனைய பூவடிகளைத் தீண்டினும் அவ்வடிகள் வருந்துமென்று சிவனடியின் மென்மை நன்குணர்த்தப்பட்டது. முத்தேவர், முதல்தேவர் என்று எம்பிரானொடும் வைத்து உடன் எண்ணப்படும் திருமால், பிரமன், இந்திரன் முதலியோர் சிவனது சேவடிக்கீழ் தலை வணங்கும் பொழுது அன்னார் மணிமகுடத்தணிந்த இன்மலர்கள் போதவிழ்ந்து மதுவாய்பில்கித் திருவடிகளை நனையச் செய்யும். தேவர் முடிமலர்கள்பட்டுச் சிவனார் திருவடி சிவந்துகாட்டும். உமையம்மை கரம்பட்டே கன்றிப் போகும் மெல்லடிகள் பைம்போது பட்டுப் பவளம் போல் சிவப்பது வியப்பாகாதல்லவா! ஆயினும் அடியார் அன்பொடுதூவும் பச்சிலைப்பத்திரங்களையும் அன்புமலராய் அணிந்துகொள்ளுமாம் அரனார் திருவடிகள்:—

"நின்போ லமரர்கள் நீண்முடி சாய்ந்து நிமிர்த்துகுத்த
பைம்போ துழக்கிப் பவளந் தழைப்பன பாங்கறியா
என்போலிகள் பறித்திட்ட இலையு முகையு மெல்லாம்
அம்போ தெனக்கொள்ளுமையன் ஐயாற னடித்தலமே."

(வரும்)

# இளைஞர்களுக்கு ......

ஸ்ரீமத். கந்தசாமித் தம்பிரான், தருமபுர ஆதீனம்.

மதஉணர்ச்சியே ஒழுக்கவளர்ச்சி. கடவுளுணர்ச்சியே ஒழுக்கக் கோட்டையின் உயர்ந்த வாயில். அறிவு வளர்ச்சியின் ஆணிவேர்; என்றெல்லாம் அறிஞர்கள் பேசியுள்ளனர். மனிதனை மனிதனாக வாழவைப்பது மதம். மனிதனை மிருக வாழ்க்கையிலிருந்து மனித வாழ்க்கைக்குத் திருப்புவது மதம். மனிதனது வாழ்வை ஒளிநிறைந்ததாகச் செய்வது மதம். மதமின்றி மனிதன் இல்லை. மதமின்றி மனிதன் வாழமுடியாது. இதனால் அன்றோ காந்தியடிகள் Men cannot live with out religion என்று கூறினார்.

இங்ஙனம் மக்கள் வாழ்க்கையோடு ஒற்றித்துள்ளது மதம். கடவுளுணர்ச்சி வேண்டாம் என்றபிரசாரம் நடக்கிறது. மதம் மக்கட்கு அபினாகி வாழ்க்கையைக் கெடுக்கின்றது என்கின்றனர் ஒருசாரார். மதமே கொடிய போர்களுக்குக் காரணமாகவும், அறிஞர் பெருமக்களை இழப்பதற்குக் காரணமாகவும் இருக்கின்றதென்று கூறி "இன்னும் ஒரு தலைமுறைக்கேனும் ஸ்தாபனரீதியாக மதப்பிரசாரத்தை அரசாங்கத்தார் தடைசெய்ய வேண்டும்" என்றும் மாறுபட்ட மதக்கருத்துக்களை மக்கள் மனதில் புகுத்தும் நூல்கள் மறையவேண்டும் என்றும் அரசியலாருக்கு எடுத்துரைக்கின்றனர்.

மதமே மகான்களைத் தந்தது. மதமில்லையேல் மகான்களை உலகம் கண்டிருக்கமுடியாது. சமயம் தந்தநிதி காந்தியடிகள். அதனாலன்றோ அவர் "கடவுள் நம்பிக்கை இல்லாதவன் எவ்வளவு நல்லவனாயினும் சத்தியாக்கிரகியாதற்குத் தகுதியற்றவன்" என்று கூறினார்.

சாக்ரடீஸை விஷமிட்டுக் கொன்றதும் ஏசுவைச் சிலுவையில் அடித்துச் சித்திரவதை செய்ததும் எந்த மதவெறியோ அந்த மதவெறியேதான் காந்தியடிகளைக் கொன்றது என்கின்றனர். ஆம்; சாக்ரடீஸைத் தந்தது மதம்; ஆனால் அவரைக்கொன்றவர் மதத்தின், உண்மை உணராத மக்களும் அரசியல் கட்சியினரும். ஏசுநாதரைத் தந்தது மதம். ஆனால் அவரைக் கொன்றது மதவெறி. ஆகையால் மகான்களைத்தந்து உலகம் உய்ய வழிகாட்டியது சமயம். அவர்களைக் கொன்றது மதவெறி. மதம் வேறு மதவெறி வேறு. மதம் அறிவை அடிப்படையாகக் கொண்டது. மதவெறி அறியாமையை அடிப்படையாகக்கொண்டது. பலவகையானவாழ்க்கைச் சாதனங்களை ஆக்கித்தந்த விஞ்ஞான அறிவின் வளர்ச்சியே அணுகுண்டைக் கண்டு அண்டத்தை அழிப்பேன் என்று அச்சுறுத்துகின்றது. அண்டத்தைக் காக்க அணுகுண்டைத் தடைசெய்வதா? விஞ்ஞான அறிவின் வளர்ச்சியைத்தடைசெய்வதா? சிந்தித்துச்சொல்லுங்கள் அணுகுண்டைத தடைசெய்வதுதான் அழகு. அதுபோல் மதவெறியைக் குழிதோண்டி புதையுங்கள்; ஆனால் மதத்திற்கே குழிதோண்ட வேண்டாம். அங்ஙனம் தோண்டின் அக்குழியே சமுதாயத்தின் சவக்குழியாகிவிடும் என்பதை உணருங்கள்.

சமயப்பூசல்களை விளைக்கக்கூடிய சமயப்பிரசாரங்களைத் தடைசெய்யலாம். செய்யவே வேண்டும். ஆனால் மற்றச் சமயங்களை இழித்துரைக்காதநிலையில் ஒவ்வொரு மதத்தாருக்கும் தத்தம் மதத்தைப் போதிக்கும் உரிமை இருக்கவேண்டும். "ஒன்றோடொன்று மாறுபட்ட மதக் கருத்துக்களை மக்கள் மனதில் புகுத்தும் நூல்கள் மறைய வேண்டும்' என்கின்றனர். அவர்களையே நாம் 'ஒன்றோடொன்று மாறுபட்ட அரசியல் கருத்துக்களை மக்கள் மனதில் புகுத்தும் நூல்கள், பத்திரிகைகள் மறைய வேண்டும்' என்றால் ஒத்துக்கொள்வார்களா? மாட்டவே



மாட்டார்கள். மக்களாட்சியில் மக்களுரிமை பறிபோகிறது என்று அலறுவார்கள். அறிவுடைப் பெருமக்களிடையே சமயத்திலும் அரசியலிலும் மாறுபட்ட கருத்துக்கள் தோன்றுவது தவறன்று. மேலும் இயற்கையுமாகும். ஆனால் அவ்வேற்றுமை ஒற்றுமையை அடிப்படையாகக்கொண்டே விளங்குகின்றது. இன்று நாட்டில் அரசியலிலே பொருளாதாரத் திட்டத்திலே எத்தனையோ கருத்து வேற்றுமைகள். ஆனால் இவ் வேற்றுமைகள் எல்லாம் நாட்டின் நலம் என்ற ஒற்றுமையை அடிப்படையாகக்கொண்டு, வழிவகைகளில் மட்டும் வேறாகின்றன. அதுபோலவே மதங்களும். மக்களுடைய ஒழுக்கநிலை உயர்ச்சிக்கு-மனநிலை உயர்ச்சிக்குக் காரணமாகிய கடவுளுணர்ச்சி ஒவ்வொருவருக்கும் வேண்டும் என்றஒற்றுமையை அடிப்படையாகக்கொண்டு கடவுளையடையும் வழிகளில் மட்டும் வேறுபடுகின்றன. இதனால் வேற்றுமை யுணர்ச்சியோ பிளவோ உண்டாக இடமில்லை. இதுவரையில் மக்களுக்கு மதத்தின் இன்றியமையாமையையும், கடவுள்பேரால்-சமயத்தின்பேரால் அறியாதவர்கள் செய்யும் அக்கிரமங்களுக்குச் சமயம் பொறுப்பல்ல என்றும் கண்டோம்.

பாரதநாட்டின் பூர்வீகச் சொத்தாகிய கடவுளுணர்வைப் பெருக்குகின்ற முறையில் கல்வி பயிலுங்கள். பள்ளிகளில், கல்லூரிகளில் அவரவர்களது மதக்கல்வி கற்பிக்கப்பெறுதல் வேண்டும். அதுமட்டுமல்லாது உலக சமயங்கள் பலவற்றினது அறிவும் கற்பிக்கப்பெறுதல் வேண்டும். அறிவுவந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கடவுளுணர்வுடையராய்த் திகழ்தல் வேண்டும். சமய உணர்வும் ஒழுக்கமும் நிரம்பியவர்களாக விளங்கவேண்டும். காலையில் எழுந்து கடவுளைத் தொழுதலைக் கடனாகக் கொள்ளுதல் வேண்டும். கடவுளைத் தொழுதல் என்றால் சாதனங்கள்பல வேண்டும் என்றும், காலம் மிக அதிகமாகும், அதனால் படிப்பு கெடும் என்றும் ஒருசிலர் எண்ணுகின்றனர். மிகச்சுருங்கிய காலத்தும் மிகஎளிய

முறையில் இறைவனருளைப்பெறலாம். மிகஎளிய சாதன முறை இறைவனை ஒருசில நிமிடங்கள் தோத்தரித்தல் (Prayer). இங்ஙனம் தோத்தரிக்க எத்தனையோ அருட் பாடல்களை ஆக்கித்தந்துள்ளனர் நமது பெரியோர்கள். இங்ஙனம். தோத்தரித்தலால் மிகப்பல பயன்களைப் பெறலாம். இதனையே "More things are wrought by prayer" என்றும், "The prayer is the golden link between the heaven and the wored" என்றும் டென்னிஸன் கூறினர். இன்னோரன்னவற்றைச் சிந்தித்து வாழ்தலே இளைஞர்கடன்.

---

# பிறை வெண்டிங்கள்.

[K. S. விசுவநாத சாஸ்திரிகள், திருப்பதி.]

தண்ணியவெண்ணிலவால் உயிர்க்கின்பம் பயப்பது வெண்டிங்கள். இவ்வுண்மையை உலகம் நன்கு அறியும். இத்திங்கள் நாள்தோறும் தேய்ந்து தேய்ந்து மறைவதும் பின்பு சிறிது சிறிதாக வளர்ந்து நிறைமதியாவதுமாக இவ்விதம், மாறிமாறி வளர்வதும் தேய்வதும் தினந்தோறும் நாம் காணுங் காட்சியே. இது தேய்ந்து குறையுங்காலந் தேய்பிறை எனப்படுகின்றது; வளர்ந்து நிறையுங்காலம் வளர்பிறை எனப்படுகின்றது.. இத்திங்களின் தேய்வுவளர்ச்சிகளைக் கொண்டே பண்டைக் காலத்திய மாதக் கணக்கும் இயல்வதாயிற்று. ஆடித் திங்கள் தைத்திங்களென்று மாதங்களைக் குறிப்பதற்கு வரும் இலக்கிய வழக்குக்களும் இவ்வுண்மையைப் புலப்படுத்தும். கன்னடமொழியில் மாதத்தைத் 'திங்களு' என்று வழங்கி வருவதை இன்றுங் காணலாம்.

இஃதிங்ஙனமாக, இவ்வெண்டிங்களோ நிறைமதியானலுங் குறைமதியானலும் பச்சிளங் குழந்தைக்கும்



அம்புலிமாமாவாகி இன்பத்தையளிக்கிறது. பெண்களுக்கோ தொழுது காண்பிறையாகத் தோற்றமளிக்கின்றது. காதலர்களுக்கோ பிறை நுதலாகவும் மதி முகமாகவுந்தோன்றி அளவிலின்பம் விளைக்கின்றது.

உண்மையுணர்வு படைத்தவர்களாயின் அவர்களுக்குத் "தேய்த லுண்மையும், பெருக லுண்மையும், மாய்த லுண்மையும், பிறத்த லுண்மையும், அறியாதோரையும் அறியக்காட்டித் திங்கட் புத்தே" ளாக விளங்குகிறது. புலவர்களுக்கோ அவர்கள் கூறப்புகும் பற்பல பொருள்களையும் விளக்குதற்குரிய உவமையாகி உதவிபுரிகின்றது. 'இளம்பிறை யன்ன விளங்கு சுடர் நேமி' எனவும் 'பிறையென மதிமயக் குறூஉம் நுதலும்' எனவும், 'வளர்பிறை போல வழிவழிப்பெருகி' எனவும், 'நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னீரபேதையார் நட்பு' எனவும் வருவன காண்க. அவர்கள் பெண்களைப் பற்றிப் பேசுமிடத்திலோ நிறைமதியானல் முகத்திற்கும் குறைமதியானல் நெற்றிக்கும் உவமையாக எடுத்தாள்வது புலனெறி வழக்கமாகவே அமைந்துவிட்டது. இவ்வகையிலே பெரும்பாலான புலவர்கள் இத்திங்களைப் பயன் படுத்திக்கொள்ளத் தவறுவதில்லை. 'பிள்ளைத்தமிழ்' என்ற பிரபந்தத்திலோ அம்புலிப்பருவமென்ற உறுப்பொன்று புலவர்திறமையைக் காண்பதற்கோர் உரைகல்லாகவும் விளங்குகின்றது.

இவர்கள் அனைவரையும்விட்டு யோகப்பயிற்சியையுடையார்பாற் சென்றாலோ இத் திங்களாற் பெறும் பயன் இரட்டிப்பாகப் பெருகுகின்றது. கண்ணிற் காணும் இத்திங்களேயன்றி அவரவர் உடலுள்ளும் அமுதம் பெருக்குகின்ற மதிமண்டிலம் ஒன்று அமைந்து அளிக்கும் இன்பம் அளவற்றதாகும்.

இனிச் சிவனடியார்கள்பாற் செல்வோம். அவர்கட்கும் இறைவன் காட்சியளிக்குங்காற் பிறை வெண்

திங்கள் சூடியவனாகவே தோற்றத்தை அளிக்கின்றான். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இறைவன் முதலிற் பித்தனாகவே காணப்படினும் உடனே அவன் பிறை சூடியாகவே தோற்றமளிக்கின்றான். திருஞானசம்பந்தப் பெருமானார்க்கோ தோடுடையசெவியனாகத் தோன்றி ஆட்கொண்ட அவ்விறைவன் விடையேறி ஓர் தூவெண் மதிசூடிப் பிள்ளையாரின் உள்ளத்தினைக் கவர்ந்து கொண்ட கள்வனாக விளங்குகின்றான். திருநாவுக்கரசர்க்குக் காட்சிதருங் காலத்திலோ 'மாதர் பிறைக்கண்ணி' யானாகவே தோன்றிவிடுகின்றான். அந்நிலையில் அவர் பாடுகின்ற பதிகத்துள் 'எரிப்பிறைக் கண்ணியினான்' என்றும், 'பிறையிளங் கண்ணியினான்' என்றும், 'ஏடுமதிக்கண்ணியான்' என்றும், 'முற்பிறைக் கண்ணியினான்' என்றும், வளர்மதிக் கண்ணியினான்' என்றும், பன்முறை பாராட்டிப் புகழ்வதை நோக்கி அறிக.

இச்சிவபெருமான் பிறையணிந்த வரலாற்றைப் பலபடியாக விரித்துக் கூறும் புராணநூல்கள். தக்கனது சாபத்தினாற் கலைகுறைநோயுற்றுத் திங்கள் இறைவனை அடைந்ததும், சிவபெருமான் அத்திங்கட்குக் கருணை செய்து அதனைத் தலையிலணிந்து கொண்டதுமாகிய வரலாற்றை அவற்றுள் ஒன்று கூறும். மற்றொன்று அமுத உணவினராய தேவர்கள் இத்திங்களின் கலைகளை உண்ணத் தொடங்கியதாற் கலை குறைந்த இத்திங்கள் சிவபெருமானிடஞ்சென்று அடைக்கலம்புக அதற்கிரங்கி இறைவனும் அருள்செய்து முடியில் அணிந்துகொண்டதாக விரித்துரைக்கும். இவ்வாறான பல வரலாறுகள் அங்கே காணக்கிடக்கின்றன. இவை அனைத்தும் அரிய பலஉண்மைகள் பொதிந்துள்ளன என்பதைமட்டும் நாம் மறத்தலாகாது. எத்துணைக் குறைவுடையராயினும் எத்துணை எளியராயினும் தன்னை அடைந்தபின் அவர்க்குப் பெருமையேயன்றிச் சிறுமை யென்பது சிறிதுமில்லை எனச்செய்யும் இறைவனது கருணைத்திறம் இவ்வரலாறுகளால் நன்குதெளிவாம். இவ்வுண்மையறிந்தபெரியோர்



களும் இத்தகைய கருணைத்திறத்தைப் பாராட்டுகின்ற குறிப்பாகவே இப்பிறைவெண்மதிசூடியின் பாராட்டும் அமைவதாகின்றது.

இவ்வாறன்றி அழகியசெவ்வானம் வனப்புக்கொண்டமாலையில், அம்மாலைச் செவ்வானும் அதனிடையே தோன்றும் பிறைமதியும் ஒருங்கே காணப்படுகின்ற இயற்கைத் தோற்றமே இவ்வாறு கூறப்பெறுவதென மதிப்பாரும் சிலர் இருக்கின்றனர். அவர் மதிப்பது யாதேனுமாக; தெய்வத்தன்மை வாய்ந்த அம்மாலைக் காட்சியே இறைவனது தெய்வத்தோற்றத்தை நினைப்பிப்பதன் வாயிலாகப் பெரும் பயனளிப்பதென்பது மட்டும் உண்மையே. அந்நினைப்பின் அடியாகவன்றே 'அந்தியந்தணர் அருங்கடனிறுத்தல், சுடர்விளக்கேற்றிக் கற்புடைமகளிர் பொற்புறவழிபடல்' முதலாய வழிபாட்டுத்திறம் பல மக்களிடையே தோன்றி அவர்களை உய்விப்பனவாயின.

இனிப் பொய்மையறியாப் புலமைத்திறம் படைத்த சங்ககாலச் சான்றோர்களிடமுஞ் சென்று காண்போம். பிறைவெண்திங்கள் சூடிய இவ்விறைவனது தோற்றம் அவர்களையும் ஆட்கொண்டிருக்கிறது என்றே தோன்றுகின்றது. அச்சான்றோர்களுள் ஒருவராகிய மதுரை மருதனிளநாகனாரென்பார்,

> "கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
> பிறைநுதல் விளங்கு மொருகண் போல
> வேந்து மேம்பட்ட பூந்தார் மாற"

என்று பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் புகழ்கின்றார். இறைவனது கறைமிடறும், சென்னிப்பிறையும் அவர் மனக்கண்முன் தோன்ற, அப்பிறையால் அழகுபெற்று விளங்கும் நெற்றியிலுள்ள ஒப்பற்ற நெற்றிக்கண்ணைப்போல் மாறனும் மேம்பட்டு விளங்குகின்றானென்கிறார். தமிழ்நாட்டு மூவேந்தருள்

மற்றைச் சேரசோழ மன்னர்களைக் காட்டிலும், இப் பாண்டியன் மிக்கதிறலுடையவனாக விளங்குகின்றான் என்று பாராட்டுவது புலவருடைய குறிப்பு.

அச் சான்றோர்களுள் ஒருவராக விளங்குகின்ற ஔவையாரும் 'அதியமானெடுமானஞ்சியினிடமிருந்து பெறுதற்கரிய நெல்லிக்கனியைப் பெற்று,

"பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீலமணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே"

என்று அவ்வரசனை வாழ்த்துகின்றார். சிவபெருமானைப் போல் நிலைபெற்று வாழவேண்டுமென்று அரசனை வாழ்த்தத்தொடங்கிய அவர் கருத்திலும் அவ்விறைவனுடைய தோற்றம் பிறைநுதற்பொலிந்த சென்னியதாகவே காணப்படுகின்றது.

மற்றும், புறநானூற்றின் கடவுள்வணக்கச்செய்யுள் செய்திருக்கின்ற பெருந்தேவனாரோ,

'பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே"

என்று பிறை, நுதல்வண்ணமாகின்றமையையும் அப் பிறை தேவராலும் வாழ்த்தப்படுகின்றமையையும் கூறி இறைவனைப் புகழ்கின்றார்.

இவ்வாறே இப்பிறைவெண் திங்களை இறைவனது திருவுருவத்தோடு தொடர்புபடுத்தி இவர்கள் பேசுவதில் இருந்து யாமறியத்தக்க அரிய உண்மைகள் பல உள வென்று தோன்றுகின்றது. இந்நிலையில் ஒன்று நினைவிற்கு வருகின்றது.

गुणदोषौ बुधो गृह्णन्निन्दुक्ष्वेडाविवेश्वरः ।
शिरसा श्लाघते पूर्वं परं कण्ठे नियच्छति ॥

எனவரும் இது, அறிவுடையோர் கடமை இவ்வியல்பின



தென்று விளக்கி, அக்கடமையை நல்லறிவுடையோர் மேற்கொள்ள வேண்டுமென்பதையும் வற்புறுத்துகின்றது. நல்லறிவுடையோர் எவ்வெவரிடத்தும் குணம் குற்றம் இரண்டையுமே கண்டறியவேண்டுமாம். ஆனால் இறைவன் பிறையைத் தலையில்வைத்துப் பாராட்டுவது போலப் பிறர் குணத்தைமட்டும் பலரறிய எடுத்துக் கூறிப் பாராட்டவேண்டுமாம். அச்சிவபெருமான் நஞ்சை மிடற்றினுள் அடக்கிக்கொண்டு வெளிவிடாது காப்பதுபோலப் பிறர் குற்றத்தைச்சிறிதும் வெளிவிடாமல் அடக்கிக் காக்கவும் வேண்டுமாம். நல்லறிவுடையார்க்கிஃதே இயல்பாக அமைந்திருத்தல் வேண்டுமென்பதைக் கூறாமற் கூறுகின்றது இப் பொன்மொழி.

இத்தகையதோருயரிய கருத்தையே "பால் புரை பிறைநுதற் பொலிந்த சென்னி நீலமணிமிடற் றொருவன்போல" எனவரும் ஔவையார் வாக்கும் அடக்கிக் கொண்டிருக்கின்றமையுங் கூர்ந்துகாண்பார்க்குப் புலனாகும். இவ்வாறே பிறர் பிறர் சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து நன்னெறி நிற்கும் நல்லறிவுடையோனே செயற்கரிய நன்மைகள் பலவற்றையுஞ் செய்யுந்திறமை உடையவனாகின்றான். இத்தகைய நற்செயல்கள் பலவற்றையும் ஆற்றுவதாகிய பயன்கருதியே அவன் இறைவனைப்போல நீடூழி வாழவேண்டுமென்று ஔவையார் அவ்வரசனை வாழ்த்துகின்றார். அவ்வாழ்த்தினுள்ளும் அவன் நல்லறிவுடையாரது கடமைகளிற் பிழையாது நன்னெறிக்கண் நின்றே அத்தகைய நன்மைகளை விளைத்தல் வேண்டுமென்பதையும் இவ்வுவமை வாயிலாகக் குறிப்பிக்கின்றார் என்று கொள்வதுமிகப் பொருத்தமானதே. இறைவனது நெற்றிக்கண்ணையே பாண்டியனுக்கு உவமையாகக் கொண்ட மதுரை மருதனிளநாகனார்க்கும் இக்கருத்து வேண்டப்படாததன்று. 'கறைமிடற்றண்ணல் காமர் சென்னிப் பிறைநுதல் விளங்குமொருகண்' என்று அக்கண்ணைச் சிறப்பித்ததே இக்கருத்தைப் புலப்படுத்தும்.

மற்றும், இறைவன் கலைகள் நிறைந்த திங்களை அணியாமல் பிறைத்திங்களை அணிந்து கொண்டிருப்பதற்கும் தகுந்தகாரணந்தான் என் என்று சிறிது சிந்தித்துப் பார்க்குமிடத்து வேறோர் உண்மையுந் தோன்றும். திங்களுக்குச் சந்திரனென்றபெயர் மகிழ்ச்சியளிப்பதென்னுங் காரணத்தாலமைந்ததே. திங்களோ சிறு குழந்தைக்கும் இன்பமளித்து மகிழ்விக்கின்றது. பேரறிவு படைத்த புலவர்களுக்கும் இன்பமளிப்பதாகின்றது. ஆனால் இத்திங்கள் நிறைமதியாகும்போது அதனிடத்தில் மறுவொன்று காணப்படுவதன்மூலம் அது குறைபாடுடையதாகின்றது. அவ்வாறாகின்றமை "அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல, மறுவுண்டோ மாதர்முகத்து" என்றிவ்வாறு வருவனவற்றா லறியலாம். ஆதலின் இன்ப உணர்ச்சிக்கு ஊறுவிளைப்பதாய மறுவொன்று அதனிடத்துத் தோன்றாத நிலையிலேயே - நிறைமதியாகாத - பிறைவெண் திங்களாக இருக்கின்ற நிலையிலேயே அஃதும் இன்பவடிவினனாகிய இறைவனுக்கு அணியாக விளங்குகின்றது. பேரின்பவள்ளலாகிய அவ்விறைவனும் பிறைவெண் திங்கள் சூடியவனாகவே அன்பர்கட்குக் காட்சியளிக்கின்றான்.

பிறையணி சடையினானைப் பெருவேளூர் பேணினானை
நறையணி மலர்கள்தூவி நாடொறும் வணங்குவேனே

என்றவண்ணம் இப்பிறை வெண்திங்கள் சூடிய எம்பெருமானைப்பணிந்து நாமும் இணையிலா இன்பம் எய்துவோமாக.

மாலையெழுந்த மதியே போற்றி
மன்னியென் சிந்தை யிருந்தாய் போற்றி
மேலைவினைகள் அறுப்பாய் போற்றி
மேலாடு திங்கள் முடியாய் போற்றி.

---

# உள்ளும் - புறமும்.

[வித்துவான், திரு. மு. இரத்தினதேசிகர், திருவாரூர்.]

"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெருமானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே"

உலகத்துப் பொருள்களைக் கண்டு கண்டு உயிர்கள் மயங்குகின்றன - திளைக்கின்றன - இன்பங்கொள்ளுகின்றன. ஆனால் இக்காட்சியும் திளைப்பும் இன்பமும் உண்மையா என்று சிந்திப்பதில்லை. இருவினைக்கீடாய் இன்ப துன்பங்களைத் துய்த்து மெய்யுணர்வு கைவந்து இறையருளை இயைவதற்கு இறைவன் தந்தது இவ்வுடம்பு. இம்மாயா இயந்திரதனுவினுள் ஆன்மா இருந்து புறப்பொருள்களினுடைய நுகர்ச்சியையே பெறுகின்றது. தன்னுள் உயிர்க்குயிராய் இருக்கும் இறையொளியைக் காண விழைகின்றதில்லை. இப்புற நுகர்ச்சிக்குப் பயன்படுவன பொறிபுலன்களே. ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பலதொழில்களைப் புரிகின்றன. இவ்விந்திரியவயமயங்கி இறப்பதற்கே காரணமாய் உழல்கின்றன உயிர்கள். காரணம் இவற்றின் நுகர்ச்சி புற நுகர்ச்சியாயே இருந்துவிடுவதுதான்.

மெய்ஞ்ஞானிகள் நம்மைப் போன்ற யாக்கையினைப் பெற்று வாழும் நிலையில் காணப்பெற்றாலும் - அவர்களது பொறி புலன்கள் செயற்படினும் அவர்களது நுகர்ச்சி வேறுநிலையில் இருக்கின்றது. இவர்களது நுகர்ச்சி உள்ளேசென்று தாக்குவதில்லை. உள்ளே ஒளிமயமாயே காண்கின்றார்கள். அதற்கு இயையப் புறப்பொருள்களும் ஒளிமயமாயே காட்சியளிக்கின்றன இந்த நிலையில் நின்றதாலேயே மணிவாசகப் பெருந்

தகை இறைவன் தன் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்தான் என்றும், புறம் புறம் திரிந்தான் என்றும் கூறுகின்றார்கள். புறக்காட்சியும் அவர்களுக்குச் சிவக் காட்சியாகவே நிகழ்கின்றது.

இத்தகைய காட்சி ஒருவருக்கு எப்போது கிட்டும்.

"யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

என்பது தமிழ்மறை. அகங்கார மமகாரங்கள் அற்ற நிலையில் - உயிர் தன்செயல் அற்றுவிடுகிறது. யாவும் ஈசன் செயலே என எண்ணுகிறது.

"நஞ்செய லற்று இந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானே என்றுந் தீபற
தன்னையே தந்தான் என்றுந் தீபற"

என்பது ஞானவாக்கு. இதுவே சித்தமலம் அறுவித்து ஈசன் உயிர்களைச் சிவமாக்கி ஆளும்திறம். இந்நிலையில் வந்தவர்களே "என்செயலாலாவது இனி ஒன்றுமில்லை, உன்செயலாலாவதென்று உணரப்பெற்றேன்" என்று கூறுவார்கள். இந்நிலையில் இருந்து காண்கின்றவர்களே உள்ளும்புறமும் ஒன்றாக இறைவன் நிற்பதைக் காண்பார்கள். இதுபொழுது தான்வேறு இறைவன் வேறுஎன்ற வேற்றுமைஉணர்ச்சி யற்றுவிடும். இதுவே சிவோகம் பாவனை எனப்படும். இந்நிலை ஒருவருக்கு எளிதில் வாய்ப்பதன்று. உபாய நிட்டை கூடி ஆன்ம சுத்தி அடைந்தமையால்; பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என்பவற்றின் உண்மையை உணர்பவர்க்கே இந்நிலை கைவரும்.

இச்சிவோகம் பாவனையில் நிற்பவர்கள் இறைவன் திருவடியையே சிந்தைசெய்து, பெரும் சத்திகளையும் பதங்களையும் வெறுத்து, பல நெறிகளையும் பொய்யென்றுணர்ந்து இருக்கும்போது இறைவன் தானே அவருள் புகுந்து பேரின்பத்தைத் தருவான். இந்நிலையில் உள்ள



வர்களே கண்ட புறப்பொருள்கள் தான் அல்லவென்றும் - பரம்பொருள் தான் அல்லவென்றும் காண்பார்கள், தொண்டுசெய்யும் திறத்தால் தமது உள்ளத்தே இறைவனை நினைக்க; இறைவன் அவருக்கு வேறு இன்றி அத்து விதமாய்த் தோன்றுவான். கருடதியானம் செய்வோன் தானே கருடனென எண்ணும் திறத்தால் விடம் நீங்குமாறுபோல, அத்துவிதநிலையில் இறைவனை உள்ளே கொள்ளுவதால், உயிரைப்பற்றி நின்ற மலங்கள் தாமே நீங்கும். இத்தகைய பாவனையையே வேதங்கள் "அதுநான் ஆனேன்" என்று பாவிக்கச் சொல்லுகின்றன.

"கண்ட இவை அல்லேன்நான் என்றுஅகன்று காணுங்
கழிபரமும் நான்அல்லேன் எனக்கருதிக் கசிந்த
தொண்டினொடும் உளத்தவன்றான் நின்ற கலப்பாலே
சோகம்எனப் பாவிக்கத் தோன்றுவன் வேறின்றி
விண்டகலும் மலங்களெலாம் கருடதியா னத்தால்
விடமொழியும் அதுபோல விமலதையும் அடையும்
பண்டைமறை களும்அதுநான் ஆனேன் என்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே" (சித்தியார்;)

இத்தகைய நிலையில் உள்ளும் புறமும் ஒத்து நிற்கின்றவர்களே சீவன்முத்தர் எனப்பட்டுப் பேரானந்தப் பெருவாழ்வில் திளைக்கின்றவர் ஆவர்.

---

## கலித்தொகையிற்கண்ட கடவுட் காட்சி

[வயிநாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார், தேவகோட்டை]

சங்கமருவிய எட்டுத்தொகை நூல்களில் "கலித்தொகை"யும் ஒன்று. ஐந்திணைபற்றிய அகவொழுக்கங்களைத் திறம்படக் கூறும் சங்க இலக்கியங்களில் கலித்தொகை, முன்னிடம்பெறும் தன்மையை உடையது. அகத்திணை பற்றியன ஐந்தும், புறத்திணை பற்றியன மூன்றுமாக, எட்டுத் தொகைநூல்கள் இருக்கின்றன.

கலித்தொகை, கற்றுவல்ல புலவருக்குப் பெருவிருந்தாகக் கவின்தருவதனாலே, இதனைக் "கற்றறிந்தார் ஏத்தும் கலி" என்று அறிஞர்கள் பாராட்டுகின்றார்கள். கடவுளது உலகப் படைப்பில் ஆணும், பெண்ணும் கூடி மகிழ்கின்ற அகவொழுக்கத்தின் பண்புகளைத், தமது தேர்ந்து தெளிந்த அறிவினால், செய்யுட்களில்வைத்து, வெளிப்படுத்துகின்ற பெரும்பாவலரின் உதவி, கடவுளது திருவுள்ளத்தை நன்குவெளிப்படுத்தும் புறக்காட்சியாக இருந்து அளவிடமுடியாத நன்மையைத் தருகின்றது.

"அகத்துறைபற்றிய ஐந்துதிணைகளும், அவற்றைச் சார்ந்த கருப்பொருள் உரிப்பொருள்களும் கடவுளைக் காட்டும் வாயில்களே" என்பதை, ஆய்ந்தறியும் ஆற்றலுடையார் நன்கறிவர். கதிரவனின் தோற்றத்தையும், வெண்மதியின் தண்ணொளியையும், நிலத்தின் பரப்பையும், நீரின் ஆழத்தையும், நெருப்பின் வெப்பத்தையும், காற்றின் நிறைவையும், வானின் ஆழ்ந்தகன்ற உயர்வையும் கண்டோர் கடவுட்பொருளைக் கண்டவராக மகிழ்கின்றனர்.

ஐம்பெரும் பூதங்களும், கதிர்மதியாகிய வானியக்கப் பொருள்களும் உலகியல்தோற்ற நிலைகளுக்கு உதவியாயிருத்தலால், அத்தோற்ற நிலைகளின் அடிப்படைக் காரணப் பொருளாகிய கடவுட்பொருளை, அக்காட்சிப் பொருள்களுக்குள்வைத்து நுணுகிக் காணுவர் ஆன்றோர்.

எனவே, கலித்தொகையிற்காணப்பெறும் உலகியல் நெறிகளும்கூடக் கருதிநோக்குவார்க்குக் கடவுட்காட்சியாகவே தோன்றுதல் இயல்பாகும். எனினும், வெளிப்படையாகக் கடவுள் வாழ்த்தில் காணப்பெறும் சில நுட்பங்களை ஈண்டுக் காண்போம்.

கடவுள் வாழ்த்துச் செய்யுளை இயற்றிய ஆசிரியர் "நல்லந்துவனார்" என்பார். ஐந்திணைக் கலிப்பாக்களில்,



"நெய்தற் கலிப்பாக்களும் இவரியற்றினவே" என்பது முன்னை முடிபு. ஆனால், தற்கால ஆராய்ச்சியாளர்களிற் சிலர், "கலித்தொகையின் ஆசிரியர் ஐவரல்லர்; பலர்" என்று கூறுகின்றார்கள்.

கலித்தொகைக் கடவுள் வாழ்த்து, சிவபெருமானைப் பற்றியது. "சிவபெருமானது சிறப்புத் திருமேனி அருவநிலையினதாயினும் அவனது பொதுத் திருமேனி உருவநிலையினது" என்னும் தத்துவத்தை, இது நன்கு விளக்குகின்றது. வாக்குக்கும், மனத்திற்கும், காயத்திற்கும் எட்டாத கடவுள், ஆன்மாக்களுக்கு அருள்புரியும் பொருட்டு, அம்மூன்றிற்கும் அகப்படுபவனாக ஆவான் என்பது ஆன்றோர் கருத்து.

இறைவனது பலவேறு திருவுருவங்களில், உலக இயக்கத்திற்குக் காரணமாகிய சிறப்புத் திருவுருவம், ஆடல்புரியும் கூத்தத்திருவுருவமே. இதனை, விஞ்ஞானத்தில்வல்ல பேரறிஞரும் ஒப்புகின்றனர். ஒத்த அன்பும், பண்பும் உடைய ஆடவன், பெண்மகளது உலகியல் ஒழுக்கமாகிய ஐந்திணை நெறிகளைக் கூறப்புகுந்த நூலுக்கு, உலகியல் ஒழுக்கத்தை நிகழ்த்துவிக்கும் கூத்தப்பெருமானைப்பற்றிய கடவுள் வாழ்த்துக் கூறுவது, சாலப்பொருந்துவதன்றோ!

உலகத்தோற்றத்தின் முதற்பகுதி "நாதம்" என்பது. சிவமும், சக்தியுமாக இருக்கும் குணகுணிப் பொருள்கள் தொழிற்படத்தொடங்கியதும், வெளிப்படும் முதல்தோற்றம், "நாத"மாகும். "நாதாந்தத்தில் இருப்பவன் ஆண்டவன்" என்னும் கருத்து இதனைப் புலப்படுத்துவதே. அந்நாதத்தின் வடிவங்களாக வெளிப்பட்டன மறைகள்.

நன்னெறியறிந்த அருளுடையார் பொருட்டு, ஆண்டவன் வேதத்தை அருளிச்செய்தான். அது அவனது பெருங்கருணையைக் குறிப்பது. கங்கையைச் சடையில்

அடக்கியிருப்பது அவனது செயற்கருஞ்செயலைக் காட்டுகின்றது. முப்புரந் தீ மடுக்கச் செய்தது, பேராற்றலை வெளிப்படுத்துவது. கூளியோடாடியது, எனைத்தையும் வெல்லும் இயல்பை அறிவிப்பது. மணிமிடறு அழியாத் தன்மையை விளக்குவது. இவ்வனைத்துப் பண்புகளையும் உடையான் இறைவன் என்பதைக், கடவுள் வாழ்த்து முதற் பகுதியில் கூறுகின்றார்.

> "ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து
> தேறுநீர் சடைக்கரந்து திரிபுரந் தீமடுத்துக்
> கூறாமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
> மாறாப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி"

அடுத்த ஒன்பதுவரிகள், "ஆண்டவனது" கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் என்னும் மூவகைத் திருக்கூத்துக்களின் சிறப்புகளையும் கூறி, அவற்றை ஆடும்பொழுது, உடனிருக்கும் அம்மையார் கூத்திற்குத் தாயகமாகிய தாளத்தின் இறுதி, இடை, எடுப்பு என்பவற்றைக் குறிப்பனவாகிய சீர், தூக்கு, பாணி ஆகியவற்றைத் தருவாளோ என்று வினவுகின்றன.

"படைப்புத் தொழிலுக்குரிய கூத்தாட்டிலே உமையம்மையார் பாணியுந், தூக்குஞ், சீருமாகியவற்றைத் தரவும், அழித்தற் றொழிலுக்குரிய கூத்தாட்டிலே, அவற்றை அம்மையார் காப்பாற்றவும், காத்தற்றொழிலுக்குரிய கூத்தாட்டிலே அம்மையாரோடு கூடிய வடிவு கொண்டு ஆண்டவன் அருள்செய்யவும் நிகழுகின்றன" என்பது இறுதியடிகளின் கருத்து.

பதினேழு வரிகளையுடைய கலித்தொகைக் கடவுள் வாழ்த்துச் செய்யுள், "கடவுட் காட்சிக்கு இருப்பிடமானது" என்பது பொருந்தும். நூலினுட் பல இடங்களில், கடவுளைப்பற்றிய கருத்துக்கள் குறிப்பினும், வெளிப்படையினும் சிறப்புடையனவாய் இருப்பதைக் கற்று மகிழவேண்டுவது அறிஞர் கடன்.

---

# அப்பர் அறிவுரை.

திருச்சிற்றம்பலம்

> நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
> தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
> தன்க டனடி யேனையுந் தாங்குதல்
> என்க டன்பணி செய்து கிடப்பதே.

திருச்சிற்றம்பலம்.

இப்பாசுரம், பண்டைத் தவத்தின் ஒருசிறு குறை காரணமாகச் சமணசமயம் புகுந்து, பின்னர்ச் சிவபெருமான் திருவருள்என்னும் சூலைநோயினால் தடுத்தாட்கொள்ளப்பெற்ற திருநாவுக்கரசு சுவாமிகள், தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டுமென்ற கருணையினால், திருவாய்மலர்ந்தருளிய தேவாரமாகிய திவ்விய அரத்னங்களில் ஒன்று. தன்கடன் - கடவுள் கடன்; என்கடன் - ஆன்மாக்கள் கடன்.

'சைவசமயமே சமயம்' என்றும், 'சைவத்தின் மேற் சமயம் வேறில்லை' என்றும், 'இராசாங்கத் தமர்ந்தது வைதிக சைவம்' என்றும் பாராட்டப்பெற்ற சைவமாம் சமயம் சாரும் ஊழினைப் பெற்ற மெய்யன்பர்களே!

அகண்டாகாரநித்த வியாபகசச்சிதானந்தப் பிழம்பாகிய முழுமுதற் கடவுள் சோபானமுறையே தம்மை ஆன்மாக்கள் அறிந்து உய்யவேண்டி பல முறைகளையும் வகுத்தருளிச்செய்தனர். அவைபற்றியே சமயங்கள் பலவாயின. சமயம்என்பது நம்பிக்கைஎன்னும்அஸ்திவாரத்தின்மேல் உறுதியுடைமைஎன்னும் சாந்தினாலும்ஒழுக்கமுடைமை என்னும் பொருள்களினாலும் கட்டப்பட்ட

ஒரு கட்டிடமாகும். இருவினைக்கீடாக எடுத்து வரும் பிறவியினால் வருவது துன்பமேயாதலின் அப்பிறவிப் பெருங்கடலைக் கடத்தற்குப்புணையாயுள்ளது இறைவன் திருவடியேயாகும். அத்திருவடியைப் பற்றுதற்குபாயம் இறைபணிசெய்து கிடைத்தலேயாகும்.

மறுமை இன்பத்திற்கேயன்றி இம்மை யின்பத் திற்கும் கடவுள் வழிபாடுதுணையாகின்றது என்பது மேனாட்டறிஞர்களுக்கும் உடன்பாடே. 'To be of no church is dangerous' கடவுள் வழிபாடு இல்லையாயின் வாழ்க்கையில் வரும் பல துன்பங்களைக் கடத்தல் இயலாது என்பது அதன் விளக்கமான கருத்து. 'மனம் எனுந் தோணி பற்றி........' என்பது திரு நாவுக்கரசர் திருவாக்கு. 'இடுக்கண் வருங்கால் நகுக' என்றார்நாயனார். நகுதற்குபாயம் உயிர்தோறும் உயிர்தோறும்ஒளித்து நின்ற அக்கள்வனாகிய இறைவனிடத்தில் மனத்தைச் செலுத்தி வழிபடுதலேயாம். மொகஞ்சோதாரோ முதலிய இடங்களிற்கண்டபுதைபொருள்களால் நமது சைவமதத் தின் தொன்மையையும் 'விரிவிலா அறிவினார்கள் வேறொருசமயம் செய்து எரிவினாற் சொன்னாரேனும் எம் பிராற்கேற்றதாமே' எனவரும் தமிழ் மறையாலும் திருநாளைப் போவார், திருக்கண்ணப்பர், சாக்கிய நாயனார், அப்பாலுமடிச் சார்ந்தார் வரலாறுகளாலும் சைவ சமயத்தின் உண்மையையும் நன்குணர்ந்து, சிவ சின்னங்களாகிய விபூதி உருத்திராக்கம் தரித்து, சைவ ஆகமங்களிற்கூறிய விதிப்படி ஒழுகி, பேரானந்தப் பெருவாழ்வு எய்துவீர்களாக என, இப் புத்தாண்டின் தொடக்கத்தில், திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன வெளியீடாகிய ஞானசம்பந்தம் உங்கள் அனை வரையும் வாழ்த்துகின்றது.

குருஞானசம்பந்தன் திருவடி வாழ்க.

---



தாக மிகுந்து தவித்துமனந் தத்தளித்துச்
சோக மிகுந்து துயில்கூர்ந்தேன்—வேகமாய் 259

## தலைவன் தலைவியைக் கனவிற்காணுதல்

மைப்படியுங் கண்ணியெனை வாழ்வித் திடத்தானே
வெப்படியோ வென்கனவி லெய்தினாள்—எப்பொழுதே 260

கண்ணாரக் கண்ட கனவை நனவென்வே
பெண்ணா ரமுதுடனே பேசினேன்—மண்ணுலகிற் 261

றேடாமல் வந்த திரவியமே செங்கதிர்க்கு
வாடாத மந்தார மாலிகையே—வீடாத 262

புத்தமுத மிட்டுவைத்த பொற்குடமே யிந்த்ராணி
முத்தமிட்டு முத்தாடு முத்தமே—மெத்தெனவா 263

வட்டிசொல்ல வேண்டாமெ னம்புபட்ட காயமெல்லாங்
கட்டிவிட லாகாதோ காரிகையீர்—பட்டதெலாஞ் 264

சொன்னேன் மலர்த்தா டொழுதிரந்தேன் சோலையில்வாழ்
மின்னே யினியிரங்க வேணுமென்றே—னன்னேரஞ் 265

சற்றே நகைத்தார் தமியேனு மங்கையைக்
குற்றேவல் கொள்ளுங் குறிப்பிதுவென்—றுற்றறிந்து 266

கையி லணைத்துக் கனிவாயின் முத்தமிட்டுப்
பைய விதழைப் பருகினேன்—மையலாற் 267

றாறுபட்ட தல்லாமற் றோகைதனைத் தோயுமுன்னே
வேறுபட்டே னென்கண் விழித்துவிட்டே—னூறுபட்ட 268

## மடலே பொருளெனத் துணிதல்

தேன்காவும் பூங்காவுஞ் செய்யகுன்ற முந்தேடி
நான்காணே னின்று நடுங்கினேன்—னான்பாவி 269

காணக் கிடையாத காமக் குலக்கொழுந்தைப்
பூணக் கிடையாத பூரணத்தைக்—காண 270

மடந்தையர் முன்னே மடல்பெற்றாற் பூவை
யடைந்திடலா மென்ப தறிந்தேன்—றொடர்ந்த 271

கரும்பனை வாழ்த்தியிரு கைதொழுது வேறோர்
கரும்பனை வெட்டிக் கடிந்து—பெருந்தெருவி 272

லோட்டும் படிக்கங் கொருகுதிரை யுண்டாக்கிக்
காட்டுங் கருக்கே கலையாய்—நாட்டிலொரு 273

பெண்ணை விரும்பிப் பிழைபட்டார் பின்னுமொரு
பெண்ணை விரும்பிற் பிழையாமோ—வெண்ணியவென் 274

னுள்ளறிவு மேல்வந் துதித்தேநல் வெண்ணீற்றை
யள்ளியுடம் பெல்லா மணிந்துகொண்டு—தள்ளரிய 275

காமக் கடுந்தழலிற் காட்டுங் கொழுந்தெனவே
தாம முடியிற் சடைபுனைந்து—காமுகர்செய் 276

புண்ணிய வேடமுஞ் சாதனமும் பூண்டெருக்கங்
கண்ணியொடு பூளை கலந்தணிந்து—நண்ணரிய 277

வேந்திழையா லங்க மெலும்பானே னென்றுசொல்ல
வாய்ந்த பழுவெலும்பு மாலிகையு—மேந்தியே 278

தானாடு மானந்தத் தாண்டவனைப் போலவே
நானா விதமு நலஞ்சிறந்து—மீனாரும் 279

விண்ணுலகும் வீணைபயில் வித்யா தரருலகு
மண்ணுலகுங் கூடிவந்து வாழ்த்தெடுப்ப—வெண்ணரிய 280

பார்த்திபரின் மோகபரி பாலனன்வந் தானெனவே
யேத்துதயிற் சின்ன மெடுத்தூதப்—பூத்தமலர்க் 281

காவுந் திருமதிலுங் கண்ணகனற் கோபுரமு
மேவுஞ் சிராப்பள்ளி வீதிவரத்—தாவுதிரை 282

வாரி நடந்தாலு மாரி பொழிந்தாலுங்
காரிவிட முள்ளே கலந்தாலுஞ்—சோரிவிழக் 283

கைநாகம் பாய்ந்தாலுங் காய்புலிமுன் னேர்ந்தாலும்
பைநாக மேதீண்டப் பட்டாலு—மெய்நடுக்க 284

மில்லாம லுள்ள மிரங்காமற் காமகலை
வல்லார்முன் னூர்வேன் மடல் 285

தாயுமானவர் மடல் முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்

# தாயுமானவர் மடல்

## குறிப்புரை

### காப்பு

தையல் - மட்டுவார்குழலி. (162 கண்ணி.) ஐமுகத்தான் - சிவபெருமான். நத்தான் - சங்கேந்திய திருமால். அயன் - பிரமன். வந்திக்கும் - வணங்குகின்ற; புகழ்கின்ற எனலுமாம். கைமுகத்தானத்தான் - துதிக்கையோடு பொருந்திய முகத்தையும் மதத்தையுமுடைய விநாயகன். கழல் - திருவடிகள். கழல் மடலைச் சிறப்பிக்கும் எனக் கூட்டுக.

### நூல்

1. சீர் - மங்கலச்சொல், சிறப்பு. தார் - மாலை, படை. தானவர் - அசுரர். (தனு என்பவளிடமிருந்து தோன்றியவர்.)

2. மோகினியாய் - மோகனப் பெண்வடிவாய். சென்ற - (ஒருவருக்கும் அகப்படாமற்) போன. ஓடி - விரைந்துசென்று. சிவனோடியன்றந்த என்பதன் பிரதிபேதம் சிவனோடியன்றுவந்த என்பது.

3. அவள்வாகு - அம்மோகினியின் தோள்களை. அணியும் - அணிந்த (தழுவிய.) முன் - முன்புநிகழ்ந்த. ஓர் வரன்முறையும் - ஒரு வரலாற்றை யறிந்தும். போகம்விட்ட - பெண்போகத்தை வெறுத்துவிட்ட. கண்ணுற்று என்பது கண்ணுதலோன் எனவும் படுத்தியவள் என்பது படுத்தியவன் எனவும் பிரதிபேதம் வழங்குகிறது.

4. கோரணி - பழிப்பு. போரணிய - போர்தொடுக்கும்பொருட்டு. பூமாது - அழகுவடிவமாகிய பெண். பூ - பூமியுமாம். (3-4) மோகனப் பெண்வடிவில்வந்த திருமாலாகிய ஆடவனைச் சிவபெருமானே விரும்பித் தழுவினன் என்னும் வரலாற்றுண்மையை யறிந்திருந்தும் தாரணியோர் போகத்தைவிட்ட கோரணியைக்கண்டு மனம் கொள்ளாமல் போரணிய வந்துதித்த பூமாது எனக் கூட்டுக. தாரணியோர் - பூமியிலுள்ளவர்.

5. மலையாத - போரிடுதலில் தடுமாற்றமடையாத. வில் வேள் - கருப்புவில்லையுடைய மன்மதன். கனகாபிடேகம் - இரத்தினக்கிரீடம். மன்மதனும் தலைமேல்வைத்துப் போற்றத்தக்க பேரழகுடையவளாதலின் தலைமகள் வேள்மணிமகுடம் கனகாபிடேகம் எனப் பெற்றாள்.

6-7. மன்மதன் படையாய்ச் சேவைபுரியும் மகளிரெல்லாருள்ளும் இவள் ஒருத்திமட்டும் கைகுவித்துத் தொழாமலும், நாக்குழறத் துதியாமலும், சேவைசெய்யாமலும் மன்மதன்முன்னின்று (செங்கோல்செலுத்தும்) தெய்வமாவாள் எனப் பொருள்காண்க. செவியாமல் - சேவைபுரியாமல்; குறுக்கல்விகாரம்.

8. லோகாயதம் - உலோகாயதமதத்தினர்களால். அமைய-ஒருசேர. கொண்டாடி - பாராட்டி. "புவியனைத்து முண்டாகவே யமைத்த" என்பதனால் உலோகாயதமதத்தின் பயன்றெரிவிக்கப்பட்டது. இம்மதத்தினர், நிலம் நீர் தீ வளி எனும் நான்குமே தத்துவங்களென்றும், உடம்பே உயிர் என்றும், மகளிரின் ஊடலையும் ஊடல் தீர்க்கும் வழிகளையும் அறிவதே கல்வியென்றும், ஊடல் தீர்க்கும்பொருட்டு மகளிர் அடியிணையில் வீழ்ந்து வருந்தி வணங்கிக்கிடப்பதே தவமென்றும், ஊடல்தீர்ந்த மகளிரைக் கூடி இன்பமுறுவதே முத்தி என்றும் கூறுபவர்.

9. தமிழ்ப் பொன்மலை - (அகத்தியரிருந்து) தமிழ்வளர்த்த அழகிய பொதியமலை. "சந்தம் பொதியத் தமிழ் வரையாய்" (76 கண்ணி.) தமிழாகிய அழகியமலை யெனினுமாம். பொற்பூடு - இது சிறந்த மூலிகை வகைகளில் ஒன்று. இது சார்ந்ததைப் பொன்மயமாக்குவது.

10. அடிமுதல் முடியின்காறும் அளவிலாச் சுவைபயப்பது தலைவியாகிய கரும்பு. அடியிலும் நுனியிலும் சுவைவேறுபாடுடையது கரும்பு.

11. பூ - மலர்களை. விட்டெறிந்து - வீசி. கீற்றுமதி - பிறைச் சந்திரன்.

12. வாரி - கடல். அத்திவிழி (77 கண்ணி.) பாவையனையவிழி (258 கண்ணி.)

13. கும்பாத - எரிப்பில்முதிர்ந்துபோகாத. பஞ்சபாணம் - "அசைவிலா வனசஞ்சூத மசோகமே முல்லை நீலம், ஓசிபும் வேள்கணைகளாகும்" (சூடாமணி.)



14. போர்மகள் - துர்க்கை. நாகரிகம் - சாதுரியமுடையவள்.

15. மோக அந்தகாரம் - காமமாகிய இருட்டு: உருவகம். ஆவேசம்- ஆவிவடிவமுள்ளவள்; வெறியெனினுமாம்.

17. விட்டு - இடைவிட்டு. அதிரும் மேகமென்க.

18-19. மோகவசந்தன் - காமத்தை மிகுவிக்கும் தென்றல்.

20. கவலாமல் - கவலை கொள்ளாமல். அன்னையர் - செவிலித்தாயரின். கைக்கூட்டில் - கையணைப்பில்; கூட்டினுள் என்பது தொனி.

21. தொட்டால் - தீண்டினால். அலரும் - மகிழ்ச்சிமிகும்; பழிச்சொல் மிகும் என்பது தொனி. பரிகரித்து - நீக்கி. தேறல் - மது.

22-25. சிவன் மன்மதனை எரித்தகாலத்தில் அவனது, எஞ்சிய சிலை முதல் பரியீறாகவுள்ளவற்றைத் தனக்குறுப்பாக்கி உயிர்கவரவந்த பெண் கூற்றமிவள் என்க.

22-25. சிலை - கரும்பு; தோள்; கணை; - அம்பு; கண் .மன்மத பாணங்களில் தாமரை முகம், முல்லை பல், குவளை கண், மாவுமசோகும் மேனி. தூணி - அம்புப்புட்டி; கணைக்கால். முடி - கொங்கை. குடை - சந்திரன்; முகம், கரி - யானை, இருள் கூந்தல், அரி - தேர்; தென்றல் இடை. பரி - குதிரை. கிளி - மொழி. 'இயம்புமொழிகிள்ளை' இரத்தினச்சுருக்கம்.

26. கலைவிரித்தல் - நூற்பொருளைவிவரித்தலை. நாள்-தினந்தோறும்.

27. முதல் 40 வரையிலும் கூந்தல் வருணனை. கொன்றை - கொன்றைக்காய்; முதலாகு பெயர். காலால் - காலினால், காற்றினால்.

28. காயா எனவே கறுத்து - காயாமலர்போலக் கருநிறமடைந்து. காயாமலரென்று சொன்னமாத்திரத்தில் கோபம்கொண்டு. சைவலம் - நீர்ப்பாசி.

29. இரவை இர என்று - இராப்பொழுதை யாசி என்று சொல்லி. இந்தீவரம் - கருங்குவளை. மாபு - வமிசம்.

30. வெறலை - வண்டு. இரைய - அலறும்படி. அறலை - கருமணலை.

31. சொல்லிய - உவமையாகச் சொல்லப்பெற்ற. காவனம் - சோலை, கண்ணீர் - கள்ளாகிய நீர், கண்ணின் நீர்.

32. சூழியம் - மயிர்முடி. சூழியக்கொண்டை - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. சூல் - கரு, கொண்டையிற் சூட்டிய முல்லை மலருக்கு மேகத்தினிடத்தில் தோன்றும் சந்திரன் உவமையாம்.

33. அமளிபொருந்தினால் - வெண்மையாகிய மெத்தையின்மேற் பொருந்தினால், மெத்தையினிறம் வெண்மை. மால்போன்றும் - திருமாலை ஒத்தும்.

34. கூருகிர் - கூர்மையான நகம். பின்வாங்கி - பின்பக்கமாக இழுத்து; பின்னலையெடுத்து எனினுமாம். கொங்கை மயில்; இல்பொருளுவமை.

35. தழுவணை - தலையணை, இது நீள்மலைக்கு உவமையாம்.

36. கிடந்தாள் என்பதைக் கிடந்தால் எனத் திருத்துக. சடைக்கு அரா உவமை. அரா - கரும்பாம்பு.

38. கடைகுழன்று - கடைசுருண்டு; "கண்ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள்" சிந்தாமணி (164) நோக்குக

41. பண்கால் அறுகால் - பண்பாடுகின்ற வண்டுகள். தண்கா - குளிர்ச்சியாகிய சோலை. உகுத்த - சிந்திய. தாது என - மகரந்தத் தூள் போல.

4?. சிந்தூரம் - நெற்றிப்பொட்டு. கோலத்தாள் - அழகுடையவள். சிந்தூரத்திற்குத் தாதுவும் மின்னலும் உவமை.

43. கத்தூரித் திலகம் - கஸ்தூரிப்பொட்டு; சிந்தூரத்தின் கீழிடுவது; அது கருநிறமுடையதாயிருக்கும். நிலா - சந்திரிகை.

44. வாக்கும் - சொரிகின்ற. வளராப்பிறை இது - வளர்ச்சியில் மாறுபாடடையாமல் ஒருதன்மைத்தாயிருக்கும் பிறைச்சந்திரனாகியஇது. என்று-உவமையாகுமென்று. சிறியநுதலினாள்-சிறியநெற்றியையுடையவள்.

45. புருரத்தாள் - புருவமுடையவள்.



46 போர்வேள்தன் - காமப்போர்புரியும் மன்மதனுடைய. மிருகப் போர்புரியும் வேடன் என்பது தொனி. கண்ணி - பறவை முதலியவற்றை அகப்படுத்தும் கயிறு. வலை வேடன் கண்ணி இவற்றின் நயம் காண்க. நோா - (உயிரை உடம்பில் விட்டுவைப்பதற்கு) உடன்படாத. மறலிவிட்ட சீட்டு - யமன் அனுப்பிய ஓலைச்சீட்டு; பாசமுமாம்.

49. சுரும்பு - வண்டு. கரும்புரம் - கரியஉடல்.

50. பயப்படுத்தி - பயப்படச்செய்து. நீரிலகப்படச்செய்து. பயம் - அச்சம், நீர்.

51. நாணுக்குள்ளாக்கி - நாண்கயிற்றில் கிடக்கச்செய்து. வெட்கத்திற்குள்ளாக்கி. கடைப்படுத்தி - கடையப்படச்செய்து. கடைசியாகச் செய்து. "கடைப்பட்டதே" அருணைக்கலம்பகம்.

55. உயிர்ப்பினாள் - மூச்சினையுடையவள். கண்டு - கற்கண்டு.

58. ஆன் - பசு. ஆலை - கரும்பு. இதழ் - உதடு.

59. முருந்து - மயிற்றோகையின் அடி. சிறைப்படுத்தி-சிறகுடையதாக்கி; சிறையிலகப்படச்செய்து என்பது தொனி. தூறு ஆக்கி - சிறுபுதரிலிருக்கச்செய்து; அவதூறு (பழிச்சொல்) அடையும்படிசெய்து என்பது தொனி. விலைசெய்து - விலைப்படுத்தி.

60. தமிழ்க்கூடல் - தமிழ்வளர்த்த மதுரை. "கூடலினாய்ந்தவொண்டீந்தமிழின் துறைவாய்" (திருக்கோவையார்). புராதனி - பழையோள் (கயற்கண்ணி). அங்குரித்து - வெண்மையாக முளைத்து.

61. வல்கரை - வலியகரை. இவரும் கல் - வளர்கின்ற கல்.

62. முத்தீன்றபூகம் கழுத்திற்குப் பொருந்திய உவமையாதலின் "காயாதுபார்க்கும் கழுத்தினாள்" என்றார்.

64. திவவின் - கட்டினால். மூய்த்தசரி - நெருங்கிய வளையல்கள்.

65. மணி ஆழி - (சூரியகாந்த) மணி பதிக்கப்பெற்ற மோதிரம்.

66. அம்புயம் - தாமரை.

67. கபோலம் - கன்னம்.

68. கோட்டம் அற - குற்றம் நீங்க.

69. சேந்த - சிவந்த. இரதிகாந்தன் - மன்மதன். மதிக்குடை - சந்திரனாகிய குடை. முகத்தினுக்கு மதியும் விரலினுக்குக் காம்பும் உவமானம்.

70. பிரவாளம் - பவளம். துணித்து - துண்டித்து.

71. யானை மதத்தில் வண்டுகள் மொய்க்குமென்பது காண்க. உகிர் - நகம். களபம் - சந்தனக்குழம்பு.

74. கற்பூரத்தால் - பச்சைக்கருப்பூரம் பூசுவதால்.

75. பனிவரை - இமயமலை.

76. பொதியம் - பொதியமாகிய தமிழ்வரை - (அகத்தியனார்) தமிழ் வளர்த்தமலை. 9ம் கண்ணி நோக்க. அன்றியும், சந்தம்பொதி - இசையோடு பொதிந்துள்ள. அ தமிழ்வரை - அந்தத் தமிழாகியமலை எனப் பொருள் கோடலுமாம். தமிழ் மலைபோலச் சிறந்து அளக்கலாகாத பொருள்வளமுதலியவற்றை யுடைமையின் தமிழை மலையாக வுருவகம்செய்தார் என்க

77. அத்திவிழி - கடல்போன்ற கண்கள் 258ம் கண்ணி.

80. தானவரை எல்லாம் தலை அழித்திடல் என்பது வானவர், தானவராகிய எல்லாவசுரர்களுடைய அதிகாரங்களையுமழித்தல் எனவும், முலைகள் விசாலமாகிய மலைகள் எல்லாவற்றினுமுடைய உயர்ச்சியையும் கெடுத்தல் எனவும் சிலேடைப் பொருள்தரல் காண்க. தானவரை - அசுரர்களை. தானம் வரை - இடமகன்றமலை. தலைமை - அதிகாரம்; உயர்ச்சி.

82. சுணங்கு - தேமல். துதைந்து - நெருங்கி.

87. வண்டு - முலைக்கண்; உவமையாகுபெயர். "கோங்கரும்பின் மீது குடியிருக்கும் வண்டெனவே யோங்குமுலைக்கண்". (36ம் கண்ணி) அலராத - விரியப்பெறாத. வனம்முலை - அழகியமுலை. துகில் - விருதுக் கொடி. தொயிலெழுதும் எனும் பாடம் சிறக்கும்.

91. தூமகேது - தீக்கோள். இதனைத் தமிழில் புகைக்கொடி என்பர். "மைமீன் புகையினும் தூமம் தோன்றினும்" எனவரும் நானூற்றுச் செய்யுளடியில் "தூமம்" என்றது இதனையேபோலும். இது தோன்றின் உலகிற் றீங்குமிகுமென்பர். "தூமகேது புவிக்கென" (கம்பர்) பாடாதவண்டு - வளையல்; வெளிப்படை.



93. அங்கை - அழகிய கை. கழை - மூங்கில்.

94. சலாகை - இருப்புக்கோல். சலாக்கு என்பது உலகவழக்கு, புலவர்பால் ஆசிரியரன்பு புலனாகின்றது.

95. அந்தாதி - நின்றசெய்யுளின் இறுதி முதலில்வரப் பாடுவது. "அந்தமுதலாத் தொடுப்ப தந்தாதி" காரிகை.

97. கேசம் - கூந்தல். வேதா - பிரமதேவன்.

98. நிலமுதலிய ஐம்பூதங்களும் ஆகாயத்திலடங்கியிருக்கும். ஆர் - சிறப்புவிகுதி. காயம் - ஆகாயம்.

99. சுழி - சுழல். வாங்கிக்கொண்டது - கவர்ந்துகொண்டது.

100. கரும்பாந்தள் - கரும்பாம்பு.

103. உரிப்பித்து - தோலுரியச்செய்து.

104. அரசை - அரசிலையை. குறைபட்டன - வெட்டப்பட்டன; குறைபாடுடையன. அல்குலுக்கு உவமிக்கப்படும் பொருள்களில் மான் குளம்பும் ஒன்று.

105. பட்டு ஆலவட்டம் - பட்டினால் இயன்ற ஆலவட்டம் என்னும் ஒருவகை விருது.

106. ஆசை - திக்கு; விருப்பமுமாம். சலராசி - கடல்.

107. சாரம் - சத்து; மேலேறக் கட்டிவைத்த மரம் (கட்டுமரம்.) சாரமுனி - பூமியிற் செவந்திவனம் வைத்துத் தாயுமானவரைச் செவந்திப் பூவால் வழிபட்ட முனிவர்.

108. நம்பன் - தாயுமானேசுவரன். "நம்பனே யுனை நான் மறக்கினும்" (தேவாரம்.)

110. வாரி - கடல். மிதவை - தெப்பம்.

111. மதாரி - மதயானை. கை - துதிக்கை. கரிக்கை - கரிந்தகை; என்பது தொனி. கோதுபடுத்தும் - குற்றமுடையதாக்குகின்ற. குறங்கினள் - தொடையையுடையவள்.

113. வரால்மீன் கணைக்காலுக்கு உவமிக்கப்படுமவற்றுள் ஒன்று. உவமையிட - உவமையிட்டுச் சொல்வதற்கு. ஒருவரால் (ஒருமனிதராலும்) ஆகாது. இருவரால் (இரண்டுவரால்) ஆம் எனினும் - ஒப்பாகுமெனினும் வலாது. இதில் திரிபு என்னும் சொல்லணி காண்க.

114. உருவிலி - மன்மதன். வாமம் - அழகு. மயன் வகுத்த - தேவதச்சன் உண்டாக்கிய. தூணி - அம்புப்புட்டி.

115. பரடு - காலின் இருபுறத்தும் சிமிழியின் செப்புப்போல உருண்டை வடிவமாயுள்ள உறுப்பு.

118. அண்ணல் - பிரமதேவன்.

119. ஓதிமம் - அன்னம். சீரடி என்பது பாடமாயின் சிறிய பாதங்கள் என்பது பொருளாம்.

121. சடாடவி - சடைக்காடு. அறுக சிறுக அருந்தி - அறுகம் புல்லைக் குறையும்படியாகக் கறித்து.

123. கோளரிபோல் - கொலைத்தொழிலையுடைய சிங்கம்போல.

124. பொசிப்பு - உணவு. முடைத்தலை - முடைநாற்றம்வீசும் தலை.

125. அம்மை - பார்வதி. கொம்மை - குவிவு. கை மலை - (சிவபெருமானுடைய) கையாகிய மலையில்.

127. ஏனம் - வராகம். மருப்பு - கொம்பு.

128. படப்பாந்தள் - படநாகம். பதத்தான் - பாதங்களையுடையவன்.

129. பூவின்கொடி - இலக்குமி. நிலக்கொடி - பூமிதேவி. விடைக்கொடி - (திருமாலாகிய) இடபக்கொடி.

130. செவ்வந்தி, இத்தலத்திற்குரிய சிறப்புமலராகையால் இது முன்பும் கொன்றை பின்பும் கூறப்பட்டது.



131. ஈராயிரங்கோட்டுஇபம் - இரண்டாயிரம் கொம்புகளையுடைய யானை. அயிராவணமென்னும் பெயர்பெற்றது, "நிரைநிரை, ஆயிரம் வருத்த மாயிருமருப்பின், வெண்ணிறச் செங்கண் வேழமும்" என்பர் பட்டினத்தடிகள்.

132. பரியான் - வேதக்குதிரையை யுடையவன். சதுமறையோன் - பிரமன். எயினர் - வேடர்.

135. மும்முரசு - கொடைமுரசு, மணமுரசு, வெற்றிமுரசு என்பன. 'மும்முரசமுமதிர் காவிரிநாடன்' குமரகுருபரர்.

137. சென்னியர்கோன் வளவன் என்றது சோழர் தலைவனாகிய கரிகாலனையாம். 'கண்டன்கரிகாலன் காவிரிசூழ் நன்னாட்டில்' 182 கண்ணி.

138. காவிரி காலமறிந்து வருதலை. "ஆர்புனை வளவர்நாட்டினிற் காலமறிந்து வந்துதவிடும் பொன்னி" என்பதனாலுமறிக. (திருவிடைமருதூர்ப்புராணம்).

139. புகார்நகர் - காவிரிப்பூம்பட்டினம். வணிகன்-அரதனகுத்தன். மகள் - அரதனகுத்தி.

140. இப்பதி - திரிசிராப்பள்ளி. 136-164-282 கண்ணி நோக்குக.

141. "இரதியுமதனனு மியைந்தவாறென" ஒப்பு (செவ்வந்திப் புராணம், 'காவிரியின் பிரவாகத்தினாலே தாய்வரத்தடையுற்றனளாதலின்" அன்னையிலாமலழுதனள் என்க.

142. அன்னையிலாதான் - சிவபிரான். "தாயிலியாகுஞ் சிவபெருமான்" (நால்வர் நான்மணி மாலை.)

143. காயம் - பெருங்காயம். கடைச்சரக்கு - சுக்கு, திப்பிலி, மிளகு முதலியன.

144. வழிச்சோறு - கட்டமுது.

145. சுமை - சுமையெடுக்கும் பெண்கள்.

147. மேல் - முதுகு.

## தருமபுர ஆதீன மகாசந்நிதானத்தின் ஜன்மநக்ஷத்திரம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானத்தின் மாத ஜன்மநக்ஷத்திர தினமாகிய 16—3—49 அன்று திரு நெய்த்தானம் நெய்யாடியப்பர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனை நடத்துவித்துத் தலப் பதிகவெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. 13—4—49 அன்று திருக்கண்டியூர் வீரட்டானேசுவரர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனை நடைபெறும். பதிக வெளியீடும் வழங்கப்பெறும்.

## ஏகதின லக்ஷார்ச்சனை

திருநள்ளாறு ஸ்ரீ தெர்ப்பாரண்யேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 19—3—49 அன்று தருமபுர ஆதீன மகா சந்நிதானமவர்களின் திருவுள்ளப்பாங்கின்படி நடைபெற்றது. ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களும், ஆதீனக் கல்லூரி ஆசிரியர்களும் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

2—4—49ல் மாதிரிகிராமமாகி விளங்கும் தருமபுர ஆதீனத்தைப் பார்வையிடவந்த மாயூரம் முனிசிபல் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் ஆசிரியர்கள் உள்பட சுமார் ஐந்நூற்றுவர்க்குச் சிற்றுண்டிகள் அளித்து ஆதீன வெளியீடுகளும் வழங்கப்பெற்றன.

மதிப்புரை.

## விரோதி வருஷ வாக்ய பஞ்சாங்கம்

ஒரிஜனல் மருத்துவக்குடி பஞ்சாங்கம். இப் பஞ்சாங்கத்தில் பஞ்ச அங்கங்களேயல்லாமல், சோதிடக்காரர்களுக்கும் பயன்படக்கூடிய பல அரிய விஷயங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவர் கையிலும் இருந்து சிறப்பிக்கக்கூடிய இதன் விலை அணா ஆறுதான். தபாற்கூலி வேறு: [ விலாசம் G. S. வெங்கட்டராமையர் ஜோதிஷர், மருத்துவக்குடி, ஆடுதுறை P.O.]


Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayavaram) 9—4—1949.

# ஞானசம்பந்தம்

694

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு.

இதழாசிரியர்:- தருமபுர ஆதீனம், நாகலிங்கத் தம்பிரான்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS 10 JUN 1949 MADRAS

தருமபுர ஆதீனம் ஞானபுரீசுவரர் ஆலயம்

8—5—1949 துவஜாரோகணம்

12—5—1949 சகோபுர தரிசனம்

14—5—1949 திருக்கல்யாணம்

விரோதி - சித்திரை

உ

குருபாதம்

# திருமுறைத் திருவிழா

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி தேவஸ்தானத்தில் 2—5—49 திருமுலைப்பால் அன்று தொடங்கி ஆறுநாட்களில் நடைபெற்றது. பெருநிலக்கிழார், திரு. S. சுப்பராய முதலியார் அவர்கள் தொடக்கவிழாப் பேருரை நிகழ்த்தினார்கள். ஜில்லாமுன்சீப், திரு. C. N. சிவசங்கர முதலியார் அவர்கள் 7—5—49 ல் நிறைவுவிழாப் பேருரை நிகழ்த்தினார்கள். அன்று பெருநிலக்கிழார் திரு. கிருஷ்ணமூர்த்தி முதலியார் அவர்கள், அவ்வூர் ஆசிரியர் திரு. சுப்பிரமணியஐயர் அவர்கள் ஆகியோர்கள் விழாவின் இன்றியமையாச் சிறப்பினைப்பாராட்டிப் பேசினார்கள். நகரவாசிகளின்சார்பில், திருமுறை விழாவைச் சீகாழியில் நடத்திவைத்ததற்காக ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்குப் பாராட்டுரை ஒன்றை, பெருநிலக்கிழார் திரு. சீனுவாசமுதலியார் அவர்கள் வாசித்தளித்தார்கள். அன்றுமாலை தமிழின்னிசைவாணர்கள் திருமுறையோதி முன்செல்ல, திருமுறை வீதிஉலாக் காட்சியும் நடந்தது.

2—5—49 ல் பாலகவி, திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் **பிள்ளை திருமுறை**, 3—5—49 ல் காஞ்சீபுரம் வித்துவான், திரு. சி. அருணை வடிவேலு முதலியார் அவர்கள் **அரசர் திருமுறை**, ஆதீனக் கல்லூரி மாணவர், S. தண்டபாணி **வள்ளுவரும் சமயமும்**, 4—5—49 ல் காஞ்சீபுரம், திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் B.A., L.T. **தோழர் திருமுறை**, தருமபுர ஆதீனச் சித்தாந்தப் பேராசிரியர், திரு. மீ. சுந்தரம் பிள்ளை அவர்கள் **திருக்கோவையார்**, 5—5—49 ல் திருவாசகம், திரு. K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் B.A., B.L. **மணிமுறை**, வேலூர் G. இராமச்சந்திரன் **இசைப்பா திருமுறை**, 6—5—49 ல் தருமபுர ஆதீனக் கல்லூரிப்பேராசிரியர், வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் **திருமூலர் திருமுறை**, திருவையாறு திருமதி. கரும்படுசொல்லி அம்மையார் அவர்கள் **அம்மையார் திருமுறை**, திருவையாறு வித்துவான், திரு. S. சுந்தரேசவாண்டையார் அவர்கள் **மதிமலி திருமுறை**, 7—5—59 ல் சென்னை விவேகானந்தர் கல்லூரி ஆசிரியர், திரு. மா. இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள் B.O.L., L.T. M.O.L. **புராணத் திருமுறை** ஆகிய சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. முதல்நாள் விழாவில் அண்ணாமலை நகர் ரிஜிஸ்ட்டார், திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் பேச்சும் நிகழ்ந்தது. சீகாழி கட்டளை விசாரணை ஸ்ரீமத் கந்தசாமித் தம்பிரான் சுவாமிகள் உபசாரமொழிப் பணியில் ஈடுபட்டனர். மாஜிமந்திரி கனம் அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள், சென்னை கனம் மேயர், கோவை திரு C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள், டாக்டர் திருமூர்த்தி அவர்கள், கரந்தைக் கவியரசு அவர்கள், 'தொண்டன்' ஆசிரியர், திரு. K. ஆறுமுகநாவலர் அவர்கள், வித்துவான், திரு. T. P. பழநியப்பபிள்ளை B.O.L., அவர்கள் உள்ளிட்ட பல பெருமக்களிடமிருந்துவந்த செய்திகளும் அவையில் படிக்கப்பட்டன.

OFFICE ... MADRAS
10 JUN 1949

உ

குருபாதம்

## தருமபுர ஆதீனம், ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில்

## மஹோத்ஸவ நிகழ்ச்சிகள்

நிகழும் விரோதி௵ சித்திரை௴ 26-ம் நாள் (8—5—49) ஞாயிற்றுக்கிழமை தொடங்கி நடைபெற்று வருகிறது. 8—5—49 துவஜாரோஹணம்; 9—5—49 கற்பகவிருக்ஷக்காட்சி; 10—5—49 பூதம் பூதகி இடும்பு வாகனக்காட்சி; 11—5—49 நந்தி காமதேனு குதிரை வாகனக்காட்சி; 12—5—49 சகோபுர இடபவாகனக் காட்சி; 13—5—49 யானை அன்னம் ஆட்டுக்கடா வாகனக்காட்சி; 14—5—49 திருக்கல்யாணம்; 15—5—49 குதிரை கிளி யானை வாகனக்காட்சி; 16—5—49 திருத்தேர்; 17—5—49 தீர்த்தம்.

### முதல் திருநாள்; சித்திரை௴ உசூவ ஞாயிறு (8—5—49)

குடந்தை வாணுதுறை உயர்தரப்பள்ளி ஆசிரியர்,
**திரு. எஸ். சுந்தரேசஞ் செட்டியார் அவர்கள் B.A., L.T.,**
**'மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்'**

பழநி, தருமபுர ஆதீனச் சைவ சித்தாந்த சரபம்,
**சிவஸ்ரீ. காசிவாசி, ஈசானசிவாச்சாரியார் அவர்கள்**
**'சைவ சித்தாந்தத் தனிச்சிறப்பு'**

## 2-ந் திருநாள்; சித்திரைமீ உஎவ திங்கள் (9—5—49)

குறுக்கை தேவஸ்தானம் கட்டளை விசாரணை,
**ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்**
'வேண்டுவதொன்று'

திருக்கோவிலூர்,
ஸ்ரீமதி. அலமேலு சகோதரிகள் & பார்ட்டி
**இன்னிசைக்கச்சேரி**

## 3-ந் திருநாள்: சித்திரைமீ உஅவ செவ்வாய் (10—5—49)

திருவாவடுதுறை ஆதீனவித்துவான்,
**திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்**
'சமயத்தொண்டு'

நாகை, தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர்,
**வித்துவான், திரு. வை. மு. சண்முகதேசிகர் அவர்கள்**
'ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி'

தஞ்சை,
ஸ்ரீ M. தியாகராஜன் & பார்ட்டி
**இன்னிசைக்கச்சேரி**



OFFICE OF THE REGISTRAR OF BOOKS 10 JUN 1949 MADRAS

## 4-ந் திருநாள்: சித்திரைமீ உகூவ புதன் (11—5—49)

மாயூரம் குமரக்கட்டளை கட்டளை விசாரணை,
**ஸ்ரீமத். மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள்**
'வாய்மைமொழி'

சென்னை, தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர்,
**வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள்**
'எல்லாக் கனியினும் இனியகனி எது?'

மன்னார்குடி, தருமபுர ஆதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர, பாகவதர்,
பிரம்ஸ்ரீ S. விஜயராகவாசாரியாரவர்கள் & பார்ட்டி
**'குருஞானசம்பந்தர்' கதாகாலக்ஷேபம்.**

## 5-ந் திருநாள்: சித்திரைமீ ஙமவ வியாழன் (12—5—49)

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்,
**வித்துவான், திரு. ஜி. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் M. A., B. L.,**
'எழுதுமறைத் தமிழ்'

சீகாழி தேவஸ்தானம் கட்டளைவிசாரணை,
**ஸ்ரீமத். கந்தசாமித் தம்பிரான் சுவாமிகள்**
'வள்ளுவர் கண்ட சமயம்'

கடலூர்,
ஸ்ரீமதி M. ஜெயலட்சுமி & பார்ட்டி
**இன்னிசைக்கச்சேரி.**

### 6-ந் திருநாள்: சித்திரை௴ ௩௧௳ வெள்ளி (13—5—49)

*காஞ்சிபுரம், தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர்,*

திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள், B. A., L. T.,

'சேக்கிழார் திருவுள்ளம்'

*திருச்சி அகில இந்திய வானொலி நிலையம்*

**ஸ்ரீ K. C. தியாகராஜன் & பார்ட்டி**

'குமரகுருபரர் கதா காலக்ஷேபம்'

### 7-ந் திருநாள்: வைகாசி௴ ௧௳ சனி (14—5—49)

*தேவகோட்டை, தருமபுர ஆதீன வித்துவான், பாலகவி,*

வயிநாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்

'திருத்தொண்டு'

*திருக்கடவூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை,*

ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

'பார்புகழும் ஞானசம்பந்தன்'

**திருச்சி கந்தர்வ வாத்தியகோஷ்டி.**

### 8-ந் திருநாள்: வைகாசி௴ ௨௳ ஞாயிறு (15—5—49)

*ஆரணி, தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர்,*

வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசகமுதலியார் அவர்கள்

'சுந்தரர் செந்தமிழ்'

*தருமபுர ஆதீனப் பாடசாலை சிவாகம ஆசிரியர்,*

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியர் அவர்கள்

'அப்பையதீக்ஷிதர் காட்டிய அரன்'

**ஸ்ரீமதி K. B. சுந்தராம்பாள் & பார்ட்டி.**

இன்னிசைக்கச்சேரி



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JUN 1949
MADRAS

### 9-ந் திருநாள்: வைகாசி௴ ௩௳ திங்கள் (16—5—49)

*தருமபுரஆதீனக் கல்விநிலையச் சமயப்பேராசிரியர்,*

திரு. மீ. சுந்தரம் பிள்ளை அவர்கள்

'திருக்கோவையார்'

*காஞ்சிபுரம் பச்சையப்பன்கல்லூரித் தமிழாசிரியர்,*

வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்

'திருநின்ற செம்மை'

*திருவாரூர் இராஜாங்கக் கட்டளை கட்டளை விசாரணை,*

ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

'திருமுருகாற்றுப்படை'

**திரு. M. K. தியாகராஜ பாகவதர் & பார்ட்டி.**

இன்னிசைக்கச்சேரி

### 10-ந் திருநாள்: வைகாசி௴ ௪௳ செவ்வாய் (17—5—49)

*அண்ணாமலைநகர், தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர்,*

வித்துவான், திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்

'சைவர் உரையாட்டு'

*திருவிடைமருதூர் தேவாரப்பாடசாலை ஆசிரியர்,*

வித்துவான். திரு. மு. நடராஜ தேசிகர் அவர்கள்

'ஞானமுனிவன் நற்றமிழ்'

## 17—5—1949

தருமபுர ஆதீன ஸ்தாபகர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

# குருபூஜை விழா.

## 18—5—1949

மாகேசுவர பூஜையும், பட்டிணப் பிரவேசமும்.

காலை 9 மணி முதல் :

நாகர்கோயில் 'தொண்டன்' ஆசிரியர், திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான்,

**திரு. கே. ஆறுமுக நாவலர் அவர்கள்**

"உயிர்களும் உய்யும் நெறிகளும்"

திருவாசகம் திரு. K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் B. A., B.L.

'திருவாசகத்தேன்'

தருமபுர ஆதீன இசைப்புலவர்,

எட்டயபுரம் சமஸ்தான வித்துவான், இசையரசு, தேவாரமணி,

**திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள்**

இன்னிசை விருந்து.

உ

சிவமயம்

குருபாதம்

# ஞானசம்பந்தம்

| மலர் 8 | சர்வதாரிஹூ சித்திரைமீ MAY 1949. | இதழ் 6 |
|---|---|---|

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

## திருவாரூரிலே:

சனிக்கிழமை பலாரென்று பொழுது விடிந்தது. சனிக்கிழமை நாள்வட்டத்துள் எட்டுநாளைக் கொருதரம் வந்துகொண்டுதானிருக்கிறது. பலாரென்று விடிந்த கிழமை எதுவென்று கேட்கிறீர்கள்? எண்ணெய் தேய்த்து முழுகும் சனிக்கிழமையைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அவைகள் வருகின்றன; போகின்றன; ஆனல் தமிழ் வளர்கின்ற தமிழ்த் திருநாள் சனிக்கிழமை விரோதி யாண்டிலே ஒரே ஒருதட்வைதான் வந்தது. விரோதியாண்டிலா? தமிழுக்கு விரோதியாயிருக்கிற எல்லோருக்கும், விரோதியாகிற ஆண்டிலேதான்வந்தது.

திருவாரூர்க் கோயிலில், மேலக்கோபுர வாயிலில், ஒரேகூட்டம். மாற்றுரைத்த விநாயகர் கோயில்வரை குடை கொடி யாலவட்டம் வளைதடி நேர்தடி கோணல் தடி எல்லாம் வரிசையாய் நின்றன. தடிகள் வெறுந்

தடிகளல்ல. வெள்ளித்தடிகள். வேலூர்ச் செந்தமிழ் முருகன் தம் வெள்ளி வெண்கொற்றக் குடையைக்கூட அனுப்பியிருந்தார்.

இரண்டு யானைகள் வந்து நின்றன. ஒன்று தருமபுரத்து யானை. ஒன்று நாகூர் தர்க்கா யானை. யானையின் மேலே தமிழரசி ஏறியிருக்கிறாளென்று சொன்னார்கள். தமிழரசிக்கு இந்து முஸ்லீம் என்ற இன வேற்றுமையில்லை. கட்சி பேதங்கள், கருத்து பேதங்கள், மதபேதங்கள் எல்லாவற்றையும் ஒன்றுபடுத்தும் சொக்குப்பொடி எங்கள் அரசி கையில் இருக்கிறது. அதனாலே நாகூராண்டவர் யானைமேல் தருமபுரத்து ஏடுகளை ஏற்றிக்கொண்டாள். தருமபுரத்து யானைமேல் சரசுவதி மஹால் ஏடுகளை ஏற்றிக் கொண்டாள். இரண்டிலும் தன் அருள் விளக்கத்தைக் காட்டி அமர்ந்தாள். ஊர்வலம் நகர்ந்தது. தமிழ் வாழ்க! செந்தமிழ் வாழ்க! தெய்வத்தமிழ் வாழ்க! என்ற கோஷம் வானைப் பிளந்தது. சோறுமணக்கும் மடங்களில் சாப்பாட்டுக் கட்டுகளில் இருந்த கூட்டம் தொடக்கத்திலே இருந்தது. ஆனால் வரவர, தருமை ஆதீனபிரசார வாகனத்தில் தமிழ்த் தங்கையர்கள் தமிழ் வாழ்த்துப் பாடிச் சென்றார்களே அவர்களும் ஒரு சில மேளக்காரர்களும் தவிர, வேறு யாரும் இல்லை. ஆனால் யானைவந்தது. அதனுடைய உருவத்தைப்போலவே பொறுமையும் பெருமையும் பெரியதாதலின் வெய்யிலுக்கு அது அஞ்சவில்லை. வெயில்படாத் திருமேனிகள் மட்டும் வெளியில் புறப்படவேயில்லை.

10 மணிக்கு ஊர்வலம் வாயிலை அடைந்தது. தலைவர் கனம் ஓ. பி. ராமசாமி ரெட்டியாரவர்கள் உபசார பூர்வமாக வரவேற்கப்பட்டார்கள். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தந்தையான அவிநாசிலிங்கமும் உடன் வந்தார். அவிநாசி என்றவுடன் ஒரு பழைய ஞாபகம் வந்துதான் தீருகிறது, முதலைவாய்ப் பிள்ளையை,



செத்துக் காலாவதியான பிள்ளையைத் திரும்ப அழைத்த ஆரூரர் கதை. அதுவும், ஆரூரில் நினைவு வராமலிருக்க முடியுமா? நமது நண்பர் அவிநாசி அவர்கள், அரசு பீடத்திலிருந்து சுமார் 150 ஆண்டுகட்கு முன்னேயே தாழ்த்தப்பட்டு, தளையிடப்பட்டுக் கிடந்த தமிழரசியை புதுவளத்தோடு அரசபீடத்து இருத்தியவரல்லவா? முதன்மை வழங்கியவரல்லவா? என்ற நினைவைத்தான் அந்தக் கதை ஞாபகமூட்டியது. இப்படி எல்லாரும் தன்னை மறந்து தமிழ்க் கடலில் மூழ்கியிருக்கும் நேரத்திலே இரண்டு இசைமணிகள் கடவுள் வாழ்த்தைப் பாடின. அவர்கள் நமது தருமை மணிகளும் தேவகோட்டை சுந்தரேசமணியுந்தான். தேவாரப் பாடல் தமிழ் விளக்கங்கண்ட பாடல்; இசைவளர்த்த பாடல்; சாமிக்குப் பின்னாலே சமய அன்பர்கள் மட்டும் கேட்கும் பாடல் என்ற நிலைமாறி, அரசு அவையைக் களிக்க வைக்கும் பாடலாயிருந்தது.

அடுத்து மந்திரி கனம் கே. சந்தானம் அவர்கள் தமிழ்த் திருநாள் பேரவையைத் திறந்துவைக்க மேடைமீது எழுந்தார்கள். அவர்கள் கண்ணுக்குத் தெரிந்த வரையில் ஒரே ஜனவெள்ளம். அதைப் பார்த்ததும் ஒரு புன்சிரிப்பு அவருக்கு வந்துவிட்டது. காரணம் என்ன என்று கேட்கிறீர்கள்? ஒன்றல்ல; இரண்டு. நமது தாய்மொழிக்கு இந்த நாளில் - அதுவும் காங்கிரஸ் பதவியேற்ற இந்த நாளில் இவ்வளவு பெரிய கூட்டம் கூடியிருக்கிறதே என்பது ஒன்று. மற்றொன்று நாம் ரயில்வே மந்திரியாக இருக்கும்போது இவ்வளவு வருமானத்தை இந்தத் தமிழ்வளர்ச்சிக் கழகம் தந்திருக்கிறதே என்பது. இந்த இரண்டாலும் பிறந்த சந்தோஷம் அவருக்கு உச்சத்தையடைந்துவிட்டது. பேசத் தொடங்கினார். தமிழ் இன்றைக்கு வளர்ந்திருக்கின்றது. இன்னும் எந்த எந்த வகையில் வளர்ச்சிதரவேண்டும் என்று தமக்குத் தெரிந்த தமிழிலேயே பேசிவிட்டார். ஆனால் அவருடைய பேச்சில் தமிழை அகில இந்திய

போக்குவர்வு சாதனங்கள் எல்லாவற்றிலும் ஏற்றி அகில இந்தியா முழுவதும் கொண்டுபோய் இறக்க வேண்டும் என்ற பேராசை தொனித்துக்கொண்டே இருந்தது.

பின்னர், துண்டு போர்த்திக்கொண்டே இருக்கிற வேதாரண்ய காந்தி! இல்லை. இல்லை. காந்தி சிஷ்யர் சிரித்துக்கொண்டே மேடைமீது தோன்றினார். கையில் வரவேற்புரையை விரித்துப் பிடித்தார். விடாமல் படித்தார். அதிலே உண்மைத் தமிழன் தமிழ் வளர்க்க வேண்டிய உபாயங்களனைத்தும் ஒலித்துக்கொண்டே இருந்தன. ஒரு சில இடங்களில் உறுதியும் காணப் பட்டன. உடனே தலைவர் ஓ. பி. ஆர். அவர்கள் தலைமை தாங்கினார்கள். அவர்கள் தலைமையைப்பற்றி நாமொன்றும்பேசத் தேவையில்லை. ஒழுங்கும் கண்டிப்பும் தண்டிப்பும் உறுதியும் அனுபவமும் அவருடைய ஒவ்வொரு வார்த்தையிலும் தவழ்ந்துகொண்டுதானிருந்தன. அரைமணிநேரம் தலைமை மழையாகக் கொட்டிவிட்டு மேடைமீது உட்கார்ந்தார்கள். தருமை **25-வது ஞானசம்பந்தர்** அனுப்பிய ஆசியுரை வாசிக்கப் பட்டது. தமிழுக்கும் தருமைக்கும் தமிழ்வளர்ச்சிக் கழகத்திற்கும் உள்ள ஒற்றுமை மீனாட்சி சொக்கலிங்கத்தினிடத்திலுண்டாகி திருவாரூருக்கு வந்த இயைபுதான். அன்று அரசி அருள்பெற்ற தமிழ் இன்று கொடையரசர் கருணையும் பெற்றது.

வளரும். வளரும். வளர்க! என்று அதைப் படித்தவர் கூறினார்.

மராமத்து இலாகா மந்திரி இங்கேயும் மண்வெட்டி கூடை சாந்து சுண்ணாம்பு, ட்ராக்டர் (பொறிக்கலப்பை) இவைகளுக்குப்பதிலாக ஏடு எழுத்தாணி காகிதம் பேனா மைக்கூடு அச்சு இயந்திரம் சகிதமாகக் காட்சியளித்தார். ஏது! இங்கேயும் தம்து உத்தியோக வேலையைத் தொடங்கிவிட்டாரே என்று ஜனங்கள் அண்ணாந்து



பார்த்தார்கள். அவர் 'நானொரு கலைக்கோயிலைத்திறந்து வைக்கப்போகிறேன். அந்த கலைக்கோயிலிலே மருந்து அரைத்துக் கொடுக்கிற வைத்தியர் இருக்கிறார். செடி கொடிச் சித்தர் இருக்கின்றார். சிற்பி இருக்கிறார். சித்தாந்தி இருக்கிறார். வேதாந்தி இருக்கிறார். எல்லாரையும் இந்த சரசுவதிமஹாலும் தருமையாதீன மடமும் திருவாவடுதுறை ஆதீனமடமும் சிறைபிடித்து அறைக்குள்ளே பூட்டி வைத்திருக்கின்றன. எல்லோர்க்கும் விடுதலை. இந்த இயந்திரத்தினாலே ஒரேயடியாகச் சிருஷ்டித்துச் சிறைவீடு அளித்து இராமபாணம் மாதிரி எல்லார் மனத்திலும் தைக்கச்செய்துவிடுகிறேன் பாருங்கள். அப்படி தைக்கச் செய்தாலும் இந்த கலைப் பாசறைகளைப் பாதுகாக்க வேண்டிய கவலை நமக்குத்தான். அவற்றை ஆயிரம் ஆயிரமாண்டுகளாக அழியாது பாதுகாக்க வேண்டும். ஆதலால் இந்த கலைக் கண்காட்சியைத் திறந்து வைக்கிறே'னென்று இருந்த இடத்திலிருந்து நகராமலே திறந்து வைத்துவிட்டார்.

கலைக்கோயிலைத் திறப்பதற்கு முன்னால் நமது வரவேற்புக் கமிட்டியார் நமது அரசவைக் கவிஞர் **நாமக்கல் ராமலிங்கம்பிள்ளையைத்** திறந்து வைத்துவிட்டார்கள். அவர் பாடிய தமிழ்த் திருநாள் வாழ்த்துப் பாடல் ஒரு வெண்கலத் தொண்டைப் பேர்வழியால் படிக்கப்பட்டது. அவர்தான் நமது அண்ணாமலை. கலைக் கோயில் காண எல்லோரும் புறப்பட்டார்கள். இதனோடு காலை விழா முடிந்தது. எல்லோருக்கும் பசி. வயிற்றுப் பசியல்ல. வெறும் சோற்றுப் பசியல்ல. அறிவுப்பசி. அதனோடு கலைத்தாகமும். மாலை மூன்று மணி வந்ததே தெரியாது. மேடையில் விஞ்ஞானம் பேசப்பெற்றது. அதனைக் கனம் மந்திரி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள் திறந்துவைத்தார்.

கனம் டாக்டர் கிருஷ்ணன் அவர்கள் தலைமை வகித்தார்கள், நமது ஆர். கே. விசுவநாதன், செல்லம் முதலி

யோர்கள் பேசினார்கள். திருமதி ராஜேஸ்வரி அம்மையாரவர்கள் அணுக்குண்டை எடுத்துக்கொண்டு அணுவணுவாக ஆராய்ந்து, சிவம் சத்தியாகிய பரமகாரண அணுவிலே கொண்டு வந்து முடித்துக்காட்டினார். நெடு நாளாக உபாத்தியாயர்கள் கூட்டத்திலே அகப்பட்டு சயின்ஸையாவது! தமிழில் போதிப்பதாவது! இது எப்படி முடியும்? என்ற கூக்குரலால் செவிடுபட்டிருந்தவன் காதும் கேட்கத் தலைப்பட்டது. தமிழால் எதுதான் முடியாதென்கிற தன்னம்பிக்கை உடனே பிறந்தது.

தருமையாதீனத்தின் சார்பாக, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் ஆணையின் வண்ணம் தருமையாதீனத்துக்கும் தமிழ் வளர்ச்சிக்கழகத்துக்கும் உள்ள இணைப்புகளும் விரிதமிழ்க் கூடலுக்கும், கமலைக்கும், தருமைக்கும் உள்ள தொடர்புகளும் பேசப்பெற்றன. அதனை வந்திருந்த அயலூரார்கள் அனைவரும் திருவாரூரை நினைவில் வைத்துக்கொள்ளத் திருவாரூர் என்னும் நானூறு பக்கங்கள் கொண்ட புத்தகம் வெளியிடப் பெற்றது.

மாலை நிகழ்ச்சி முடிந்ததும், எங்கும் ஒரே பரபரப்பு. இருந்தவர்கள் அசந்து வெளியே போனதுதான் தாமதம். புதுக்கூட்டம் இடம்பிடிக்க ஆரம்பித்து விட்டது. கூட்டத்தில் ஒரே கூச்சல். இசைப் புலமைத் திலகங்கள் ஹேமா மாலினியும் பத்மினியும் தமிழ் வெற்றி முழக்கத்திலே தங்கள் தாய்மொழி தமிழானகையாலே முதற்கண் ஒரு தமிழ்ப்பாட்டோடு தொடங்கினார்கள். தாயுள்ள இடத்திலே மக்களும் சூழ இல்லாமலா போவார்கள். அதனால் தெலுங்குப்பாட்டும் தலைகாட்டாமல் இல்லை. இவர்கள் 'கவின் மலையாள'மாக இருந்தும், மலையாளப்பாட்டும் பாடியிருந்தால் தாய் மொழிக் கூட்டத்தில் தமிழ்த்தாயின் மகள் எல்லாருமே பிரசன்னமாக இருந்த பெருமை தமிழ்த் திருநாளுக்குக் கிடைத்திருக்கும். ஒரு சமயம் நமது வரவேற்புக் கமிட்



டியார் தமிழ்த்தாயைப் பார்த்து ஏனம்மா! தங்கள் இரண்டாவது குழந்தை மலையாளத்தையும், மூன்றாவது குழந்தை துளுவையும் அழைத்துக்கொண்டு வரவில்லை என்ற கேள்வியும் பிறந்திருக்காமலிருக்கும்.

வந்திருந்தவர்கட்கெல்லாம் வாய்விருந்து செவி விருந்து இவை செரிக்கச் செய்வதிலேயே பொழுது போய்விட்டது. பெரும்பாலும் தூக்கமில்லை யென்றே சொல்லலாம். பொழுது விடிந்தது. ஞாயிறு உதயமாயிற்று. நாட்டிற்கு முக்கியமான பொருளாதாரத்தில் ஈடெடுப்பில்லாத தலைவர் தலைமை தாங்க, அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் பேச காலை நிகழ்ச்சி நடந்தது. அந்தத் தலைவர் நமது கனம் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள். அவர்கள் பேச்சு உலகம் சுற்றின பேச்சு. மக்கள் மனப்பான்மையையெல்லாம் விளக்கும் பேச்சு. கதை சொல்லியே விஷயத்தை விளங்கவைத்து விட்டார். அவர் பேச்சில் உள்ள ஜீவநாடி கைத்தொழில்களைத் தேசியமாக்கும் செயல்களைக் கண்டித்ததே. பிறகு சுதேசமித்திரனாசிரியர் ஸ்ரீ சி. ஆர். சீனிவாசன் அவர்கள் சொற்பொழிவு வாசிக்கப்பெற்றது. டாக்டர் நடராஜன் அவர்களுடைய ஐம்பதுகோடித் திட்டத்தை அப்படியே வாயைப்பிளந்து கேட்டுக்கொண்டே இருந்தேன். ஆனந்தம் பொங்கி வழிந்துகொண்டே இருந்தது. அதற்குத் தட்டைப்பலகை தானே விழுந்தது. ஆமாம் ஐம்பது கோடியும் செலவுதானே. செலவழிக்கத் திட்டம் போடுகிறவர்கள் வரவுக்கும் வழிசொல்வாரே என்று எண்ணியிருந்தேன். அது அடுத்த ஆண்டுத் திருநாளில் நிகழலாம்.

பிறகு மூன்று மணிக்கு நமது தமிழ்ச் சுவைக் குமாரனாகிய கம்பர் கவிச்சுவை நாவுக்கரசர் டி. கே. சி. அவர்கள் தலைமையில் இலக்கியவிழா நிகழ்ந்தது. நமது ஆதீனத்துப் பாட்டாகிய "ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை" என்ற கமலை ஞானப்பிரகாசன் மெய்த்

தொண்டர்களுடைய செயல்களைக் கூறித் தருமையாதீனத்து, ஞானத் திறவுகோலால் இலக்கியப் பொக்கிஷப் பெட்டியைத் திறந்து வைத்தார்.

நமது ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் திறந்தவாய் மூடாதபடி திறந்த கண் கொட்டாதபடி நன்னிலம், குடவாயில், ஏர், எழுச்சி, அழகு, திருவாரூர் என்ற சொற்களை வைத்துக்கொண்டு சொல்லாராய்ச்சியில் தொடங்கி லக்ஷக்கணக்கான மக்களின் ஒரு மணி நேரத்தை அப்படியே கவர்ந்துவிட்டார். இரண்டு மூன்று முறை, இடையில் உஸ், உஸ் என்ற சத்தம் கேட்டது. வேர்வை களைப்பால் அயர்ந்து வெளியில்வந்த எனக்கு ஒலி பெருக்கி அதனை பெருக்கிக் காட்டிற்று. உள்ளே ஓடிப்போய் விசாரித்தேன். அவ்வொலி தூங்குகிற இரண்டு குழந்தைகளின் மூச்சொலி என்று தெரிந்து கொண்டேன்.

பின்னர் டாக்டர் வரதராசனும், டி. பி. பழனியப்பப்பிள்ளையும் சிலம்பிலும் குறளிலுமாகத் தோய்ந்து ஆடிப் பாடித்திளைத்தார்கள்.

அவிநாசிலிங்கம் அவர்கள் கலையிலும் கவிதையிலும் வெற்றிகண்ட வீரர்கட்குப் பரிசுகள் வழங்கினர். எல்லாத் துறையிலும் ஆறு நூல்களை இந்தத் தமிழ் இந்த ஆண்டு பெற்றிருக்கிறது. பரிசு வழங்கியபோது திரு. அவிநாசியார் பேச்சு மிகக் கார சாரமாக இருந்தது. இடையிடையே அமைதியும் ஓர் உறுதியும் வெளிப்பட்டன.

பிறகு 8-மணிக்கு டி. கே. எஸ். சகோதரர்களால் ஔவை நாடகம் நடித்துக் காட்டப்பெற்றது. நாடகக் கொட்டிலில் நுழைந்தபோது பாண்டியன் வீட்டுக் கலியாணத்துக்கு, ஔவைப் பாட்டி போனபோது, அவள் பட்ட அவஸ்தை ஒருபாட்டாக வந்ததே அந்தப் பாட்டு.



"வண்டமிழைத் தேர்ந்த வழுதிகலி யாணத்து
உண்ட பெருமை உரைக்கக்கேள்—மிண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியி னாலே
சுருக்குண்டேன் சோறுண்டி லேன்." என்பது.

அது நினைவிற்கு வந்தது. நாடகம் காதையும் கண்ணையும்கருத்தையும் கவர்ந்ததால் உடம்பைப்பற்றிக் கவனித்துக்கொள்ள யாருக்கும் நேரமில்லை. இலக்கிய விழா நடந்த போதுகூட காபியையும் தண்ணீரையும் ஐஸ் வாட்டரையும் மோரையும் மாறி மாறிக் குடித்துக் கொண்டிருந்த மக்கள் உடம்பிலிருந்து இப்போது வேர்வையாறு ஓட விழித்திருந்தனர். தமிழ்விழா ஒருவாறு முடிந்தது. உணர்ச்சி வேகம் எல்லாருள்ளத்திலும் துள்ளிக் கூத்தாடிற்று.

இவ்வளவு விரிவான முறையில், ஒவ்வொருவரையும் சிரித்த முகத்தோடு துள்ளித்திரிந்து கொண்டிருந்த ஒரு தமிழிளஞ் சிங்கமும் ஒரு தியாகப்புலியும் கூடி வரவேற்றன. அந்த இரண்டினுடைய முயற்சிதான் இவ்வளவு பெருமையைத் தஞ்சைஜில்லாவுக்குத்தந்தது. ஒன்று ஆதி சேதுவிலே வாழ்கின்ற அ. வேதரத்னம். மற்றொன்று நமது வடபாதி மங்கலம் தியாகராஜ முதலியாரவர்கள். வேதரத்னமவர்கள், அரசியலுலகத்திலே தியாகங்கள் செய்து அடைந்த தொண்டின் மேன்மைய மொழிவாயிலாகச் செய்யும்படி நமது வி. எஸ். டி. அவர்களைப்பழக்கிவருவது, மிகவும் போற்றத்தக்கதாகும். நமது முதலியார் தமிழ்த் திருநாளை கொண்டாடியதின் மூலமாகவாவது வ. சோ. தி. என்று தமிழ் உலகத்தால் வழங்கப்பெறுவாராக. வ. சோ. தி. அவர்கள் அரசியல் வானத்திலே எழுகின்ற இளஞ்சூரியனாகவிளங்குவாராக! தமிழ் வாழ்க! சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக.

தருமபுர ஆதீன வெளியீட்டின் மதிப்புரை.

## ‘நீதிநெறி விளக்கம்’

[அகில இந்திய வானொலி நிலையம், திருச்சி.]

24—4—49.

இது குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்தது. காழி சிவ. கண்ணுசாமி பிள்ளையால் தொகுக்கப்பெற்ற உரைவளத்துடன் இரண்டாம் பதிப்பாகத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வந்துள்ளது. திருக்குறள் முதலிய தொன்மைத் தமிழ் நீதி நூல்களின் சாரமாக இலங்குகிறது நீதிநெறிவிளக்கம். இதற்குப் பல ஆசிரியர்கள் தனித்தனியே உரை எழுதியுள்ளனர். ஆங்கில மொழி பெயர்ப்புக்களும் பல உள. இவையனைத்தையும் ஒரு சேரத் தொகுத்து மேற்கோள்களுடன் முதன் முதல் 1943ல் அச்சிட்டு வழங்கியவர்கள் தருமபுர ஆதீனத்தில் 24வது பட்டத்தில் வீற்றிருந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளாவார்கள். இந்நூலின் இன்றியமையாமை தெரிந்து, தமிழ் மொழி சைவசமய வளர்ச்சிக்கு நல்லறங்கள் ஆற்றிவரும் 25வது மகா சந்நிதானமாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மீண்டும் இதனை இப்பொழுது பதிப்பித்துள்ளார்கள். இதன்கண் ஒவ்வொரு பாட்டிற்கும் உரிய பதவுரை, உரைநடை, கருத்துரை, சொற்களுக்குப் பல அறிஞர் எழுதிய சிறப்புரை, மூவர் அல்லது நால்வர் எழுதிய ஆங்கிலமொழி பெயர்ப்பு முதலியன தொகுத்துக் காட்டப்பெற்றுள்ளன. நீதிநெறிவிளக்கத்தின் சொல் நயம் பொருள்வளங்களும் குமர குருபரரின் கவித்திறலும் கூர்த்த அறிவும் இப்புத்தகத்தால் நன்கு புலனாகும். ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் எழுதிய நூல்களுக்கு “வேரியோரம்” என்ற பதிப்பு இருப்பதுபோல, நீதிநெறிவிளக்கத்திற்கு இப்பதிப்பு அமைந்திருக்கிறது. இதுபோல் ஏனைத் தமிழ் இலக்கிய நூல்களுக்கும் உரைவளப்பதிப்புகள் ஏற்பட்டால் மிகவும் நலமாக இருக்கும்.

---

சூரியனார்கோயில் ஆதீனம் இலக்கணச்சுவாமி என்னும்

## ஸ்ரீமத் முத்துக்குமரத்தம்பிரான் சுவாமிகள்

இவர்கள் தம் தாய்நாடாகிய இலங்கையை விட்டு, இளமையிலேயே தில்லையம்பதியை அடைந்து, ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகளிடம் சிற்றிலக்கியங்களையும் இலக்கண நூல்களையும் முறையே ஐயந்திரிபறக்கற்றுச், சூரியனார்கோயில் ஆதீனத்தையடைந்து, குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரதேசிக சுவாமிகளை ஞானாசாரியாராகக்கொண்டு, காஷாயம் பூண்டு, அருளுபதேசம் பெற்று, ஞானநூல்களை எல்லாம் வடமொழியிலும் தென்மொழியிலும் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தவர்கள். தொல்காப்பிய மாதி இலக்கண நூல்களிலும் புராணம், இதிகாசம், காவியங்களிலும் இவர்கள் பயிலாதன ஒன்றுமின்று. தம்மையடைந்த அடியார்க்கெல்லாம் அவர்கள்பெற்ற தீக்ஷைநிலைக்கேற்ப ஞானநூற் பொருள் நுணுக்கங்களைப் போதிப்பதே தமது குறிக்கோளாகக்கொண்டவர்கள். தமதுஞானாசிரியர்விருப்பின்படி சிவஞானபோதமாபாடியம் முழுவதும் வெளிவருவதற்குக்காரணமாயிருந்தவர்கள் இவர்களே. அல்லாமலும், ஆதீனத்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சிவாக்கிர யோகிகள் அருளிச் செய்த சிவாக்கிரபாடியம், கிரியாதீபிகை என்னும் இரு வடமொழி நூல்களையும் வெளியிட்டு உபகரித்தவர்கள். நித்திய கர்மானுட்டான நெறி சிறிதும் தவறாதவர்கள். சிவபூசா துரந்தரர். நைட்டிகப்பிரமசாரி. சுருங்கக்கூறின் துறவறத்திற்கே ஒரு அணிகலனாக விளங்கியவர்கள். பொதுவாக சைவ உலகமும், சிறப்பாக சைவாதீனங்களும் இவர்களை நன்கு அறியும்.

தருமை 24-வது மகாசந்நிதானத்தின் ஆணையின்படி முத்திநிச்சயப் பேருரை முழுவதும் ஒப்பிட்டுப்பார்த்து உபகரித்தவர்கள். 25-வது மகாசந்நிதானம் அவர்கள் விருப்பின்படி ஞானாவரண விளக்க உரை பெரும் பகுதி சரிபார்த்தவர்கள். ஆகமப்பிரமாணங்களையே மிகுதியும் கொண்டுள்ள இவ்வுரை முழுதும் பார்ப்பதற்கில்லாமை சைவஞ்செய்த தவக்குறை போலும்.

வெளியே எங்குச் சென்றாலும் தில்லையம்பலத்தில் ஆனந்ததாண்டவத்தையே கருத்திற் கொண்டவர்களாதலின், தருமையம்பதியிலிருந்து ஞானாவரண விளக்கம் உரைபார்த்து வருங்கால், திருவருள்செலுத்த தில்லையை அடைந்து, தமது நிலையை அன்பர்களுக்கும், சீடர்களுக்

கும் குறிப்பாலுணர்த்திச் சிவசிந்தனை மறவாதிருந்து, தமக்குப் பலவிதத்தும் வசதியாயிருந்த ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலையில், விரோதி வருஷ சித்திரை மீ 10உ வெள்ளிக்கிழமை பகல் 10½-மணிக்குப் பரமுத்தி எய்தினார்கள். 9உ வியாழக்கிழமை இரவு இவர்கள் நிலையைக் குறிப்பாலுணர்ந்து தருமை ஆதீன கர்த்தரவர்கள் அனுப்பிவைத்தருளிய விபூதி, சந்தணம், மாலை முதலிய பிரசாதங்களை ஏற்றுக்கொண்ட முறையில் தலையசைத்து வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். வெள்ளிக்கிழமை காலை 8-மணிக்கு ஓதுவா மூர்த்தி விடைபெற்றுக்கொண்டபோதும் தலையசைத்து விடையளித் தனுப்பிவைத்தார்கள் என்பது சிந்தித்தற்குரியது. பலகாலமாகவேசுவாமிகளை அறுசுவை யுண வளித்து ஆதரித்துவந்த அருட்செல்வரும் பொருட் செல்வருமாகிய உயர்திரு S. மார்க்கண்டம் பிள்ளையவர்கள் முயற்சியால், தருமை ஆதீன கர்த்தரவர்கள் திருவருள்பெற்று, ஆதீனத்துக்குச் சொந்தமான தெற்கு மடத்தோட்டத்தில், முத்திநிச்சயப்பேருரை யாசிரியரும் ஞானவரண விளக்கஉரைஆசிரியருமாகிய பெரியார் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் சமாதி கொண்டிருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் இவர்களுக்கும் இடம் கிடைத்தது திருவருட் செயலேயாம்.

சுவாமிகளுக்குச் சொந்தமாக ஒருமடமும் நூல்நிலையமுமுண்டு. ஸ்ரீமத் செப்பறைச் சிதம்பர சுவாமிகளைப் போலவே, சைவர்களுக்குப் பயன்படும்படி தக்க பாதுகாப்பாளர்களை நியமித்து எழுதியும் வைத்திருக்கிறார்கள்.

பத்தாநாள் மாஹேசுவர பூசை வெகுசிறப்பாக நடைபெற்றது. தருமையாதீனத்திலிருந்து விபூதி முதலிய பிரசாதம் அனுப்பிவைத்தருளினார்கள். வேளூர் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் தலைமையில், சூரியனார்கோயில் மீனாட்சிசுந்தர தேசிகர், செப்பறைக் குருக்கள் ஐயா, சிவக்கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியார் முதலிய பல மெய்யன்பர்களும் சுவாமிகளது அருமை பெருமைகளைப் பாராட்டிப் பேசி நடராசப்பெருமான் திருவருளை வழுத்தினார்கள்.

# பத்துத்திருவிழாக்களின் தத்துவக்கருத்து

திருக்கோயில்களில் நடக்கும் நித்தியம் நைமித்திக மென்னு மிரண்டனுள் நித்தியமாவது நாள்தோறும் குறித்த குறித்த காலங்களிற் சுவாமிக்கு விதிப்படி கிரமமாக நடக்கும் அபிடேகம் பூசை அக்கினிகாரியமென்னு மிவைகளாகும்; நைமித்திகமென்பது கோயில்களில் இடையிடையே விசேட காலங்களை யொட்டி நடக்கும் விசேட அபிடேக ஆராதனை திருவிழா புராண படனம் முதலியவைகளாகும்.

திருக்கோயில்களில் நிகழும் நித்திய அபிடேகம் பூசை முதலியவற்றில் அபுத்தி பூர்வமாக (அதாவது பிழை யென அந்தநேரம் அறியாமல்) ஏதுந் தவறு நேர்ந்தால், அத்தவற்றிற்குப் பிராயச்சித்தமாகவே நைமித்திகமாகிய திருவிழா முதலியன செய்யப்படுவன எனச் சிவாகமங்கள் கூறும்; இந் நைமித்திகத்துள்ளும் கொடியேறித் தொடர்பாகத் திருவிழா நடத்தலாகிய மகோற்சவம் விசேடமாகும்; இந்த மகோற்சவ மெனப்படும் பெருந் திருவிழா, மேலே காட்டிய பிரகாரம் நித்திய பூசையில் அறியாமையால் நேர்ந்த குறைக்குச் சாந்தியாகவும், திருக்கோயிலுட் பிரவேசித்து இறைவனை வழிபடுதற்கு அருகரல்லா ஆசௌசிகள் முதலானோர் புற வீதியில் நின்று சுவாமி தரிசனம் செய்தற்காகவும் நிகழ்வதென ஆகமங்கள் கூறுவனவாம். மகோற்சவ மெனப்படும் பெருந் திருவிழா தொடர்பாகப் பத்து நாட்கள் மாத்திரம் நடைபெறவேண்டியன வென்றும், அங்ஙனம் ஒவ்வொரு நாளும் நிகழும் திருவிழா ஒவ்வொன்றிற்கும் தத்துவப் பொருளெனப்படும் ஞானார்த்த முண்டென்றும் சிவாகமங்கள் வெளியிடுகின்றன. இத் திருவிழாக்களின் தத்துவக்கருத்தைச் சுருக்கமாக இங்கு எடுத்துக் காட்டுதும்:

முதனாள் விழா தூலதேகத்தை நீக்கிக்கொள்ளும் பயனை விளக்குவதாகும்.

இரண்டாநாள் விழா, தூல சூக்குமம் என்னும் இரு வகை யாக்கையையும் நீக்கிக்கொள்ளும் பயனைக் குறிப்பதாகும்.

மூன்றாநாள் விழா மூவினையும், முப்புத்தியும், முக்குணமும், மும்மனமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும் என்னும் இவைகளை ஒழித்தற் பொருட்டாகும்.

நான்காநாள் விழா நாற்கரணம் நால் வகைத் தோற்றம் என்னு மிவைகளை நீக்குதற் பொருட்டாம்.

ஐந்தாநாள் விழா புலன்களின் வழியே செல்லும் பஞ்சப் பொறிகளும், பஞ்ச அவத்தைகளும், பஞ்சமலங்களும் நீக்குதலைக் குறிக்கும்.

ஆறாநாள் விழா காமமாதி ஆறும், கலையாதி ஆறும், பதமுத்தி ஆறும், வினைக்குணம் ஆறும் அழித்தற் பொருட்டு நிகழ்வதாகும்.

ஏழாநாள் விழா, ஏழுவகைப் பிறப்பு, கலாதிகள் ஏழு, மாயா மலகுணம் ஏழு என்னும் இவைகளைத் தவிர்த்தற் பொருட்டாகும்.

எட்டாநாள் விழா தன்வயத்தனாதல் முதலிய கடவுட் குணங்கள் எட்டினையும் விளக்குதற் குறிப்புடையதாகும்.

ஒன்பதாநாள் விழா சகளம், நிஷ்களம், சகள நிஷ்களம் என்னும் வடிவம் மூன்றும் சிருட்டி முதலிய முத்தொழில்களும் தன்மை முதலிய மூன்றிடத்து இருத்தலுமாகிய ஒன்பது மில்லையென்பதைக் குறிப்பதாம். பத்தாநாள் விழாவாகிய தீர்த்தத் திருவிழா, சிவானந்த



மாகிய பேரின்பக் கடலில் ஆத்மா திளைப்பதைக் குறிப்பதாம்.

பெருந் திருவிழாவின் தத்துவப் பொருள்களையும், அவை நடக்கவேண்டிய முறையையும், மகோற்சவம் பத்துநாட்கு மேற்பட இல்லையென்பதையும், இன்ன பிறவற்றையும் உபாகமங்களு ளொன்றாகிய விம்பதந்திரம் மகோற்சவப் படலத்தில் விளக்கிக் கூறுகின்றது. இவற்றின் விரிவையும் நுட்பங்களையும் சிவாகமம் வல்லார் மாட்டுக் கேட்டறிந்தமைக.

சிவன் கோயில்கள் சிலவற்றில் பத்துநாட்கு மேற்படத் திருவிழா நிகழ்வ தென்னையெனின், அந்த மேற்பட்ட தினங்களில் அக்கோயிலில் எழுந்தருளிய பரிவார மூர்த்திகளாகிய விநாயகர், வீரபத்திரர், சுப்பிரமணியர் முதலாந் தெய்வங்கட்கும், அப்பர் முதலாம் சமய குரவர்க்கும் செய்யப்படுந் திருவிழாவாகும்.

இங்ஙனமெல்லாம் சிவாகமங்கள் விதித்திருப்ப, இக்காலத்தில் இந்நாட்டிலுள்ள கோயில்களுட் சிலவினுஞ் சிலவொழிந்த ஏனைய கோயில்களில் நடத்தப்படும் மகோற்சவ மெனப்படும் பெருந் திருவிழாவில் நிகழ்வனவெல்லாம் ஆகம விரோதமான செயல்களும், திருவிழாத் தரிசனஞ் செய்யப்போவோரைத் தீய நெறியிற் புகுத்துதற் கேதுவான செயல்களுமாகும். உற்சவாசாரியார், கோயிலதிகாரி யென்றிருப்பவர், உபயஞ்செய்ய வருவோர், சுவாமிதரிசனத்தின் பொருட்டுக் கோயிலுக்குச் செல்லும் கற்றறிவுற்ற அன்பர்களாகிய இவர்கள் ஒருங்குசேர்ந்து, தத்தமூரிலுள்ள கோயில்களில் நடப்பனவாகிய நித்திய நைமித்திகங்களை விதிப்படி கிரமமாக நடக்கச் செய்தல் வேண்டும். இப்படியான கருமம் எவற்றினும் திருவருளையே முன்னிட்டுக் கொள்ளுதல் வேண்டும். நான் எனதென்னும் முனைப்புக்கள் தலைப்பட்டாற் சற்கருமமெனவையும் கைகூடாவாக அநர்த்தமே தேடிவந்து சேரும்.

திருவிழாக்காலத்து விரதம்பூண்டு உற்சவ தரிசனஞ் செய்யும் அன்பர்கள், அதிகாலையி லெழுந்து ஸ்நானம் சந்திவந்தனை முதலியவற்றை முடித்துக்கொண்டு ஆசார சீலராய்க் கோயிலுக்குப்போய் உற்சவதரிசனஞ் செய்து மீண்டுவந்து பகற்போது ஒருவேளை உணவு கொள்க; அவ்வளவில் அமைய முடியாதவர்கள் இராக்காலத்தும் உற்சவதரிசனஞ் செய்துகொண்டு பாலேனும் ஏதும் பணிகாரமேனும் உண்ணுக.

—இந்துசாதனம்.

---

# அப்பரும் அரன் கழலும்

[வித்துவான், G. சுப்பிரமணியபிள்ளை, M. A., B. L.,]

பிஞ்சுமதி சூடிய பிஞ்ஞகன்தனது குஞ்சித பாதத்தைச் செஞ்சவேகொண்டு தம் குஞ்சிப்பூவாய் மிலைய வேண்டும் என்னும் எண்ணமானது சொற்கோ மனத்தகத்தே பலகாலும் பொங்கி எழுந்தது. அதற்குத் தக்க இடமும் பொழுதும் நாடித் திரிந்தார். பின்னர், திருச்சத்தி முற்றத்துச் சிவக்கொழுந்தே அங்ஙனம் அருள் அளிக்க வல்லார் என்பதை நன்குணர்ந்தார். ஏனெனில், அங்கே உமாதேவியார் சிவனை வழிபட்டு வதிகின்றார். ஆதலால் அதுவே சிவபெருமான் உள்ளங்குளிர உவந்துறைகின்ற பதியாகும். சேக்கிழாரும் இவ்வுண்மையை,

"குன்றமகள்தன் மனக்காதல் குலவும்பூசை கொண்டருளும்
என்று மினிய பெருமானை"

என விளக்கியுள்ளார். திருநாவுக்கரசர் திருச்சத்தி முற்றச் சிவக்கொழுந்தைச் சிக்கெனப் பற்றிக்கொண்டு, தமது தலையில் இறைவன் திருப்பாதத்தைச் சூட்டியருளாவிடில் அடியவனுக்கருளாத பெரும்பழி வந்து சுற்றும் என்று முறையிட்டார்:—



"கோவாய் முடுகியடுதிறற் கூற்றங் குமைப்பதன்முன்
பூவாரடிச் சுவடென்மேற் பொறித்துவை போகவிடின்
மூவா முழுப்பழி மூடுங்கண்டாய் முழங்குந் தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத்துறையும் சிவக்கொழுந்தே"

திருவடி சூட்டாது கைவிட்டால் மூவா முழுப்பழி மூடும் என்றதால், தான் இறந்துபடுதலைக் குறிப்பிற் புலப்படுத்தார் வாக்கின் வேந்தர்.

சிவபெருமான் மனங்குழைந்து நல்லூரில் அவ்வாறு நல்குவதாக வாக்களித்தார். திருச்சத்தி முற்றத்திலேயே அருளாததற்குக் காரணம் நன்கு விளக்கப்பட்டிலது. உமாதேவியாரின் வழிபாட்டிற்கு இடையூறு வருமென்று கருதியோ, அல்லது உலகறியச் சூட்டவேண்டுமென்ற நோக்கமோ, திருவுள்ளக் கிடக்கை எம்போலியர்க்கு அறியும் திறமன்று,

நல்லூரிலே அப்பர் நாதன்தாள் சூட்டப்பெற்றார். அவ்வாறு பாதம் சூட்டியருளிய அவ்வரியபொழுதில், அப்பர் சுவாமிகளின் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும்? அவர் உள்ளத்தெழுந்த உணர்ச்சிகள் யாவை? சேக்கிழாரும், தனம்பெற்ற வறியோன்போல் மகிழ்ந்தார் எனமட்டும் கூறி யமைந்தார். இன்னும் ஓர் உணர்ச்சியும் அவரைக் கசிந்துருகச் செய்ததாம். அதைத் திருநாவுக்கரசரே தம்வாயாற் கூறியுள்ளார்:-

"உய்த்தகா லுதயத்தும்பர் உமையவள் நடுக்கந்தீர
வைத்தகால் அரக்கனைதன் வான்முடி தனக்கு நேர்ந்தான்
மொய்த்தகால் முகிழ்வெண்திங்கள் மூர்த்தி என் உச்சிதன்மேல்
வைத்தகால் வருந்துமென்று வாடிநான் ஒடுங்கினேனே"

தம் தலையில் சிவபெருமான் கால்பட்டால் அம்மெல்லிய பாதம் வருந்துமே என்று வருந்தி ஒடுங்கினாராம். சிவன் தமக்கு அருளோடுங்கூடி யளித்தார் என்பதைக் குறிக்க 'மொய்த்தகால் முகிழ்வெண் திங்கள் மூர்த்தி' (மதியம் சூடிய பெம்மான்) என்று சிவனை விசேடித்தார்.

தன் வாழ்நாள் முழுதும் தேடித்திரிந்து வேண்டிப்பெற்ற பாதமாக இருந்தும், அது தன் தலைக்குநேர் எய்திய போது, தான் அக்கடவுளிடத்துக்கொண்ட அன்பு கரை புரண்டு ஓடவும், அம்மெல்லிய தளிர்போன்ற பாதம் பாவியாகிய தனது முரட்டுத் தலையிற் பொருந்தினால் அது நோவுமே என்று துடித்து, தான் எனும் முனைப்பு அறவே ஒழிந்து, அப்பாதத்தின்கீழ் வாடி ஒடுங்கினார். அப்பொழுது இன்னும் ஓர் எண்ணம் அவர் மனத்தை வாள்போற் பிளந்து வருத்தியது. வெள்ளியங்கிரியை அள்ளி வீசமுயன்ற பத்துத் தலையனைச் செற்றஞான்று சிவன் சேவடி எவ்வாறு நொந்திருக்கும்! தன் மனக்கினிய மாபத்தினியின் மாதுயர்தீர மடுத்த அவ்வடியானது அதிவேகத்துடன் அழுத்தப்பட்டிருக்குமே, தன் தலைகளிற்பட்டால் அரன் அடி வருந்துமே என்று கலங்கி ஒதுங்காது அக்கோர அரக்கன் தன் பத்து இராக்கதத் தலைகளையும் தூக்கி எதிர்முட்டினானே. சிவன் பாதம் நொந்து புண்ணாய் உலைந்திருக்குமே. அம்மெல்லிய பாதம் அரக்கனது கரடுமுரடான தலையிற் பொருந்தும் தகுதியுடையன அல்லவே என்று இவ்வாறு நினைந்து நினைந்து நாவுக்கரையர் உள்ளம் நெக்குருகினார், 'அரக்கனோ நேர்ந்தான்?' என்று தாங்கொணாத்துயரால் தளர்ந்து வாடினார்.

இவ்வருமைப் பாட்டை மறித்தொருகால் நோக்குதல் வேண்டும். 'அரக்கனோ நொந்தான்' என்ற பாடமும் உண்டு. 'நொந்தான்' என்பதும் 'நேர்ந்தான்' என்பதும் ஒரு படித்தாகவே ஏடுகளில் எழுதப்பட்டிருக்கும். இறைவன் திருவடி இராவணன் தலையிலும் வைக்கப் பட்டது. அப்பர் தலையிலும் வைக்கப்பட்டது. உமா தேவியின் அச்சம் தவிர்த்தற்காக இராவணனை ஒறுத்தல் வேண்டி அன்று நடந்தது. அப்பர் அடிகளை ஆட்கொள்ள வேண்டி இன்று நடந்தது. அன்றும் சிவன் கழல்தான் நீட்டப்பட்டது. இன்றும் அக்கழலே சூட்டப் பட்டது. அன்று இராவணன் தன் தலை அழுந்தி



நொந்ததே என்று வருந்தினான். இன்று அப்பர் தன் தலையிற்பட்டால் சிவன் கழல் சிவந்துகன்றுமே என்று வருந்தினார். அன்று இராவணனும் வருந்தினான். இன்று அப்பரும் வருந்தினார். இராவணன் தன் தலைக்காக வருந்தினான். இன்று அப்பர் அரனார் பதமலருக்காகப் பதைத் துருகினார். அவ்வாறு வாடிய அப்பர் சிவனடியின் கீழ் ஒடுங்கினார். சிவனடி வியாபகமாகவும் அப்பர் வியாப்பியமாய் உள் ஒடுங்கினார். தன் முனைப்புச் சிறிது மின்றி அகங்கார மமகாரங்கள் அறவே ஒடுங்கிச் சிவனடியுள் அடங்கினார். அரவணையான் சிந்தித்தரற்றும் அடிநிழற்கீழ் அப்பரின் நிலை எப்படி இருந்ததென்பதை இப்பாடல் அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது.

நல்லூரிலே நம்பர் சூட்டிய திருவடியை என்றும் விடாது சுமந்தே திரிந்தார் அப்பர் அடிகள். அதனை நினைக்கும்பொழுதெல்லாம் இராவணன் பட்டபாடு அப்பருக்கு நினைவூறிக்கொண்டேயிருந்தது. இராவணனோ அரக்கன். மிக்காரையில்லா வலியுடையான். மலை போன்ற தோள்கள் உடையான். அவன் சிவனது பெருவிரல் இறையளவு அழுத்தவும் ஆற்றாது பல்லெல்லாம் தெரியக்காட்டி ஆவென்றலறி விழுந்தான். அப்பரோவெனின், சிவபெருமான் திருவடியையே தலையில் ஏற்றிச் சுமந்து திரிந்தார். அவனுக்கு அரிதாய் இருந்தது இவருக்கு எளிதாய் இருந்தது. "இராவணனை விட நான் மிக வல்லவன் என்பதை இதோ கண்டு கொள்ளுங்கள்" என்று நகைச்சுவை ததும்பவும் பாடியுள்ளார் அப்பர் அடிகள்:—

"பெருவிர லிறைதானூன்றப் பிறையெயிறிலங்க அங்காந்
தருவரையனைய தோளா னரக்கனன் றலறிவீழ்ந்தான்
இருவரு மொருவனாய உருவமங் குடைய வள்ளல்
திருவடி சுமந்துகொண்டு காண்கநான் திரியுமாறே"

இவ்வாறு நல்லதோர் நிகழ்ச்சி நல்லூரில் நடந்தது. நாதனார் தாளிணை நாவேந்தர் தலையில் வைத்தார். திசை

தொழுது மிசையமரர் திகழ்ந்து வாழ்த்தி நண்ணரிய எண்ணரிய எழில் பொற்பாதம் அப்பருக்குக் கிட்டியது. அதனைத் தலையிற் சுமந்து தமிழ் மறைப் பாடலில் நன்னலத்த விதமாய் நயந்திகழவைத்தார் அப்பர் அடிகள்:—

"நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வைவைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்லவாறே.

---

உ

## சிவபெருமான் துதி

சீர்கொண்ட ஆனந்த மாகி எங்குஞ்
செறிவாகிப் பரமாகித் திரம தாகி
ஏர்கொண்ட கருணைதிரு வுருவ மாகி
எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னாதிக்
கடவுளர்வந் தடிபரவுங் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத் தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

---

வெளியீடு எண் 191.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# தாயுமானவர் மடல்

(குறிப்புரையுடன்)

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள்

திருவுள்ளப்பாங்கின்படி
வெளியிடப்பெற்றது.

ஞானசம்பந்தப் பிரசுரம். 1

விரோதி.

உ
குருபாதம்

# முகவுரை

திருச்சிற்றம்பலம்

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே. —சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்.

தாயுமானவர் மடல் என்பது திரிசிராமலையில் கோயில்கொண்டெழுந்தருளிய தாயுமானவராகிய சிவபெருமான்மீது பாடப்பெற்றதொரு பிரபந்தமாம். திரிசிராமலை, தேவாரம்பெற்ற சோழநாட்டுத் திருத்தலங்களுள் ஒன்று.

மடல்என்பது தமிழ்மொழிக்குரிய தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகவும், அகப்பொருட்கோவைத் துறைகளில் ஒன்றாகவும், கலம்பகவுறுப்பினுள் ஒன்றாகவும் வரப்பெறும். மடல் நூல் அகப்பொருள் தழுவிய பிரபந்தவகையைச் சேர்ந்தது.

இது வளமடல், உலாமடல் என இருவகைப்படும். தாயுமானவர் மடல் உலாமடலாம்; உலாமடலாவது நனவில் கண்டு நழுவிய ஒருத்தியைச் சொப்பனத்தில் கண்டு கலவியின்பம் நுகர்ந்த ஒருவன், விழித்தபின் அவளைப் பெறுவதற்கு மடலூர்வேனென்று கலிவெண்பாவாற் பாடுதலாம்.

"கனவி னொருத்தியைக் கண்டு புணர்ந்தோன்
நனவி னவள்பொருட் டாக நாணே
யூர்வேன் மடலென் றுரைப்ப துலாமடல்"

(இலக்கண விளக்கப் பாட்டியல் 97.)

இதனைக் கலிவெண்பாவாற் பாடுதல் வேண்டும் என்பதற்கு இலக்கணம் யாதோவெனின்,

"தனிச்சொ லளவாகித் தன்றளையோ டோசை
தொனித்துப் பலவடியாய்த் தோன்றிச்—செனிக்கும்
உலாமடற் . றூதுமற் றன்னதும் வெள்ளைக்
கலாபவகை யோதல் கலி"

எனின் உலாவுக்குந் தூதுக்கும் மடலுக்கு மற்றுமுள்ள மன்மதசார முதலான பிரபந்தங்கட்கெல்லாங் கலிவெண்பாவாற் பாடப்படுமென்றவாறு. (பிரபந்தவியல் 41.)

என்னும் இலக்கண சூடாமணியாமென்க. குவலயானந்தமுடையார் மடல் நூலை "மடலூர்ச்சி" என்றும், அது "வித்தாரகவியின்பாற்பட்ட" தென்றும் கூறுவர். கைக்கிளை ஐந்திணை பெருந்திணை யென்னும் பிரிவினையுடைய அகப்பொருளில் இந்நூல் கைக்கிளை வகையைச் சார்ந்ததாம். எங்ஙனமெனில், தொல்காப்பிய அகத்திணையியலில் பெருந்திணையினிலக்கணங் கூறும் சூத்திரத்தின் முதலில்வரும் "ஏறியமடற்றிறம்" என்பதற்கு "மடன்மா கூறுதலன்றி, மடலேறுதலும்" எனவும், "மடன்மா கூறுதல் கைக்கிளையா" மெனவும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைவரைந்துள்ளமையானும் இந்நாலின் இறுதி "ஊர்வேன் மடல்" என முடிந்திருத்தலானும் என்க. ஊர்ந்தேன் மடலென முடிவுபெற்று இருக்குமாயின் அது பெருந்திணையாம். ஒருவருள்ளக் கருத்தை மற்றொருவரறிந்துகொள்ளாத ஒருதலைக்காம நிலையிலே "மடலூர்வேன்" எனக் கூறுதலின் "மடலூர்வேனெனல்" கைக்கிளையின்பாற் படுவதாயிற்று.

மடல்நூலை வாசித்தற்குமுன் மடலூர்தலினியல்பு பற்றி முதலிற் சிறிதேனுமறிந்துகொள்ளுதல் வேண்டுமல்லவா? மடலூர்தலினியல்புபற்றித் தஞ்சைவாணன் கோவை உரையாசிரியர் புல்வர் நாட்டியவழக்கமாகப் புனைந்து கூறியிருப்பது அந்நூலின்கண் அறிந்து மகிழ்



தற்குரியது. தம்மால் விரும்பப்பட்டோரைப் பெறாத விடத்துத் தம்மிருவர் படத்தையும் கிழியிலெழுதிக் கையிற்கொண்டு, பூளை எருக்கம்பு எருக்கு ஆகிய இவைகளாற்கட்டிய மாலையையணிந்துகொண்டு, பனைமடலாற் செய்த குதிரையிலேறி, அதனைப் பிறர் இழுப்பத் தெருவீதி வழியே செல்வர். அவரது கொடுஞ்செயலைக்கண்ட அரசராயினும் அரசரேவல்பெற்ற தமது உறவினராயினும் சோதனைசெய்து அவருடலில் இரத்தந்தோன்றாது வீரியந்தோன்றுமாயின் அவரால் விரும்பப்பட்ட மகளிரை அலங்கரித்து அவருக்குக்கொடுப்பர். இரத்தந் தோன்றுமாயின் அவருக்குக் கடுந்தண்டம் விதிப்பர். இதனால் மிக்க காமமுற்றோர் தாம்விரும்பிய மகளிரை அடைதற்குரிய உபாயநெறியே மடலூர்த லென்பது பெற்றாம். "காமமுழந்து வருந்தினோர்க்கேம, மடலல்ல தில்லை வலி" என்றார் திருவள்ளுவனார். இந்நாலினும், "மடந்தையர் முன்னே மடல் பெற்றாற் பூவை, அடைந்திடலா மென்பதறிந்தேன்" என 271 ஆம் கண்ணியில் வருவது காண்க. 272 ஆம் கண்ணி முதற்கொண்டு மடலூர்தலினியல்புபற்றிக் கூறியிருப்பவை படித்து அறிதற்குரியன. தொல்காப்பியனார் ஆடவரே மடலூர் தற்குரியர் பெண்கள் மடலூர்தற்குரியரல்ல ரென்பர். மகளிர்மடலேறாராயினும் காமம்மிகின் மடலூரக் கருதலும் சொல்லுதலும் செய்வர். இதனைச் சிந்தாமணியிற் குணமாலையாரிலம்பகத்தும், திருமங்கையாழ்வார் செய்த பெரிய திருமடற்பிரபந்தத்தும் கண்டுகொள்க.

## நூல்

புலவர்கள், தாம்வழிபடும்தெய்வத்தையாவது தமக்கு ஆதரவுசெய்தவர்களையாவது பாட்டுடைத்தலைவர்களாக வைத்து மடல் பாடுவார்கள். பாட்டுடைத்தலைவர்கள் உயர்ந்தவர்களாக இருக்கவேண்டுமென்பது இலக்கண மாதலின் இந்நூலாசிரியர் தாம் வழிபடும் கடவுளாகிய யாவரினும்மேலான முழுமுதற்பொருளையே பாட்டுடைத்

தலைவனாகவைத்து இந்நூலை இயற்றினர். இது அகப்பொருள் தழுவிய நூலாதலின் இதன்கண் சொல் நிகழ்த்துதற்கு உரிமையுடைய கிளவித்தலைவனது குரவராற் பெற்ற இயற்பெயர் கூறாது இந்நூல் முழுவதும் அவன் கூற்றாகவே அமைதல் விதியாதலின் அவன் வாயிலாகவே "தமியேன்" "பித்தனேன்" எனத் தன்மையொருமையில் அவன்பெயர் புலப்படுத்தியிருத்தல் அறிந்துமகிழ்தற்குரியது. இந்நூல் 285 கண்ணிகளையுடையது.

## நூலின் உட்பொருட் சுருக்கம்

மிகுந்த சிறப்பும் சிறந்த அவையவங்களுமுடைய பெண்ணொருத்தியைத் திரிசிராமலையில் கோயில்கொண்டருளிய தாயுமானேசுவரனுக்குரிய சிராமலைப் பூங்காவில்கண்டு, பெருங்காதல்கொண்டு, அவள்பால் தனது வேட்கைகிளத்தவும் அவள் அதனைக் கேளாதவள்போல் போய்விடவும் தலைமகன் மிகுந்த விரகவேதனையுற்று, இரவில் துயில்கொள்ளும்பொழுது (உண்டாகிய) கனவிலே தலைமகளினுருவத்தைக்கண்டு, காமுற்றுத் தனது பெருவேட்கை கிளத்தி, அவளது குறிப்பறிந்து அதரபானம் பண்ணித் தோய்தற்குச் செல்லுமளவில் கண்விழித்துவிட்டான்.

மிகுந்த காமவேட்கையால் தலைமகளைக் கூடப்பெறாது கலக்கமுற்ற தலைமகன், அவளையடைந்து கூடுதற்கு மடலே பொருளெனத் துணிந்து, திரிசிராமலைத் திருவீதியிலே யாதுதுன்பம் நிகழினும் மடந்தையர் முன்னே மடலூர்வேனெனக் கூறலாம்.

## நூலாசிரியர்

யான் விசாரித்தமட்டில் நூலாசிரியர்பெயர் தெரியவில்லை. இந்நூலாசிரியர் 60 "பொங்குதமிழ்க்கூடற் புராதனிசெய் புண்ணியம்போல்" என உவமை கூறுவதால் சங்கமிருந்து தமிழ்வளர்த்த மதுரைநாயகியாகிய அங்கயற்கண்ணிபால் அன்புடையவரென்றும், "சந்தம் பொதியத் தமிழ்வரையாய்" 76 என்பதனால் அகத்தியர் இருந்து தமிழ்வளர்த்த பொதியமலையின்பாலும், "பண்டையோர்" 8, "மெய்ப்புலவோர்", 94 எனக்கூறுவதனால் உண்மையான பழந்தமிழ்ப் புலவர்பாலும், 9 "தமிழ்ப் பொன்மலையிலே" எனக் கூறுவதால் தமிழ்மொழியின் பாலும், 167 "மூவேந்தர்போற்றுமுதலிகளம்மூவரெனும் பாவேந்தர்போற்று திருப்பாட்டினன்" என்பதனால் தேவாரம்பாடிய மூவரிடத்தும் அவர்களருளிய தமிழ்த் திருமுறைகளிடத்தும் மிகுந்த அபிமானமுடையவராய் இருந்தவரென்பதும் நன்கு புலப்படுகின்றன.

> "கண்டன் கரிகாலன் காவிரிசூழ் நன்னாட்டில்
> வண்ட விழைப்பார் மதிவதனங்—கண்டக்கால்
> கால்போகா போகினுமென் கண்போகா போகினுமென்
> மால்போகா போகா மனம்"

என்பது பழமையான சுவைமிகுந்த நேரிசைவெண்பா. இதனைத் தமதுநூலில் 182, 183, 184 ஆம் கண்ணிகளில் அருமைபெறவமைத்துப்பாராட்டியிருப்பதனால் மெய்மையுணர்ந்த புலவரிடத்தேயன்றி அவரியற்றிய நயந்தரு செய்யுட்களையும்போற்றும்பண்புமிக்குடையவண்டமிழ்ப் புலவரென்றும் தெரிகின்றது.

இந்நூலில் வந்துள்ள 96 பாதாதிகேசமெல்லாம், 119 செந்தாமரையனைய சீறடியாள், 129 பூவின்கொடியும் பொறைசேர் நிலக்கொடியும், மேவும் கொடியவிடைக்கொடியான், 189 வாய்முத்தம் சிந்துமோ என்பனவற்றை நோக்கும்பொழுது இந்நூலாசிரியர் வித்துவான் சொக்கநாதபிள்ளையாக இருக்கலாமோவென்று தோன்றுகின்றது. அவர் இயற்றியுள்ள தேவையுலாவில் வந்துள்ள, 186 பாதாதிகேசமெல்லாம் பாவைதரிசித்து வேதாதிகேசவனை மேம்பட்டாள், 223 பைந்தாமரை வணங்கிப் பச்சைமாலர்ச்சித்த செந்தாமரையனைய

அ

சிறடியாள், 61 பொற்கொடிமார்பில்பொருந்தும்விடைக் கொடியான் என்பனவாம். தனிப்பாடலில் வந்துள்ள "வாய்முத்தம் சிந்திவிடுமோ செல்வேலி வடிவம்மையே" என்பதும் பிறவும் இவ்வாறு கருதுவதற்கு இடந்தருகின்றன.

## மூர்த்தி

(காப்பு) தாயானவன், 172 தாயானசெல்வன், 164, 165 செவ்வந்திநாதன்; சிராமலைநாதன்; சிராப்பள்ளி நாதன், 162 மட்டுவார்குழற் பெண்மாலைக்கிசைந்த மணவாளன் முதலிய சிவபெருமானுக்குரிய பெயர்களும், 162 மட்டுவார்குழற்பெண் எனத் தேவியின் திருநாமமும் இந்நூலிற் கூறப்பட்டிருக்கின்றன. தாயானசெல்வரின் வரலாறு ஏனையநூல்கள் கூறுவதினும் இந்நூலில் நன்கு கூறப்பட்டிருக்கின்றது.

## தலம்

136 எண்ணுங் கடவுளரும் எவ்வுலகத்துள்ளவரும் நண்ணுஞ் சிராப்பள்ளி நன்னகரான், 133 வாளைறு பாய்ச்சாமல் மஞ்சளுக்குமிஞ்சிக்குந் தேனாறுபாய்ச்சுஞ் சிராமலையான் என்பனவற்றால் தலப்பெருமை கூறுகின்றார்.

## தீர்த்தம்

138 "சீலமறிந்துவருந் தெய்வம்போற் றானுதவும் காலமறிந்துவரும் காவிரியான்", 166 "நன்றுடையான்" என்பனவற்றால் அத்தலத்துக் காவிரியாறும் நன்றுடையான் தீர்த்தமும் நன்றாகக் கூறப்பட்டிருக்கின்றன. 166 "நன்றுடையான்" தீர்த்தம் கீழ்த்திசையிலுள்ளது. இதுபோலவே தென்றிசையிலுள்ளது "தீயதில்லான்" தீர்த்தம். "நன்றுடையானைத் தீயதில்லானை" எனவரும் இறைவனைக்குறிக்கும் தேவாரத்தொடர்கள் இவ்விரு புண்ணியத் தீர்த்தங்களையும் நமக்கு ஞாபகப்படுத்து



249. முதல் 258 முடிய தென்றல் முதலியன தலைவன் தன்னை வருத்தியமை கூறல். - பஞ்சரமாம் - பஞ்சரமாகிய (கூடு). என் கூட்டில் - எனது மனமென்னும் கூட்டில், தன்மனதைக் கூடு எனவும் தலைமகளைக் கிளியெனவும் கருதுகிறான் ஆதலால், பஞ்சரமா மென்கூட்டில்......கிளி என்றான். "தன்பொற் பகப்பஞ் சரக்கிள்ளை தன்னை யினக்கிளையோர்கள் தாரா திருந்தால் மரக்கிள்ளையேறிக் கரக்கிள்ளை கொண்டுவருவர் மின்னே" குற்றாலக்கோவை, பா. 113 என்கூடு - எனது உடலாகிய கூடு எனவும் கிளி - எனது உயிராகியகிளி எனவும் உரைத்தலுமொன்று. "குடம்பை தனித் தொழியப் புட்பறந்தற்றே" என்னும் குறளடி நோக்குக.

250. தென் தலைநின்று - தென்றிசையிலிருந்து. தென்றலை - தென்றற்காற்றை; இதுயமகம்.

251. வாருதியோ - கடலோ; வாரிக்கொள்கிறாயோ.

252. அன்று இலை - அப்பொழுது (முன்பு) அலறவில்லை. அன்றிலை - அன்றிற் பறவையை. அலம் - சஞ்சலம். வந்தேன் - அடைந்தேன்.

256. கண்ணி-பறவைகளை யகப்படுத்தும் கயிறு (வலை). கலை-மான்.

258. பரவை - கடல்.

263. முத்தாடும் - கொஞ்சுகின்ற. முத்தம் - முத்து.

264. உலகவழக்கு.

272. கரும்பனை - மன்மதனை. கரும் பனை - கரியபனை.

274. பெண்ணை - பெண்ணொருத்தியை; பனைமடலை. "பெண்ணை வெட்டிச் சாய்த்தொருவன் பெண்ணாசையான் மடலைப் பண்ணையமைத்த பரியாக்கி" (மதனவித்தாரமாலை.) "கூறொரு பெண்ணையே கூடவேண்டுவோர், வேறொரு பெண்ணையே வெட்டுவார் கொலோ" (அருணைக்கலம்பகம்.) "கடற்கரைப் பெண்ணையூர்ந்து நம்மூர் வருவேன்" குற்றாலக்கோவை பா. 113.

278. மாலிகை - மாலை. ஆனந்ததாண்டவன் - ஆனந்த நிருத்தம் புரியும் சிவபெருமான்; "ஆனந்தத் தாண்டவனைப் போலே தலைப்பட்டு" (தெய் - சித்திரமடல்).

281. மோகபரிபாலனன் - காமத்தைப் பாதுகாக்கும் மன்னவன்; "மாண்டமதன் பாங்காம் சமயபரிபாலன்." (தெய் - சித்திரமடல்) குயில் சின்னம் - மன்மதனுக்குரிய குயிலாகிய காளமென்னும் வாத்தியம்.

283. வாரி - கடல். காசிவிடம் - கரியவிடம். சோரி - இரத்தம்.

284. கைநாகம் - யானை. பைநாகம் - பாம்பு.

285. காமகலைவல்லார் - மதனநூலில்வல்ல பெண்டிர்கள். "கணிகையர் முகத்திற் கூறுங் காமனாகமங்கள்" (திருக்குற்றாலப் புராணம்.)

குறிப்புரை முற்றுப்பெற்றது.

## தாயுமானவர் மடல் குறிப்புரை

## பிழை - திருத்தம்.

| கண்ணி எண். | பிழை. | திருத்தம். |
|---|---|---|
| 5. | இரத்தினக்கிரீடம் | பொற்கிரீடம் |
| 80. | தலை | தலைமை |
| 91. | நானூற்று | புறநானூற்று |
| 98. | கிலமுதலிய | கிலமுதலிய |
| 121. | அறுக | அறுகு |
| 131. | வருத்த | வகுத்த |

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம்.

# ஆதீனக்கோயில்களில் சித்திரைத் திருவிழா.

திருக்கடவூர், திருப்பனந்தாள், திருவையாறு, சீகாழி ஆகிய தேவஸ்தானங்களில் 1—5—49 தொடங்கி நடைபெற்றது. ஆங்காங்கும் ஆதீனப்புலவர் பெருமக்களைக் கொண்டும், மற்றையோரைக் கொண்டும் சொற்பொழிவுகள் கதாகாலக்ஷேபம் முதலியன நடத்தப் பெற்றன. அவை வருமாறு:—

கடவூரில்:- 2—5—49-ல் சென்னை குஞ்சிதபாதம் பிள்ளை 'புனிதவதியார்'; 3—5—49 ல் ஆதீனக் கல்லூரிமாணவர் S. குருசாமி 'சங்க இலக்கியத்திற்கண்டசமயம்' 4—5—49ல் திருவையாறு ராமகோவிந்தசாமிப் பிள்ளை 'மூர்த்தி தலம் தீர்த்தம்'; 5—5—49ல் தருமபுர ஆதீனம் மீ. சுந்தரம் பிள்ளை, 'திருக்கோவையார்'; 6-5-49ல் அண்ணாமலைநகர் ஜி. சுப்பிரமணியப் பிள்ளை M.A., B.L. 'உயர்ஞானத் திருமொழி'.

திருவையாற்றில்:— 2—5—49ல் மன்னார்குடி, விஜயராகவாச்சாரியார் & பார்ட்டி 'பார்வதிகல்யாணம்';3—5—49ல் ஆரணி முத்து, சு. மாணிக்கவாசக முதலியார் 'திருவாசகம்'; 4—5—49ல் வை. குஞ்சிதபாதம் பிள்ளை 'அப்பரும் ஐயாறும்'; 5—5—49ல் நாகை, வை. மு. சண்முக தேசிகர் 'கேபுலி'.

திருப்பனந்தாள்:— 2-5-49ல் ஜி சுப்பிரமணிய பிள்ளை M.A.,B.L. 'நன்மைபெருகு நமிநந்தி'; 4—5—49ல் S. விஜயராகவாச்சாரியார், & பார்ட்டி 'கலையர்கதை'; 5—5—49ல் பாலகவி, வே. இராமநாதன் செட்டியார் 'நால்வர்வகுத்த நன்னெறி'; 6—5—49ல் காஞ்சிபுரம் க. வச்சிரவேலு முதலியார் B.A., L.T., 'திருப்பாசுரம்'

# தருமபுர ஆதீனத்திற்கு மாணவர்கள் உல்லாசப் பிரயாணம்

மாயூரம் நகராண்மைக்கழகத் தொடக்கப்பள்ளி மாணவர் மாணவிகள் ஆசிரியர்களுடன், 7—5—49 அன்று உல்லாசப் பிரயாணமாக ஆதீனத்திற்குவந்தார்கள். அவர்களுக்குச் சிற்றுண்டிகள் அளிக்கப்பட்டபின், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருமுன்பு அவை தொடங்கிற்று. மாணவமாணவிகள் கும்மி, கோலாட்டம், டான்ஸ், ஆசனம், காமிக், தசகுமார், அபிநயம் முதலியன செய்து காட்டியதோடு 'சிவலீலா' என்னும் பக்தி நாடகத்தையும் திறம்பட நடித்துக்காட்டினார்கள். சுமார் மூன்று மணி நேரம் நிகழ்ச்சிகள் நடந்தன. முடிவில் மாணவ மாணவிகளுக்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் பரிசுகள் வழங்கி ஆசீர்வதித்ததோடு ஆதீன வெளியீடுகளையும் அவர்களுக்கு வழங்கினார்கள்.

Regd. No. M. 4454. GNANASAMBANDAM

மதிப்புரை.

## திருக்குறள்மணி

சென்னை அரசாங்கம், தமிழர் மறைநூலாகிய திருக்குறள் மக்களிடையே பரவவேண்டும் என உயர்தரக்கலாசாலைகளில் பாடமாக அமைத்தது. அக்குறள்களுக்குப் பலர் பலவாறு உரைகாண முற்பட்டனர். எல்லார் நோக்கமும் எளிய இனிய உரைகாண வேண்டுமென்பதே. காண்பதில் வெற்றிகண்டவர் சிலரே. உரைப் போக்கு மாணவர்கட்குப் பயன்தரத்தக்கதாக இருத்தல்வேண்டும். ஒன்று நடையமைப்பு. இரண்டு இலக்கண அமைதி. மூன்று சொல் திறன். இம்மூன்றையும் வகுக்கும் உரைகள் புது முயற்சியில் பெரும்பாலும் இல்லை. ஆனால் அதில்வெற்றிகண்டது திருச்சி பொன்னையா உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர். வித்துவான், திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள் உரை. திருச்சி பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடுகள் அவை. தமிழுலகம் அவைகளைப்பெற்றுப்பயனெய்துமாக.

II-ம் பாரத்திற்குரியது விலை 0—3—6; III-ம் பாரத்திற்குரியது விலை 0—4—0; IV-ம் பாரத்திற்குரியது விலை 0—4—6, V-ம் பாரத்திற்குரியது விலை 0—5—0.

## திருமுறைப் பூஜைவிதி

இதுவும் திரு. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள் இயற்றியது. திருமுறைகளைப் பூசிக்குமுறை விளக்கமாகத் தரப்பட்டுள்ளது. புள்ளிருக்குவேளூர் கட்டளைவிசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் ஆணைப்படி வெளிவந்துள்ளது. விலை 0 3 0. வேண்டுவோர், 'கட்டளை சுவாமிகள்; வைத்தீஸ்வரன்கோயில் P. O. என்றவிலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayavaram) 9—5—1949.


# ஞானசம்பந்தம்

92

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு. 8-7

இதழாசிரியர்:- தருமபுர ஆதீனம் ...ங்கத் தம்பிரான்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 29 JUN 1949 MADRAS



தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த

ஆச்சாள்புரம் திருவெண்ணீற்றுமை ஆலயம்

தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## ௪-வது ஆண்டு குருபூஜை விழா

## 5—6—49

குருமூர்த்த ஆலயத்தின் முன்னிலையில் 4—6—49 முதனாளே விழா தொடங்கப்பெற்றது. மாலை சொற்பொழிவில் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் குருபக்தியை விளக்கினார். ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் பண்ணரின் தமிழைப்பற்றிப் பேசினார். ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் சிவாநுபூதிச்செல்வர்களே பெரியவர் என்று தம சொற்பொழிவில முடிவுகண்டனர்.

குருபூஜை விழா அன்று காலை 8-மணிக்கு, குருமூர்த்தங்களுக்குச் சிறப்புற அபிஷேக ஆராதனைகள் நடந்தன. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களிடம் யாவரும் திருநீற்றுப்பிரசாதம் பெற்றனர். காலை 9-மணிக்குத் தருமபுர ஆதீனக் கலைநிலைய இசையாசிரியர், திரு. M. சுப்பிரமணிய முதலியார் & பார்ட்டியாரால் தக்க இன்னிசைக் கருவிகளுடன் "திருத்தொண்டர் கீதங்கள்" பாடப்பட்டன. காலை 11-மணிக்கு ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் எறிபத்தர் பத்திச்செயலை விளக்கினர். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளால் குருபரன் என்ற பொருள்பற்றிப் பேசப்பட்டது. பிற்பகல் 1-மணிக்கு மாகேசுவரபூசை நடைபெற்றது.

மாலை 4-மணிக்கு மீண்டும் சொற்பொழிவுகள் தொடங்கிற்று. விழா மலராகிய திருத்தொண்டர்கீத அரங்கேற்றுரையை அந்நூல் ஆசிரியர் திருவாசகம் திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் B.A., B.L., அவர்கள் நிகழ்த்த, ஸ்ரீமத் கந்தசாமித் தம்பிரான் சுவாமிகள், வித்வான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள், வேலூர் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆகியோர் அந்நூலைப் பாராட்டிப் பேசினர். இரவு 7-மணிமுதல் ஸ்ரீமதி. N. C. வசந்தகோகிலம் & பார்ட்டியாரால் இன்னிசை விருந்து நடைபெற்றது. அவ்விருந்தினை உண்ட மக்கள் முன்னிலையிலேயே ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஆக்ஞைப்படி ஸ்ரீமத் கந்தசாமித் தம்பிரான் சுவாமிகள் அவ்வம்மையாரின் இசைத்திறத்தைப் பாராட்டிப் பேசி "கான சூடாமணி" என்றபட்டத்தை அளித்தனர். இரவு 10-மணிக்குக் குருமூர்த்த வழிபாடு நடைபெற்றது. வழிபாடு முடிந்ததும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அனைவர்க்கும் விழா மலர் வழங்கி, அருட்பிரசாதமும் அளித்தார்கள்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2? JUN 1949
MADRAS

சிவமயம்
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 8 | விரோதிஞு வைகாசிமீ JUNE 1949. | இதழ் 7

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

## இன்றைய கல்வி நிலை

மாலையைப் பாகவதர் கழுத்தில் போட்டால் மூன்று மணி நேரமாவது கழுத்தைவிட்டுக் கழற்றாமல் இதழ்கள் உதிர்ந்து நாலும் நாரும் மிஞ்சும்வரை அணிந்துகொண்டே கதை பண்ணுவார். சமயப் பிரசாரகரோ 'கோவிந்தநாம சங்கீர்த்தனமாவது' 'அரஹர நமப் பார்வதீபதயே' யாவது போட்டு முடியும்வரை மாலையின் மணத்தை நுகர்வார். அரசியல் மேடைப் பேச்சாளர் பல மாலைகள் வரிசையாக வந்து விழும்வரை அணிந்திருந்து குவியலானதும் மாலைக்கணக்கால் மதிப்புக் கணக்கைத் தெரு அறிய விளம்பரப்படுத்துவார். சில அரசியல் அதிகாரிகளோ போடுவதற்கு முன்பு கையில் வாங்கிக் கண்ணில் ஒத்திக்கொண்டு, மேஜை அல்லது நாற்காலிக்குச் சாத்தி அகமகிழ்வார்கள்.

நமது அநுமந்த மூர்த்திகள் கையில் கொடுத்தாலோ மாலையின் மணத்தை-அழகைப் பார்ப்பதற்குப்பதிலாகப் பிய்த்துப் பிடுங்கிக் கடித்துக் கசக்கிப் பார்த்துவிடுவார்.

கல்வி ஒரு மாலை போன்றது. அது இப்பொழுது படாத்பாடு படுகிறது...............

நாட்டுக்குக் கல்வி தேவை. கல்வி சுமார் பத்தாண்டு நல்ல முறையில் வளர்க்கப்படுமானால் அழியாமலே பலன் கொடுக்கும் கற்பக விருட்சம் ஆகும். கற்பக விருட்சத்தில் மக்கள் வெறும் மட்டையை, இலையை, கிளையை எதிர் பார்ப்பதில்லை. மலரை, காயை, கனியை எதிர் பார்க்கிறார்கள்.

அதனால் கல்விக்கற்பகத்தை எப்படி வளர்க்க வேண்டும். வீணாக கொழுத்துத் தழைக்கவிடுவதுமட்டும் வளர்ப்பு முறையாகாது.

கல்விக்கற்பகத்திற்கு கருத்தும், கருத்தால் விளைந்த பொருளும், பொருளால் விளைந்த இன்பமுமே மலரும் காயும் கனியும். இவையில்லாத கல்வி எதற்கு? ஒரே பலனையடையப் பலவழிகள் தேவையா? கருத்துவளர்ச்சியடைய பலமொழிகள் தேவையா? ஒன்றன் வாயிலாகவே உயரிய கருத்துக்களைப்பெற்று, அதனை வளர்க்கப் பல மொழிகளினுதவியை நாடலாம். கருத்தாகிய வித்துக்கே பல மொழிகளாகிய பலவகை மரங்களை விரும்பலாமா?

கல்வி என்பது கருத்தா? மொழியா? கருத்து உயிர். மொழி உடல். மொழி கருத்தையுணரச் சாதனமாகுமே யொழிய அம்மொழியே அறிவாகாது. கருத்துக்களை எந்தமொழியின் வழியாகவும் அடையலாமாயினும் சொந்தமொழியின்மூலம் அடைவதைப்போலச் சுலபமாகாது என்பது நிச்சயம்.



209158

இதுவரை யிருந்தது அன்னியமொழி அரசாங்கம். அன்னியர்க்கு ஆட்சிமுறை நடத்தக் கணக்காளர்கள் தேவை. அதற்காக மொழியை வளர்த்தார்களே யல்லாமல் கருத்தை வளர்க்கவில்லை. மக்களுடைய ஆயுட் காலத்துள் ஒரு காற்பங்கு மொழியை வளர்க்கவே போக்கிவிட்டால், கருத்தை வளர்ப்பது எப்போது? சிறியவும், பெரியவுமாகிய கருத்துக்களைச் சொந்தமொழியின் மூலமாகப் புகுத்திவிட்டால் கருத்துத்தாகம் வேறு எந்த மொழியில் இக்கருத்து இருக்கிறதென்று தேடத் தூண்டிவிடும். ஆதலால், தாய்மொழியிற் போதனை எந்த சாத்திரத்திற்கும் பொருத்தமானதென்று ஒரு அரசாங்கம் நினைத்தது. அதனால் நாட்டுக்கு வேண்டிய பாடத் திட்ட முறைகளையும் வகுத்துக்கொடுத்தது. 2-ம் பாரத்தில் அந்நிய மொழி போதிக்கலாம் என்றது.

இன்றைய அரசாங்கம் அதில் சில மாறுதல்களைச் செய்ய இருக்கிறது. இப்படிக் கல்விமுறையை அடிக்கடி மாற்றுவது முறையாகாது. ஏனைய பொருளாதார, விவசாய பொது மராமத்துத் திட்டங்களில் விளைகின்ற மாறுதல்களால் சில தீமைகள் விளைந்தாலும் அது அரசாங்கத்தின் பொருளாதாரத்தைச் சிறிது பாதிக்குமே யல்லாது பெரிய தீமையை விளைவித்துவிடாது.

கல்விமுறையை அடிக்கடி மாற்றுவதால் நாட்டின் அறிவு பாதிக்கப்பட்டு ஒவ்வொரு தலைமுறையின் அரசியலமைப்பையே மாற்றிவிடுமாதலால் சற்று நிதானித்து, மாற்றங்களை அவ்வத்துறையில் உள்ள தக்காரோடு நன்காலோசித்துச் சீர்திருத்தம் வழங்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறோம்.

சமயக்கல்வி சண்டையை வளர்க்கும். மக்களுக்குள் பிளவையுண்டுபண்ணும். அதனால் அது கல்வி நிலையங்களில் வேண்டாமென்று சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்கின்றவர்களே மற்றொரு பக்கத்தில் நாத்திகம்

பரவுகிறது என்கிறார்கள். இளைஞருள்ளத்திலே பதிக்கப்படாத-கல்விநிலயத்திலே காட்டப்படாத சமயவுணர்ச்சி பின்னர் பெரியவர்களுக்கு எப்படிவரும். ஆதலால் தொடக்கநிலைப் பள்ளிமுதல் உயர்தரக் கல்லூரிவரை சமயக் கல்விக்குப் போதுமான அளவு இடமிருத்தல் வேண்டும்.

ஆனால் சைவம், வைணவம், இஸ்லாமியம் முதலிய வேறுபாடில்லாமல் கடவுளொருவருண்டு, அவரியல்புகளிவை, கடவுளுக்கும், நமக்குமுள்ள தொடர்புகளிவை, நாம் கடவுளை வணங்கவேண்டிய அவசியங்கள் இன்னவென்பதைமட்டும் அறிவிக்கக்கூடிய சமய போதனை நமக்கு இன்றியமையாதது. அதுதான் நமது கல்வியில் முதலிடம் பெறுதல் வேண்டும். இவற்றையெல்லாம் நன்கு ஆலோசித்து நமது அரசாங்கம், கணத்துக்கொரு உத்தரவிடாமல், நாட்டுமொழிமூலமே எல்லாப் போதனைகளையும், பயிற்றுவித்தல்வேண்டும். சமயக்கல்விக்கு முதலிடம் கொடுக்கவேண்டும்.

அந்தந்தநாட்டுத் தாய்மொழியில் மக்களுக்குக் கருத்துக்கள் தோன்றுகின்றன: உருவாகின்றன. உரையாகி வெளிவருகின்றன. வேற்றுமொழியில் பேசவேண்டுமென்ற கட்டாயத்தினாலேயே மொழிகளை மாற்ற நேரிடுகிறது. எவ்வளவு படித்தவர்களுக்கும் மொழிமாற்றவகையில் மனக்களத்தில் பெரும் போராட்டம் நிகழாமலில்லை. பொருளுக்கேற்ற சொல் அமைவதில்லை. அப்படியமைந்தாலும் கருத்து ஊற்றம் இருப்பதில்லை. இவ்வளவு போராட்டத்தினிடையே வேற்றுமொழியின் விளக்கம் வெளிவருகிறது. இந்நிலையை, எஸ், எஸ், எல், ஸியில் தேர்வுற்ற மாணவர்கள் நன்கறிவார்கள். என்றைக்கு மொழிதவிர ஏனைய பாடங்களையெல்லாம் தாய்மொழியிலேயே எழுதலாம் என்ற உத்தரவுவந்ததோ அந்நாள்முதலே தேர்வுறும் மாணவர்கள் தொகையும் பெருகிக்கொண்டேவருகிறது. ஆதலால், தாய்மொழியின்மூலமே போதிக்கவேண்டும்.



பாடத்திட்டங்களிலும், புத்தகங்களிலும் சரியான முறையைப் பின்பற்றவேண்டும். அடிக்கடி புத்தகங்களை மாற்றுவதால் மாணவர்கள் பொருளாலும், தகுதியாலும் தடுமாற நேரிடுகிறது. உதாரணமாக ஒரு ஆசிரியர் தமிழிற்கு ஐம்பது நூறு சொல்லாகப் புதியசொற்களைச்சேர்த்துப் பாடப்புத்தகம் தயாரிப்பார். பாடப்பொருள்களையும் அங்ஙனமே சேர்ப்பார். முதல் இரண்டாம் தரங்கட்கு ஒருதொகுதிப் புத்தகத்தைப் படிப்பித்து, 3, 4ந் தரங்கட்கு, வேறுதொகுதிப் புத்தகத்தைப் படிப்பித்தால் இந்தத்தகுதி மாறிவிடக்கூடும். ஒரு சமயம் படித்தபாடத்தையே படிக்கவும், கற்ற சொற்களையே மீட்டும் கற்கவும் நேருகிறது. இதனால் மாணாக்கர் தரம்உயர்வதில்லை. ஆதலால் பாடப்புத்தகங்களைத் தரத்திற்குத்தரம் மாற்றுவது கூடாததொரு செயலாகும்.

---

# காஞ்சிப்புராணத் துதிப்பாடல்

[வித்துவான், எஸ். அரங்கசாமி, தமிழாசிரியர், திருச்சி]

### விநாயகர் காப்பு

இருகவுட்டுளை வாக்குகார் கடங்கள் இங்குலிகக்
குருநிறத்திழி தோற்றமுன் குலாய்த்தவழ்ந் தேறிப்
பரிதிமார்பினிற் சமனொடு காளிந்தி பயிலுந்
திருநிகர்த்தசீர் ஐங்கரக் களிற்றினைச் சேர்வாம்.

(இ-ள்) இருகவுள் துளை வாக்கு கார் கடங்கள் - இரண்டாகிய கன்னங்களிலுள்ள துளைகளின் வழியாகக் கொட்டுகின்ற கரிய மதநீர்; இங்குலிக குருநிறத்து - சாதிலிங்கம்போன்ற நிறத்தினையுடைய மார்பினிடத்து; இழிதோற்றம் - ஒழுகுகின்ற காட்சியானது; முன்குலாய் தவழ்ந்து ஏறி - முன்னர் விளங்கித்தவழ்ந்து மேலே ஏறி; பரிதிமார்பினில் சமனொடு காளிந்தி பயிலும் - சூரியன் மார்பில் யமனோடு காளிந்தியென்னும் பெண்ணானவள் பழகுகின்ற; திருநிகர்த்தசீர் ஐங்கரக் களிற்றினை - அழகையொத்த சிறப்பினையுடைய ஐந்துகைகளையுடைய விநாயகக்கடவுளை; சேர்வாம் - இடையறாது தியானிப்பாம்.

விநாயகர் - கடவுளர்க்கெல்லாம் மேலானவர். காஞ்சியிலிருக்கின்ற விநாயகர் விகடசக்கர விநாயகர் எனப்படுவர்.

### சபாநாயகர்

சங்கேந்து மலர்க்குடங்கைப் புத்தேளு மறைக்கோவுந்
தழல்கால் சூல-
மங்கேந்து மம்மானுந் தத்தமது தொழில்தலைநின் -
றாற்றச் செய்தோர்
பங்கேந்தும் பெருமாட்டி விழிகளிப்ப இருமுனிவர்
பணிந்து போற்றக்
கொங்கேந்து மணிமன்றுள் குனித்தருளும் பெருவாழ்வைக்
குறித்து வாழ்வாம்.

(இ-ள்.) சங்கு ஏந்தும் மலர் குடங்கைப் புத்தேளும் - பாஞ்சசன்யம் என்ற சங்கைத் தாங்கிய தாமரை மலரையொத்த அகங்கையினையுடைய தேவராகிய திருமாலும்; மறைக்கோவும் - வேதத்தின் தலைவனாகிய பிரமதேவனும்; தழல்கால்சூலம் அங்கு ஏந்தும் அம்மானும் - நெருப்பைக் கக்குகின்ற முத்தலைச் சூலத்தைத் தாங்கியுள்ள அந்தத் தலைவனாகிய உருத்திரனும், தத்தமது தொழில் தலைநின்று ஆற்றச்செய்து - ஆக்கல், அளித்தல் அழித்தல் என்ற முத்தொழில்களில் தங்கள் தங்கள் தொழிலை முதன்மையாக நின்றுசெய்து; ஓர் பங்கு ஏந்தும் பெருமாட்டி விழிகளிப்ப - ஒரு பக்கத்திலே தாங்கிய உமையம்மையார் கண் களிகூர; இரு முனிவர் பணிந்துபோற்ற - பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்ற இருவருந் தலையால் வணங்கி வாக்கால் துதிக்கவும்; கொங்கு ஏந்தும் மணிமன்றுள் - பொன்னைத் தாங்கிய அழகியசபையில் (பொன்னம்பலத்தில்); குனித்தருளும் பெருவாழ்வை - நடித்தருளுகின்ற பெருஞ்செல்வனாகிய சிவபெருமானை; குறித்துவாழ்வாம் - தியானித்து வாழக்கடவோம்.

### ஏகம்பநாதர்

தணந்தபெருந் துயர்க்கடல்மீக் கூர்தலினால்
மலைபயந்த தரள மூரல்
கனங்குழையாள் புரிபூசை முடிவளவுந்
தரியாமல் இடையே கம்பை,
அணங்கினைத்தூ தெனவிடுத்து வலிந்திறுகித்
தழீஇக்கொள்ள வமையாக் காதல்



மணந்தருளிக் குறிபூண்ட ஒருமாவின் பெருமானை
வணக்கம் செய்வாம்.

(இ-ள்) தணந்த பெரும் துயர்க்கடல் மீக்கூர்தலினால் - தன்னினின்றும் நீங்கிய பெரிய துன்பமாகிய சமுத்திரம் மிகுதலினாலே; மலைபயந்த தரளமூரல் கனங்குழையாள் புரிபூசை - இமயமலையானது பெற்ற முத்துப்போன்ற பற்களையுடைய பொன்னாலாகிய காதணியை யுடைய உமையம்மையார் செய்கின்ற பூசையானது; முடிவளவும் தரியாமல் - முடியுமளவும் பொறாமல்; இடையே - அப்பூசையானது முடிவதற்குள்ளே; கம்பை அணங்கினைத் தூது எனவிடுத்து - கம்பாநதி என்னும் பெண்ணைத் தூதாகவிடுத்து; வலிந்து இறுகித் தழீஇக்கொள்ள - வலிய இறுகும்படி தழுவிக்கொள்ள; அமையாக்காதல் - தணியாத காதலை மேற்கொண்டு; மணந்து அருளி - கூடி; குறிபூண்ட - வளைத்தழு[illegible] மார்புத்தழும்புங் கொண்ட; ஒரு மாவின் பெருமானை - ஒற்றை மாமரத்தின் கீழுள்ள பெருமையையுடைய ஏகாம்பரநாதனை வணக்கம் செய்வாம் - துதிப்போம்.

மன்றிலாடு மன்னவனை வணங்குவோம் என்ற ஆசிரியர் இங்குச் சிறப்பாக ஏகாம்பரநாதரை ஏத்துவோம் என்று கூறியுள்ளார்.

---

## பல்கலைக் கழகப் பரீக்ஷையில் தேர்ந்தனர்

திருச்சி மௌனமடம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளும், திருவாரூர் இராஜாங்கக்கட்டளை கட்டளை விசாரணை ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளும் இவ்வாண்டு (1949) தமிழ் வித்துவான் Final தேர்வில் தேர்ச்சிபெற்றுள்ளார்கள். ஆதீனக் கல்லூரியின் சார்பில் முதனிலைவகுப்பு Preliminary தேர்வுக்கு அனுப்பப்பட்ட தமிழ்ப்பகுதியில் எழுவர் சம்ஸ்கிருதப்பகுதியில் மூவர் ஆக பதின்மரில் ஒன்பது மாணவர்கள் தேர்ச்சியுற்றிருக்கிறார்கள். அதில் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகளும் ஒருவராவர். புகுமுகவகுப்பு Entrance தேர்வுக்குச் சென்ற மாணவர்கள்தேர்ச்சிவிபரம் அடுத்த இதழில்வெளிவரும்.

---

உ

குருபாதம்

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்ததிபர்
## ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள்

தருமபுர ஆதீனம் நான்காவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடம் ஞானோபதேசம்பெற்றுப் புலவர் சிகாமணியாய்த் திகழ்ந்தவரும், செந்திலாண்டவன் திருவருள் நிரம்பப்பெற்றவரும், பற்பல அற்புதச் செயல்களைச்செய்து சிவத்துக்குமேல் தெய்வம் இல்லை என்பதை நிருபித்தவரும், கந்தர்கலி வெண்பா முதலாகிய பல அருள்நூல்களைச் செய்தவருமாகிய குமரகுருபர சுவாமிகளின் 261ம் ஆண்டு நினைவுநாள் காசி, ஸ்ரீவைகுண்டம், திருப்பனந்தாள் ஆகிய இடங்களில் 13—6—49ல் கொண்டாடப்பெறும்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்ததிபரால் நிறுவப்பெற்றுள்ள பனசை ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி சார்பில் இசைத்தமிழ் தருமமாக மேற்படி தினத்தில், திருமுறைத் திருவிழா கொண்டாடப்பெறும். அன்று இரவு 9 மணிக்குத் திருமுறை ஊர்வலம் நிகழும். அப்போது இன்னிசைத்தமிழ் வாணவர்கள் பலர் திருமுறைப்பாராயணம் நிகழ்த்துவார்கள்.

**நினைவு வெளியீடுகள்:—** முதுமொழிமேல் வைப்பு, சிவஞானசித்தியார் (இந்தி, ஆங்கில மொழிபெயர்ப்புக்களுடன்), ஒன்பதாந் திருமுறை (திருவிசைப்பா, திருப்பல்லாண்டு), ஏழாந்திருமுறை (சுந்தரர் தேவாரம்), கந்தர்கலி வெண்பா உரையுடன், காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி.

---

# ஏது மெய்?

[ வித்துவான். தி. பொ. பழனியப்பபிள்ளை, B.O.L. திருப்பதி. ]

நமது தமிழ் மொழியில் வழங்குகின்ற சைவசாத்திர நூல்களுள் மிக்க விரிவும் சிறப்பும் வாய்ந்தது அருணந்தி சிவாசாரியார் செய்தருளிய சிவஞானசித்தியார் என்பதும், அது பரபக்கம் சுபக்கம் என்ற இருபிரிவாய் அமைந்து பிறநெறிகள் அவநெறிகளெனப் பழித்து ஒழித்துத் திருநெறியாவது சிவநெறியே என நிறுவுவதாக உள்ளது என்பதும் தமிழ்க்கல்விவல்லார் யாவரும் அறிப. இந்நூல் வடமொழியில் சமயசாத்திரநூல்கள் கண்டனம், மண்டனம், தூஷணம், பூஷணம், நிராகரணம், ஸ்தாபனம் எனப் பலதிறமாய் வழங்குவன போன்று பிறமதப் பழிப்பும் தன்மதக் கொழிப்பும் கொண்டதாக உள்ளது. இந்நூல் பிறப்பதற்கு முன்னரே தமிழ்மொழியில் குண்டலகேசிஎன்ற பௌத்த சமயவாதநூலும், நீலகேசி என்ற சைனசமயவாத நூலும் நிலவின. நீலகேசிக்குச் சிறந்த உரையும் உண்டு. இதுபோன்று நம் சிவஞானசித்தியார், திருவருணலம் கைவந்தபெரியார் அறுவர்எழுதிய உரைகளையுடைத்தாகும். இவருள் முதல்வராகிய மறைஞானதேசிகர் "ஒருகோட்ட னிருசெவியன்" என்று தொடங்கும் இந் நூல் முதற்காப்புச்செய்யுளுக்கு வரைந்த உரையின் இறுதிப்பகுதியில் "இதனுடைய பரபக்கமானது சங்கராசாரியார்செய்த சர்வதரிசன சங்க்ரஹத்தும் சர்வமதோபந்யாசத்தும், இராமநாதாசாரியர் பண்ணின பரமதநிராகரணத்தும் சர்வான்மசம்பு பண்ணின சித்தாந்த தீபிகையினும், அகோர சிவாசாரியார் பண்ணின சித்தாந்தார்த்த சமுச்சயத்தும் பார்த்து அவைகளின் கருத்தைப்பற்றிச் செய்ததென அறிக" என்று வரைந்து பரபக்கத்துப்பொருள் வடமொழிக்கண் வழங்கும் சமயவாதநூல்களை அடிப்படையாகக்

கொண்டு அமைந்தது என்று புலப்படுத்தியுள்ளனர். பிற உரைகாரர்கள் இவ்வாறு கூறினாரில்லை.

இவ்வுரையாசிரியர் சுட்டிய வடநூற் சமயவாத நூலாசிரியருள் அகோர சிவாசாரியர் என்பாரும், சர்வாத்ம சம்பு என்பாரும் கி. பி. 12-ம் நூற்றாண்டினர் என்பதும், இராமநாதாசாரியரும் அவர்கள் காலத்துக்குச்சிறிது முன்னிருந்தோர் என்பதும், சர்வதரிசன சங்கிரகம் சர்வமதோபநியாச நூலாசிரியரெனக் காட்டிய சங்கராசாரியர் ஆகிய ஸ்ரீ வித்தியாரணிய சுவாமிகள் கி. பி. 14-ம் நூற்றாண்டினர் என்பதும் வடநூல் காலவரையறையறிந்த புலவர் கூற்றாகும். கி. பி. 13-ம் நூற்றாண்டினிறுதியில் சைவசாத்திர முதலாசாரியராகிய மெய்கண்டதேவநாயனார் விளங்கினர் என்பது கல்வெட்டுச்சான்றுகொண்டு கண்டது. சந்தானாசாரியருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியர் கி. பி. 14-ம் நூற்றாண்டில் விளங்கியவரென்பது அவரியற்றிய சங்கற்ப நிராகரண நூற்குறிப்பினால் அறியப்படுவது. மெய்கண்டாருக்குப் பின்னர் சந்தானாசாரியராகியும் உமாபதிசிவனார்க்கு முற்பட்ட ஆசாரியருக்கு ஆசாரியராகியும் விளங்கிய அருணந்தி சிவாசாரியார் இவர்கட்கு இடைப்பட்ட காலத்தவரென்பதும், மேற்கண்ட நூற்றாண்டில் வழங்கிய வடநூல்களைப் பார்வையிட்டறிந்தவரென்பதும் நன்கு தெளியப்படும். இவர் தம்நூலின் பரபக்கத்துள் உலகாயதன் முதல் பாஞ்சராத்திரியீறாகப் பதினான்கு சமயவாதிகளின் கொள்கைகளைக்கூறி அவற்றிற்கு மறுதலையுரையும் கூறியுள்ளனர்.

சைவநூற் சமயவாதமும் கண்டனமும் இவ்வாறுளதாக, வைணவசமயாசாரியர்களும் இவ்வாறு கண்டன நூல்கள் இயற்றாது நிற்கவில்லை. நாவீறுடைய பெரியாராகிய நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு அமைந்த வியாக்கியானங்களுள் மிகச்சிறந்ததாய ஈட்டின் தொடக்கத்தில் உலகாயதிகன் முதல் ஏகாயநன் ஈறாகப்



பதினேழு சித்தாந்தங்களின் கொள்கைகளைச் சுருங்கக் கூறி "ஆக ஸித்தாந்தங்கள் பதினேழும் பாஹ்யங்களும் குத்ருஷ்டிகளுமாகையாலே வ்யர்த்தங்கள்" என்றுரைத்துள்ளனர். இவற்றுள் சைவமாகிய பாசுபதமும் ஒன்று. இதன் கொள்கை அவ்வீட்டில் 'பாசுபதன் - பரமாணுக்கள் ஜகத்துக்கு உபாதாநகாரணம், ஆகமஸித்தேச்வரன் நிமித்தகாரணம்: ஸம்ஸாரம் அநாதி: ஆகமோக்தமான கர்மாநுஷ்டானத்தாலே பசுபதிஸாரூப்யத்தைப் பெறுகை மோக்ஷம் என்றான்" என்று கூறப்பட்டுள்ளது. அவ்வீட்டின் அரும்பதத்திலும் 'இவ்விடத்தில் பஞ்சவிம்சதி தத்த்வவாதிகளான ஸாங்க்யர்: இத்தோடு ஈஸ்வரனையும்கூட்டி ஷட்விம்சதி தத்த்வவாதிகளான யோகிகள்: அந்த இருபத்தஞ்சோடே நியதி, காலம், ராகம், வித்யை, கலை, மாயை, சுத்தவித்யை, ஈஸ்வரன், ஸதாசிவன், சக்தி, சிவன்' என்கிற பதினொன்றையுங் கூட்டிக்கொண்டு முப்பத்தாறு தத்த்வமென்கிற பாசுபதர்" என்று பாசுபத சைவக் கொள்கை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவ்வீடென்ற பேருரையை நம்பிள்ளையாகிய தம்மாசிரியர்பாற்கேட்டு எழுதிட்டுவைத்த வடக்குத்திருவீதிப்பிள்ளை என்ற வைணவாசாரியர் நாம் மேற்குறித்த சைவாசாரியர்களின் நூல்களையும், இராமாநுசாசாரியர் காலத்து விளங்கிய அரதத்த சிவாசாரியர் அருளிய நூல்களையும் அறிந்தவராதல்வேண்டும்.

இவர் காலத்தவராகிய மற்றொரு வைணவ சமயாசாரியர் வேங்கடநாதரெனப் பெயர்சிறந்த வேதாந்த தேசிகரென்பார். இவர் நம் சைவாசாரியர்கள் வாழ்ந்த திருவெண்ணெய்நல்லூர், திருத்துறையூர் முதலிய ஊர்களுக்கு அண்மையில் உள்ள திருவயிந்திரபுரத்தே பன்னாள் தங்கியிருந்தோராதலால் அக்காலத்தெழுந்த சைவநூற் சிறப்புகளெல்லாம் நன்குணர்ந்தவரேயாதல் வேண்டும். இவர் பரமதபங்கம் என்ற பெயரால் ஒரு சமயகண்டன நூலியற்றியுள்ளார். இதன்கண் இவர்

சைவசமயம்பற்றி எடுத்துக்கூறும் கண்டன முறையை எளியேன் கண்டனன். அதனுண்மையை நாடியறிவதே ஈண்டு என் நோக்கம் ஆகும். அண்மையில் தேசிகப் பிரபந்தம் என்ற நூல் புதியபதிப்பு எய்தியது. அதன்கண் பரமதபங்கத்தின் தோற்றுவாயாகப் பதிப்பாசிரியர் "நம் ஸித்தாந்தத்தின்படி மூன்று தத்துவங்களை விளக்கிப் பரமதங்களைக் கண்டிப்பதன் அவசியத்தைக் கூறிப் பிற மதங்களில் பொதுவாயுள்ள தோஷங்களை வெளியிட்டு, சார்வாகமதம், நான்கு வகைப்பட்ட பௌத்தமதம், அத்வைதமதம், ஜைநமதம், பாஸ்கர-யாதவமதம், வையாகரணமதம், கணாதமதம், கௌதம மதம், மீமாம்ஸகமதம், ஸாங்க்யமதம், யோகமதம், பாசுபதமதம் ஆகியவற்றின் - முக்கியகொள்கையைச் சுருக்கிக் கூறிக் கண்டித்துப் பாஞ்சராத்திர சாஸ்திரத்தின் பெருமையைப்பேசியதாகக் காட்டியுள்ளார்.

வேதாந்ததேசிகர் பிறமதங்களைக் கண்டிப்பதன் பயன் கூறுமுகத்தால்,

"வெறியார் துளவுடை வித்தகன் றன்மையின் மெய்யறிவார்
குறியார் நெடியவ ரென்றொரு குற்றம் பிறர்க்குரையார்
அறியார் திறத்தி லருள்புரிந் தாரண நன்னெறியாற்
சிறியார் வழிக ளழிப்பதுந் தீங்கு கழிப்பதற்கே"

என்ற பாடலில் வைணவசமயியின் பெருநோக்கினைச் சுட்டிக்கூறிச் சிறு சமயிகளின் நெறிகளை ஆரணவழியாலழிப்பது அவற்றின் தீங்குகழிப்பதற்கே என நிறுவுகின்றார். பின்னர் சைவமதத்தைக்கண்டிக்கு முகத்தால் கீழ்க்கண்டவாறு பாடியுள்ளார்.

"சாது சனங்க ளெலாஞ்சச்சையெனுஞ் சலம்புணர்த்தார்
கோதம சாப மொன்றுற் றொடுங்கோலங்கள் கொண்டலைநிற்
பூதபதிக்கடி யாரென நின்றவன் பொய்யுரையால்
வேதமகற்றி நிற்பார் விகற்பங்கள் விலக்குவமே"



"மாதவனே பரனென்று வையங் காண
மழுவேந்தி மயறீர்க்க வல்ல தேவன்
கைதவமொன் றுகந்தவரைக் கடிய சாபங்
கருவியதா லதன்பலத்தைக் கருதிப் பண்டை
வேதநெறி யணுகாது விலங்கு தாவி
வேறாக விரித்துரைத்த விகற்ப மெல்லா
மோதுவது சூத்திரத்துக் கென்று ரைத்தா
னோதாதே யோதுவிக்கு மொருவன் றானே.

இவ்விரண்டு பாட்டினும் கூறியது பாசுபத மதத்தோற்றம் பற்றிய செய்தியாகும். இப்புராணவரலாற்றை அந்நூற் பதிப்பாளர் காட்டியவாறு கீழ்க்காட்டுகிறேன்.

(தொடரும்)

# சமய வாழ்வு

வித்துவான்: ந. இராமநாதன், புலவர்கல்லூரி, கரந்தை.

மல்லன்மாஞாலத்து மக்களுயிர், உடலொடு கூடி நின்றும், இருந்தும், கிடந்தும் இயங்கும் இயக்கம் வாழ்வெனப்படும். அவ்வாழ்வு தானொன்றெனத் தனித்து நிற்கும் தன்மையுடையதன்று. வாழ்வென்பதை யெண்ணின், அது மனிதனின் பலசெயற்றொகுதியேயாகும். இவற்றைப் பலவகையாகப் பிரிக்கலாம். மழவிளங் குழவிப்பருவத்து வாழ்வு; பால்வாய்ப் பிள்ளையாக அன்னைமடித்தலத்தும் கரதலத்தும் தவழும் வாழ்வு; குறுகுறு நடந்து சிறுகைநீட்டி இட்டும், தொட்டும், கவ்வியும் துழந்தும், பெற்றோரை மயக்கும் வாழ்வு; பின்னர் தச்சன் செய்த சிறு தேரினை ஊர்ந்தின்புறு விடினும் ஈர்ந்தின்புறும் இனியவாழ்வு; காலில் செருப்பை யணிந்து கல்விக்கழகத்தை நோக்கிச் செல்லும் வாழ்வென இளமை வாழ்வைப் பிரிக்கலாம்.

இவையெல்லாம் மக்கட்கு மகிழ்வும் உவகையும் தரும் பருவம். "குளித்து மணற்கொண்ட கல்லா இளமை, அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ" என்று முதுமைப்பருவத்து எண்ணி இரங்கும் சிறப்பு வாய்ந்தது. இக்காலத்து நிகழ்ச்சி யெல்லாம் கடலிடத்துக் கத்தும் தரங்கம் எடுத்தெறியும் கிழிஞ்சல்களையும் பிறபொருள்களையும் ஒக்கும். பார்ப்பதற்கு அழகுடைய தாயினும் அங்காடியில் அரைக்காசுக்குக்கூட அவை விலைபோகா: இளம் பருவம் மக்கள் கடைபோக வாழும் வாழ்வில் பொறுப்புடையதாகா! ஆதலின் அவற்றை விடுத்து மேற்காண்பாம்.

மேலே நாம் விரித்துக்கூறிய பருவத்திலேயே அரசியல் என்னும் கோட்பாடு இஞ்ஞான்றைய பிள்ளைகளிடம் வித்தூன்றப்படுகிறது. அவ்வித்துக்குத் தண்ணீராகவும் எருவாகவும் செய்தித்தாள்களின் செய்திகளும் சொற்பொழிவுகளும் அமைகின்றன. சிறு செய்திகளையும் பெருந்தலைப்பிட்டுத் திடுக்கிடச் செய்யும் நாட்டாள் கணக்கில. அதுபோலவே அரிய செய்திகளையும் ஆழ அமிழ்த்துவிடுவதில் அவை கைவந்த பயிற்சியுடையன. இளைஞரின் மனம் எதையும் சட்டெனப் பற்றும் இயல்பினது. அதன்கண் அவை பசுமரத்தாணியெனப் பதிந்துவிடுகின்றன. இளமையில் அமையும் மனப்பழக்கமும், செயற்பழக்கமும், முதுமை வாழ்விலும் அமைகின்றன. ஆகவே இஞ்ஞான்று இவர்கள் நன்மையெனக் கருதும் கோட்பாட்டிற்குச் சமயம் எவ்வகையில் மாறுபடுகின்றது என்பவற்றை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

இந்நாளைய அரசியல் அறிஞரும் பிறரும் முதற்கண் நம்நாட்டிற்குக் கல்வி இன்றியமையாததென வற்புறுத்துகின்றனர். இக்கருத்து நன்மையுடையது என்பது மலையிலக்காகும். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" கரும்பு அயில்தற்குக் கூலிபோலத்



தாமின்புறுதற்கு உலகினர் கண்டு இன்புறுதலும், பொருள் உதவலும், போற்றுதலும் செய்வது கல்வியுடையார்க்கே ஆகும். அம்மட்டோ! எந்நாட்டையும் தன்னுடாகச் செய்யும் ஏற்றமுடையது கல்வி. இப்படிப்பட்ட கல்வியினைக்காட்டிலும் சிற்றுயிர்க்கு உற்றதுணை பிறிதில்லை. இங்ஙனம் வாழ்வின் இன்றியமையாமையைத் தன்னகத்தே கொள்ளும் கல்விக்குச் சமயவாழ்வினர் புறம்பானவர்களா? இல்லவே இல்லை. கற்றோர்க்குத்தாம் வரம்பெனத்தகும் தலைமையுடையராகவன்றோ இருந்தனர். தமிழ்மட்டும் என்ன? வடமொழி முதலிய பிறமொழிக் கலைகளையும் பயின்று பல்கலைக்குரிசிலர்கத் திகழ்ந்தனர் என்பதற்குச் சான்று கூறவும் வேண்டுங்கொல்? ஆரியமென்னும், பாரிரும் பௌவத்திலும் அழகிய முதுதமிழுததியிலும் மூழ்கி அகம் தூய்மை பெற்ற மாதவச் சிவஞான அடிகளின் பெருமையைப் பேசவும் ஒண்ணுமோ? அம்முனிவரன் முனையாவிடில் முன்னைத் தமிழின் இயலை வடமொழியினின்றும் பிரித்தறியவும் முடியுமோ? தமிழுள்ளளவும் அவர் வரைந்துள்ள இலக்கண முடிவுகளும், பிறர் மதங்கூறித் தம் மதம் நிறீஇய தகைமையும் அறிஞர்க்குப் பெருவிருந்தாவனவாம். இவர்தம் பெருமை இங்ஙனமாயின், இவருக்கு இலக்காக நின்ற மெய்கண்டாரின் பெருமை மிகப்பெரிது. அவர்கள் தாம் கற்றதோடன்றித் தன்னை அண்மினாரை எல்லாம் கற்றோராகச் செய்தனர். அவர்கள் செய்த நூற்கள் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரென்ற தொண்டுணர்ச்சியைக் காட்டுகின்றதன்றோ? இன்னும் ஒவ்வொருவராகக்கூறி விளக்கின் விரியுமென்றஞ்சி விடுத்தாம்.

கல்வி வேண்டும். அக்கல்வியின் பயன் என்ன? கல்வியின் பயன் கற்றவழியில் நிற்றலாகும். 'தாம்கற்ற கல்விக்கு வாழ்வு இலக்கியமாக அமையவேண்டும். கற்றதற்கேற்ப வாழ்வு அமையாவிடில் கற்றதனாற் பயன் இல்லை. இதனாற்றான் பொய்யில் புலவர்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று கூறுவாராயினர். இஞ்ஞான்று கல்வியில் மறைந்து அல்லவை செய்யும் அறனிலார் பெருகி உள்ளனர். கற்றவராயிருந்தும் எற்றென்றிரங்குவ செய்து ஏழையராகின்றனர். பொருளிலார் அல்லற்பட்டு ஆற்றாதழத் தம்மகத்து வறிதே செல்வத்தைக் குவிக்கும் வன்கண்ணரின் செயல் கற்றவழியில் நிற்காததனாலல்லவா? சமயகுரவரின் அன்றாட வாழ்வில் அறனிழுக்கி அல்லவை செய்ததைக் காண்டலரிது. காணார் கேளார் கான்முடப்பட்டோர் பேணுநரின்றிப் பிணி நடுக்குற்றோர் யாவரும் அவர்களின் சுற்றம். அவர் தம் துயரினை மருந்தினாலும் பிறவற்றினாலும் போக்கி மகிழ்வூட்டினர். ஏன்! இறந்தவரைக்கூட எழுப்பி இன்புறுத்தியதாக அவர் சரிதம் சாற்றுகின்றது. எண்ணத்தின் வழிச் சொல்லும், சொல்லின் வழிச் செயலும் அமைந்த மேலான வாழ்வுடையராயிருந்தனர்.

அடுத்த நிலையில் காதல் வாழ்வைப்பற்றிப் பேசப்படுகின்றது. அதாவது ஒத்தபண்பும், நலனும், கல்வியும் உடையார் தம்முள் மனத்தால் கூடுவதே காதலாகும். வெறும் உடற்கலப்பு காதலாகாது. உள்ளம் கலந்தால்தான் இல்வாழ்வு இன்பம்பயக்கும். இக்கருத்தை வள்ளுவர்கூற்றினும் காணலாம். சான்றாக 'அன்புடைமையை இல்வாழ்வின் பண்பென்றும், அறனுடைமையைப் பயனென்றும்'' கூறியமை காண்க. இவ்விடத்து உரையாசிரியரின் விளக்கம் மேலும் அரண் செய்கின்றது. 'இல்லாட்கும் கணவற்கும் நெஞ்சொன்றாகாவழி இல்லறம் கடைபோகாது' என்று கூறுகின்றார். இன்று இல்வாழ்வைப்பற்றிப் பேசும் அறிஞரும் பிறரும் இதனைத்தான் வற்புறுத்துகின்றனர். சைவசமயம் இவ்வாழ்விற்குப் புறம்பானதன்று என்பதைக் காட்டுவாம். மாணிக்கவாசகர் அருளிய ஒரு செய்யுளைக் காட்டுதல் ஈண்டுச்சாலும்.



" தென்பா லுகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ".

இதன் கருத்து வருமாறு:— தெற்குப் பகுதியை இடமாகக்கொண்டு விரும்பியாடும் சிவபெருமான் பெண்ணைப் பக்கத்தில் இருப்பதை விரும்பினான் ஆதலின் அவன் பெண்பித்தன் போலும் என்று வினவினாள் ஒருத்தி. அங்ஙனம் பெண்ணைப் பக்கத்தில் விரும்பி வைத்திராவிட்டால் அறிவிலியே! பெரிய நிலத்திலுள்ளோர் யோகவழியை மேற்கொண்டு விண்ணடைந்து இனப்பெருக்கின்றி இவ்வுலகத் தழிவரென்பது மற்றவள் கூறும் விடையாகும்.

இறை எவ்வழி குடிகளும் அவ்வழியல்லவா? ஆகவே இறைவன் தனித்த வாழ்வுடையவனாக இருப்பின் குடிகளும் அவ்வாழ்வை மேற்கொண்டு இனப்பெருக்கின்றி அழிவர் என்று கூறுமிக்கருத்தால் காதல் வாழ்வுக்குச் சமயம் வேறுபட்டதல்ல என்பது போதரும். அதுமட்டுமன்றி அகமொன்றிய வாழ்வான் இல்லறம் நிகழ்த்தி ஈறில் இன்பத்தை எய்திய காரைக்காலம்மையார் வாழ்வும், திருநீலகண்டர் வாழ்வும், திருவள்ளுவர் வாழ்வும் தக்க சான்றாகும் என்க.

இனிச் சமுதாயத்தில் காணப்படும் வேறுபாடுகளால் நேர்ந்த தீமைகளைக் களையல்வேண்டும் என்று சொல்லப்படுகிறது. சமுதாயத்தில் பிறவியால் வேறுபாடு காட்டுவது பேதமையாகும். அவர் மேற்கொண்டுள்ள குணம் செயல்கள் பற்றித்தான் உயர்வும் தாழ்வும் கூற வேண்டும் என்பது ஆன்றோர் முடிவாகும். எடுத்துக்காட்டாகப்

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்றும்,

"நல்ல குலமென்றும் தீய குலமென்றும்
சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ தவம் கல்வி ஆள்வினை
என்றிவற்றா னாகுங் குலம்"

என்றும் கூறினார்.

"அந்தண ரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

இக்குறளும் பிறப்பில் பேதங் காட்டுவார் கொள்கையை மறுக்க எழுந்ததாகும். இதன் கருத்து வருமாறு.-

"எல்லா உயிர்களிடத்தும் தண்மைபூண்டு இடையறாது வருதலால் அந்தணராவார் துறவறத்தில் நின்றவர்" இதன் உரையில் பரிமேலழகர் கூறிய விளக்கம் நன்கு வற்புறுத்துகின்றது: அவர் கூறுவது, 'அந்தணர் என்பது அழகிய தட்பத்தை உடையாரென ஏதுப் பெயராகலின் அஃது அவ்வருளுடையார் மேலன்றிச் செல்லாது" என்பதாகும். ஆகவே உயிர்களிடத்துக் கனியிருப்பக் காய் கவர்ந்தது போலச் சொல்லும் இன்னாச் சொல்லும், இன்னாச் செயலுமிலார் யாவராயினும் அவர் அந்தணரென்பது நூலாசிரியராலும் உரையாசிரியராலும் நன்கு விளக்கப்படுகின்றது. மேலும் சைவ சமயத்தின் வழிநின்று மேன்மை யடைந்தோர் ஒரு சாதியாரல்லர். இஞ்ஞான்று மிலவும் பல்வேறு சாதிகளும் சிவனை வழிபட்டு நன்னிலை அடைந்தமையைப் பெரியபுராணங் கூறும். ஆகவே மனிதர் யாவரும் ஒரு குலமாக வாழ்வதற்கு உண்மைச் சமயம் வேறுபாடுடையதன்று என்பது பெறப்பட்டது.

இனி வாழ்வில் மக்களிடைக் காணப்படும் தீயனவற்றைக் களைந்து நல்லனவற்றைக் கடைப்பிடிக்குமாறு செய்யும் தொண்டுணர்ச்சிவேண்டும் என்று கூறுகின்றார்கள். சமயம் இதற்கு வேறல்ல. என்பதைக் காண்பாம்.



தொண்டு செய்ய முயல்வோர் மக்களிடத்து நல்ல பெயர் வாங்கவேண்டுமென்று தொண்டு செய்தலாகாது. அவர்கட்குக் காலத்திற்கேற்ப வேண்டுவனவற்றை நடுநிலையில் நின்று காணவேண்டும். காணுதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது ஒன்றனிடத்துக் காய்தலுவத்தல் இன்மையேயாகும். காய்தலுணர்வு தோன்றுமேல் நல்லனவும் தீயவாகத் தோன்றும். உவப்பு தோன்றுமேல் தீயனவும் நன்மை உடையன போலத் தோன்றும் ஆதலின் சமன் செய்து சீர்தூக்குங் கோல் போல முன்னே தான் சமனாக நின்று பின்பு ஒன்றைப் பற்றி முடிவு செய்தல்வேண்டும். அங்ஙனம் செய்த முடிவிற்கு என்ன இடையூறு நேரிடினும் அதனை விட்டு விடக்கூடாது. சுடச்சுடரும் பொன்போல் ஒருவனது கொள்கை துன்பத்தால் சுடச்சுட உலகின்கண்ணே ஒளிவிடும். தம் கொள்கை நன்மையுடையதாயினும் தீயவழியில் முயலுதல் தகாது. இடும்பைக்கே கொள்கலமாக மனிதன் மாறினாலன்றி நல்லனவற்றை உலகில் நடமாடவிட முடியாது. தண்பனி விழுங்கிய செங்கதிர் மண்டிலம்போல உண்மை மறைபட்டுத் தோன்றுகிறது. காரிருளால் சூரியன் மறைவதில்லை. அள்ளற் கருஞ்சேற்றால் அழகிய மலரின் மணம் மாறுவதில்லை. ஆகவே உண்மை உலகில் ஒளிவிடும் என்ற நம்பிக்கை தொண்டனுக்கு வேண்டும். இங்ஙனம் மேலே நாம் விரித்துக் கூறிய பண்புகள் தொண்டு செய்வதற்கு இன்றியமையாதனவாகும். இப்பண்புகளெல்லாம் அப்பர் பெருமான் வாழ்விற் காணப்படுவனவாகும். அவர் வரலாற்றை மேலெழுந்தவாறு நோக்கினும் இவ்வுண்மை புலனாகும். அவர் கொள்கைக்கு நேர்ந்த இன்னல் கொஞ்சமல்ல. அவற்றையெல்லாம் அறவழியில் நின்று வென்றுயர்ந்தார் அவர்.

இதுகாறுங் கூறியவாற்றால் உண்மைச்சமயம் உயர்கல்விக்கும் அதன்பயனான கற்றவழியில் நிற்றற்கும் வேறுபட்டதல்லவென்பதூஉம், மனிதன் பின்னர்

ஏற்கும் இல்வாழ்விற்கும் இடையூறானதல்ல என்பதூஉம்; மக்களினம் வேறுபாடொழிக்க உயர்வாழ்விற்கு ஊறல்லவென்பதூஉம், வாழ்வு மேலோங்கக்கொள்ளும் தொண்டுணர்ச்சிக்கும் துணையாகும் என்பதூஉம் பிறவும் பெறப்பட்டன.

# திருக்குறிப்பு

[கவிராஜபண்டித, நா. கனகராஜையர் B. O. L. புதுக்கோட்டை.]

குறிப்பு என்ற மொழி வெளிப்படையிற் பொருள் விளங்காவண்ணம் அமையும் சொல்வகைக்கு இட்ட பெயராகும். குறிப்பு மொழி பலவகைப்படும் என்பது இலக்கண ஆசிரியர் கருத்தாம். மக்கள் மொழியை வழங்கும் முறையிலே வெளிப்படையே பெருவழக்காம். குறிப்பு மொழிகள் சிறந்த புலவர் பிரயோகங்களில் ஆங்காங்கு வருவனவாம். அத்தகைய பிரயோகங்கள் அறிவுச்செல்வம் படைத்த மக்களுக்குப் பெருவிருந்தாய் இருக்கும். காவியம் வியங்கியப்ரதானமாக இருத்தல் வேண்டும் என்பது வடநூலார் கொள்கையாம். இக் குறிப்பு மொழிகள் உலகவாழ்வில் மயங்கிய மக்களுக்கு முகிலிடை எழும் மின்னல் போன்று இன்பம் விளைப்பனவாம்.

திருக்குறிப்பு என்பது இக்குறிப்புவகையுள் உயர்ந்த ஒன்றைக் குறிப்பதாம். திருத்தொண்டர் திருக்கோயில் திருமுறை முதலிய தொடர்கள் திரு என்ற அடைமொழியைப்பெறத் தகுதியுடையனவாயவாறுபோல் குறிப்பு என்ற சொல்லும் இறைவன்வயப்பட்டதாகும் போது திருக்குறிப்பு ஆகின்றது. திரு என்ற உரிச்சொல்லுக்குப் பொருள் விளக்கும் நோக்கால் திருக்கோவையார் உரையாசிரியர் பேருரை ஒன்று இயற்றியிருப்பதை ஆங்குக் காண்க. இத்துணைப் பெருமை பூண்ட திருக்



குறிப்பு என்ற அரும்பெருமொழி எக்கருத்தை விளக்க எழுந்தது என்பது இனி நாம் சிந்திக்கத்தக்கதாம்.

உயிர்கள் உய்யுமாறு ஐந்தொழில் பூண்டிருக்கும் இறைவன் தனக்கென்று ஒன்றும் புரியவேண்டாத இறைவன், அருள் அன்பு அறிவு என்ற குணங்களே உருவமாகவுடைய இறைவன் உலகில் நிகழும் எல்லாச் செயல்களுக்கும் தானே காரணனாய் இருந்தும் ஒன்றிலும் பற்றின்றி நிற்கும் ஒளிப்பிழம்பாகிய இறைவன் திருவுள்ளத்தே எழுந்து உலகவுயிர்களின் நலங்கருதியே விளக்கமாகும் குறிப்பே திருக்குறிப்பாகும். செயலெல்லாம் கடந்துநிற்கும் சிவத்துக்குத் திருவுள்ளமுண்டோ? அத்திருவுள்ளத்தே எழும் குறிப்பும் உளதோ? அத்தகைய குறிப்பை அறிவார்யார்? அறிவிக்குமாறு என்னேயோ? என்பனவாதிய பலவினாக்கள் எளிதில் தோன்றும். அவன் நமது வாக்கு மனங்களுக்கு அப்பாற்பட்டவன் என்ற உண்மையை வேதமே விளக்குகின்றது. அவனுக்கு ஒரு நாமம் இல்லை. ஒரு உருவமும் இல்லை. எந்த நிலையில் அவன் திருவுள்ளத்திற் குறிப்பு முளைக்கின்றது; அக்குறிப்பு எப்படி முகிழ்க்கின்றது? மலர்ந்து காய்த்துக் கனிந்து வெளிவருகின்றது. இவற்றை உய்த்துணரும் நெறி யாது?

தன் திருக்கூத்துக் காண்போர்க்கு உள்ளத்தில் ஆனந்தவெள்ளம் பெருக்கெடுத்து ஓட அவன், தாண்டவம் ஆடுகின்றான். அவன் தக்கிணாமூர்த்தியாக ஞானாத்மாக்களாகிய நால்வர்க்கு உபதேசிக்கக் குருமூர்த்தம் பூணுகின்றான். உருவருவத்திருமேனிபூண்டு வேண்டுவார் வேண்டுவதே யீவானாகி விளங்குகின்றான். அவன் கூத்தனாக விளங்கும்போது அவன் திருக்குறிப்பு யாது? குருமூர்த்தியாக இருக்கும்போது அவன் திருக்குறிப்பு யாது? இலிங்கத்துள் நின்றபோது அவன் திருக்குறிப்பு யாது? இந்த உருவம் ஒன்றும் பூணாது எல்லாமாய் அல்லவுமாய் எங்கும் மறைந்து உறையும்போது அவன் திருக்குறிப்பு யாது?

அவன் மூலபண்டாரமே வழங்கினும் நாம் காலம் பெற முந்துவோமில்லை. நம் மனம் பொறிவழி இறங்கி யிறங்கியே பயின்றிருப்பதால் பொறி யெல்லைமீறிய பொருளைநாட எளிதில் எழுமாறில்லை. இந்த மனநிலையுடைய மக்களைக் கரையேற்றவே அவன் இருக்கின்றான். அதற்கு உரிய குறிப்பையே அவன் நிலை, கூத்து, செயல் எல்லாம் விளக்குகின்றன. தக்கிணாமூர்த்தி நிலையில் அவன் பூண்பது மவுனமே. வெளிநாட்டம் அடங்கி உள்நாட்டத்திலே மெய்ஞ் ஞானியர் வெகுபாடுபட்டுக் காணற்குரிய பொருளை அவன் அங்ஙனம் இருக்கும் நிலையாலேயே விளக்குகின்றான். வெளிப்படையில் எத்தனை யுகங்கள் ஆதிசேடனே பேசினும் விளக்குதற்கரிய பொருளை நால்வர் அறிய அவன் மவுனக் குறிப்பால் அருளுகின்றான். அருள்வான் அவன் என்பது அவன் திருமுகக்குறிப்பில் விளங்குகின்றது. அருள்பெற்றார் அவர் நால்வர் என்பது அவர்தம் குறிப்பால் அறியப்படுகின்றது. வேதசாத்திரங்களால் விளக்கலாகாத பொருளை விளக்கவல்லவன் அவனேயென்பதும் அவனே விளக்கிய அத்திருக்குறிப்பின் பொருளை அவன் திருமுன் இருந்து அறிந்து ஆனந்த சமாதியில் ஆழவல்லவர் அவர் நால்வரேயென்பதும் அக்கோலத்தில்நன்குவிளங்குகின்றன. "உணர்ந்தார்க்கு உணர்வரியோன்" என்று மாணிக்கவாசகர் அருளிச்செய்தாற்போன்று இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக்காட்ட வொண்ணாத தத்துவச் செம்பொருளை உரிய பக்குவிகளுக்கு உரியமுறைபற்றி உணர்த்தும் திருக்குறிப்பே அக்கோலத்தில் இலங்குகின்றது.

இலிங்கவுருவத்தில் ஏதேனும் குறிப்பு உண்டோ என்று யாரைக்கேட்டு நாம் அறியவல்லோம்! உருவம் இல்லை அவனுக்கு என்பார் உலகத்திற் பலகோடி மக்கள். உருவம் உண்டு என்று கூறித் தத்தமக்குத் தோன்றியவண்ணம் எல்லாம் அமைத்து வணங்கும் மக்களும் பலகோடியர். இந்த இருதிறவம்பினும் அகப்படாதவன் நான். என்னை யார் எப்படி நினைத்தாலும்



அப்படி இருக்கிறேன். இல்லை என்பவர்க்கும் உண்டு என்பவர்க்கும் நான் ஒரேவண்ணமாக இருக்கின்றேன். என்று கூறுவதுபோல அத்திருத்தோற்றம் உளது. ஐந்து முகங்கள் உடையான் என்று அறியவல்லார் அறிக. ஒருமுகமும்காணாத உருவம் எவர்க்கும் எளிதாக அமைக என்றே அவன் கொண்டான் போலும்.

கூத்தப்பெருமான் திருக்குறிப்பை இனிச் சிறிது ஆராய்ந்து அறிய முயல்வோம். எம்பெருமான் திருக்குறிப்பு இதுவே என்று அப்பர் அருளுகின்றார். அவர் வாக்கைப் பின்பற்றி ஒருவாறு இப்பெரும்பொருளை உணரலாம்.

"ஒன்றி யிருந்து நினைமின்கள் உர்தமக்கு ஊனமில்லை
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தாய் என்னும் எம்பெருமான்றன் றிருக்குறிப்பே"

என்பது அப்பர் அருள்மொழி.

"மனிதர்காள்! இங்கே வம்மொன்று சொல்லுகேன்" என்று மக்களை அழைத்து ஈசன் எனும் கனியே இனியவற்றுள் எல்லாம் இனிது என்று உரைத்தருளிய அப்பெரியோர், இங்கும் மக்களையழைத்து எம்பெருமான் திருக்குறிப்பை உரைக்கின்றார். அத் திருக்குறிப்பை உணர்தற்கு முதலிலே மக்களைப் பண்படுத்துகின்றார். அம்முறை மிகவும் அழகாய் உள்ளது. "ஒன்றி இருந்து நினைமின்கள்" என்கிறார். பொறி புலன் சென்றவழி மனத்தைப் போகவிடாமல் மனத்துக்கு மனமாய் ஒவ்வொரு பொறிக்கும் அவ்வப்பொறியாய் விளங்கும் பெருமானை உலகமயக்கில் உழலும்நிலையில் நினைதல் அரிதாம். ஆதலால் அவனை நினைக்கத்தக்க மனப்பண்பை முதலிற் பெறக் கட்டளையிடுகிறார். அம்மனப்பண்புதான் ஒன்றி யிருத்தல். ஒன்றுதான் உண்மை. அதுதான் அவன் என்ற பெரும்பொருளை உணர அவ்வொன்றினடிவந்த வினையே இங்குப் பயன்படுகின்றது. ஒன்றுதல் இங்கு ஒருமித்தலாம். இருத்தல் அடக்கம்பெற்று இருத்தலாம்.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கியிருப்பதே இங்கு இருத்தல் என்று உரைக்கப்பட்டது. அங்ஙனம் ஒன்றியிருக்கும்போது நினைவும் இறக்கும் நினைக்குமாறு எங்ஙனே என்று கேட்போர் உள்மனம் அங்குவிளங்கும் பொருளை உன்னி வெளிமயக்கை வென்று விளங்கும் நிலையே இங்கு "நினைமின்கள்" என்ற கட்டளையில் விளக்கப்பட்டது. அங்ஙனம் ஒன்றியிருந்து நினைத்தலால் விளையும்பயன் ஊனம் இன்மை என்று கூறப்பட்டுளது. இங்கு ஊனம் என்றது சீவான்மா ஸம்ஸாரச் சுழலில் அகப்பட்டு மயங்கும் மயக்கமே. ஒன்றியிருந்து நினைத்தலால் இந்த ஊனம் ஒழிகின்றது என்பது எளிதில் விளக்கப்பட்டது.

ஒன்றியிருந்து நினைக்கும்போது உள்ளத்தில் என்ன காட்சி விளங்குகிறது என்பது இனி நினைக்கத்தக்க பொருளாம். காலன் என்பவன் மக்கள் வாழ்வின் எல்லை குறிக்கவைத்த அதிகாரி. அவனுக்கு அப்பதவி அளித்தவன் ஆண்டவனே. தானே நியமித்த அதிகாரி தன் கடமையில் தவறுவதை இறைவன் பொறான் என்பது உண்மையே. அவன் மார்க்கண்டன் என்ற சிறுவன் பொருட்டுத் தன் கடமையை முறைப்படி இயற்றவே வந்தான். தன் கடமையை முறையே இயற்றச் சிறிது தடையேற்பட்டதால் அவன் கன்றினன். அத்தடை தான் யாதோ எனின் இறைவன் திருவுருவமாகிய இலிங்கத்தை அவன் தழுவிக்கொண்டு பாசத்துக்கு அஞ்சாதிருந்த நிலையே. அதனால் காலபாசம் இலிங்கமூர்த்தியையும் சுற்றிவிழவேண்டியதாயிற்று. காலன் தன் கடமையை விதிப்படி இயற்றவே கன்றினனும் இறைவனிடம் சரண்புகுந்த அன்பனுக்கும் அவன்மூலம் இறைவனுக்கும் அபராதியாயினன். அக்குற்றத்துக்கு ஏற்ற தண்டனை விதிக்கத் திருவுள்ளங்கொண்ட இறைவன் காலனைக் காலாற் கடிந்தான். அத்திருவருள் அடியவன் பொருட்டே நிகழ்ந்தது. உருவருவத் திருமேனியிலுள்ள இறைவன் திருக்குறிப்பு இதனாலும் விளங்குகின்றது. தானேவிதித்த விதிக்கு மாறாகவும் இறைவன் தன்னை



அடைந்த அன்பரைக்காப்பான் என்பது இங்குத் திருக்குறிப்பாம். அன்பன் தன்வயம் இழந்து அவன்வயமாகத் தன்னையமைக்கும்போது இறைவன் இதுசெய்யாதிருக்க இயலுமோ?

இத்தகைய பெருமான் தில்லைச் சிற்றம்பலத்தில் நட்டம் இடுகின்றான். அந்நட்டம் பலதத்துவங்களை விளக்குவது. அத்தத்துவங்கள் ஒன்றையும் இங்கு உரைக்க நினைத்தாரிலர் அப்பமூர்த்தி. ஆனால் ஒரு கருத்தை அழகுறக் குறிப்பிக்கின்றார். என்று வந்தாய் என்னும் எம்பெருமான் திருக்குறிப்பு என்கிறார். அன்பனே! இந்த உலகில் இத்தனைகாலம் உழன்றாயே என்னை நினைக்க உன்மனம் பயிலவில்லையோ? நினைத்தால் நினைத்தவுடன் நான் உன்னை ஆட்கொண்டிருப்பேனே! இன்பப் பெருவெள்ளத்தில் தன்னைமறந்து நீந்துதற்கு உரிமைபூண்ட என் அன்பனாகிய நீ இந்த வாழ்வுக்கடலிலே துன்பச் சுழலிலே சிக்கிக்கொண்டு எத்தனைகாலம் அல்லற்பட்டாய். அந்தோ! இன்றுவந்தாலும் நேற்றுவந்தாலும் இன்னும் சிலநாள் சென்றுவந்தாலும் நீ என்னிடம் வந்தேயாகவேண்டியவன். நானும் உன்னை ஆண்டுகொள்வதே பொறுப்பாக உடையவன். எத்தனைநாள் என்னை மறந்தாலும் இன்றேனும் என்னை நினைந்து வந்தாயே. உன்வரவு நல்வரவே. வினைப்போகம் இனி உன்னைப்பற்ற வழியில்லை. வினைக்கட்டறுத்து வீடு அருள்வதே பணியாக உள்ள என்னை உன் உள்ளம் என்றும் நினைந்தே இருக்கும். உள்ளம் இப்பக்கமே உன்னை இழுத்திருக்கும். உடம்பு உள்ளத்தின் ஏவல் செய்யவேண்டிய பணியாளே. எல்லாம் பொருந்தியிருந்தும் நீ இங்குவாராதிருந்தது எதனாலோ? இப்போதாவது வந்தாயே என்று கூறி ஆனந்தவெள்ளத்தில் அழுத்துவது போன்ற தோற்றமே அத்திருக்குறிப்பில் உள்ளது. இன்னும் எத்தனைக் கருத்துக்கள் உண்டோ அவனே அறிவான். அவன் அருள்வயப்பட்ட அன்பர்களே அறிவர். நாமும் அறிய முயல்வோமாக.

# தசாங்கம்.

[வித்துவான், வை. குஞ்சிதபாதம் பிள்ளை, சென்னை.]

தமிழ் மொழியில் சங்க இலக்கியங்கள், ஐம்பெருங் காப்பியங்கள், இதிகாசங்கள் முதலிய பேரிலக்கியங்கள் தோன்றிக் கற்பார்க்கு இலக்கியச் சுவையின்பம் அளித்து வருவதுபோலவே, பிற்காலத்தில் பிரபந்தங்கள் என்று சொல்லப்படும் சிற்றிலக்கியங்கள் தோன்றிக் கற்பார்க்குக் கவியின்பம் ஊட்டி வருகின்றன. இச் சிற்றிலக்கியங்கள் அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், மாலை, தசாங்கம் முதலவாகத் தொண்ணூற்றுறுவகைப் படுமென்பர் இலக்கணநூலார். இங்ஙனம் புலவர்கள் புதுவதாகப்புனைவனவெல்லாம் 'விருந்து' எனப்பெயர் பெறும் என்பர் தொல்காப்பியர். "விருந்தே தானும் புதுவது புணர்ந்த யாப்பின் மேற்றே" என்பது விருந்தின் இலக்கணத்தைக் குறிக்கும் தொல்காப்பியச் சூத்திரம். அஃதாவது புதுக்கருத்துக்களை அமைத்துப் புலவர்களால் பாடப்பெறுஞ் செய்யுள் நூல்கள் 'விருந்து' என்னும் பெயர் பெறும் என்பது. அறுசுவை உண்டி நாவினுக்கு இன்பமளித்து உடலுக்கு நன்மை தருவது போலப் புதுக்கருத்துக்களைத் தழுவிப் புலவர்களால் இயற்றப்படும் செய்யுள் நூல்களாகிய பிரபந்தங்களும் அறிவுக்கு விருந்தாய் இன்பமளித்து உறுதிபயப்பன வாய் இருத்தலால் இவற்றைத் தொல்காப்பியர் 'விருந்து' என்று கூறினர் போலும்.

இப்போது பிரபந்தவகைகளுள் ஒன்றாகிய 'தசாங்கம்' என்னும் நூலின் இயல்பைப்பற்றி ஆராய்வோம். கடவுளரையோ மக்களிற் சிறந்தவர்களையோ புகழ்ந்து பாடுங்கால் அவர்களுடைய மலை, ஆறு, நாடு, ஊர், குதிரை, மாலை, யானை, கொடி, முரசம், செங்கோல் ஆகியபத்து உறுப்புக்களையுங் குறித்துச் சிறப்பித்துப் பாடப்பெறும் நூல் தசாங்கம் எனப்பெயர் பெறும்.

'தசம்' என்றால் பத்து. 'அங்கம்' என்றால் உறுப்பு. ஆகவே தசாங்கம் என்பதற்குப் பத்து உறுப்புக்களைக் குறித்துப் பாடப்படும் ஒருசிறுநூல் என்பது பொருள். மேற்கூறிய பத்து உறுப்புக்களுள் சிலவற்றை நீக்கி வேறுசில உறுப்புக்களைச் சேர்த்தும் பாடுவதுண்டு.

இதன் இலக்கணத்தைக் குணவீர பண்டிதரால் வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப்பாட்டியலுள் கூறப்பட்டுள்ள,

"புல்லு மலையாறு நாடூர் புனைதார்மா
கொல்லுங் களிறு கொடிமுரசம்—வல்லகோ
லென்றிவை நஞ்செழுத்தோ டேலா வகையுரைப்ப
நின்ற தசாங்கமென நேர்."

என்னும் வெண்பாவால் அறியலாம். இப்பாடலுள் தசாங்கத்துக்குரிய பத்து உறுப்புக்களும், அதைப்பாடும் முறையுங் கூறப்பட்டுள்ளன. இப் பிரபந்தத்துக்கு ஆகாதென்று விலக்கப்பட்ட நஞ்செழுத்தாகிய 'யா, ரா, லா, யோ, ரோ, லோ' என்னும் உயிர்மெய் எழுத்துக்களும், ய், ர், ல் என்னும் மெய்யெழுத்துக்களும், ஆய்த எழுத்தும், உயிரளபெடை, ஒற்றளபெடைகளும், மகரக் குறுக்கமும், ஆய்தக்குறுக்கமும் ஆகிய பதினன்கு எழுத்துக்களும் தசாங்கப் பாடல்களின் முன்னும், பின்னும் வராமற் பாடவேண்டும். அமுத எழுத்தாகிய 'க, ச, த, ந, ப, ம, வ,' என்னும் மெய் எழுத்துக்கள் ஏழும் 'அ, இ, உ, எ,' என்னும் உயிர்க் குற்றெழுத்துக்கள் நான்கும் ஆகிய பதினேரெழுத்துக்களும் பாடல்களின் முதல் இறுதிகளில் அமையப் பாடவேண்டும். இங்ஙனம் எழுத்துப் பொருத்தங்கள் அமையப் பாடப் பெறுந் தசாங்கம் எத்தனை செய்யுட்களால் பாடப்பட வேண்டுமென்பதைக் கீழ்வரும்,

"நேருந் தசாங்கத்தை நேரிசை வெண்பாவா
லீரைம்பது தொண்ணூ றீண்டெழுபா—னேரைம்பான்
றோர்ந்துரைக்கிற் சின்னப்பூ வீரைந்தாற் செப்பினர்
சேர்ந்த தசாங்க நிலை."

என்னும் செய்யுளால் அறிக. அதாவது தசாங்கங்களை யும் நேரிசை வெண்பா நூறாலும், தொண்ணூறாலும், எழுபதாலும், ஐம்பதாலும், முப்பதாலும் பாடப் பெறுவது சின்னப்பூ எனப்பெயர் பெறும். பத்து உறுப்புக்களையும் பத்து வெண்பாக்களால் பாடி முடிப்பது தசாங்கமாகும். இதற்குத் தசாங்கப்பத்து என்றும் பெயருண்டு. இத்தசாங்கத்தைப் பத்து ஆசிரிய விருத்தங்களால் பாடினால் அது தசாங்கத்து அயல் எனப் பெயர் பெறும் என்பது.

இதுவரையும் தசாங்கத்தின் இலக்கணம் என்ன என்பது பற்றிச் சற்று ஆராய்ந்தோம். இனி இவ் விலக்கண அமைதிக்கேற்பப் பண்டுதொட்டுத் தமிழ் நூலாசிரியர்கள் இப் பத்துறுப்புக்களையும் பற்றிப் பாராட்டிக் கூறியுள்ளாரர்களா என்பதைக் கவனிப் போம்.

சங்ககாலம் முதற்கொண்டே தமிழ் நூல்களில் கடவுளர்க்கும், மன்னர் முதலியவர்க்கும் இவ்வுறுப் புக்கள் சிற்சிலவிடங்களில் கூறப்பட்டுள்ளன. "கண்ணி கார்நறுங் கொன்றைகாமர், வண்ணமார்பில் தாருங் கொன்றை ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த, சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப! எனவரும் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துச் செய்யுள் அடிகளால் சிவபெருமானுக் குரிய மாலை கொன்றைமலர் மாலை என்பதும், வாகனம் வெள்ளேறு என்பதும், கொடி ரிஷபக்கொடி என்பதும் விளங்கும். பிரமனுக்கு அன்னக்கொடியும், திருமா லுக்குக் கருடக்கொடியும், முருகனுக்குச் சேவற் கொடியும் கூறுவது மரபு.

மற்றும் தமிழ்நாட்டு முடியுடை மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியர்க்குத் தார், கொடி முதலிய உறுப்புக்கள் உண்டு. இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டு கட்குமுன் எழுதப்பட்ட தொல்காப்பியம் என்னும் தமிழ் இலக்கணநூலுள் புறத்திணை இயலில் வரும்



"வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வருஉம்
மாபெருந்தானையர் மலைந்த பூவும்"

என்னுஞ் சூத்திரத்தில் சேரனுக்குப் பனம்பூ மாலையும், சோழனுக்கு ஆத்தி மாலையும், பாண்டியனுக்கு வேப்பம்பூ மாலையும் உரிய அடையாளமாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றையே கோவூர் கிழார் என்னும் சங்கப்புலவர் 'இரும்பனை வெண்தோடு' என்று தொடங்கும் புற நானூற்றுச் செய்யுளில் மூவேந்தர்க்குரிய மாலையாகக் கூறியுள்ளார். சேரர் விற்கொடியினையும், சோழர் புலிக் கொடியினையும், பாண்டியர் கயற்கொடியினையும் தத்தமக் குரிய கொடிகளாகக்கொண்டு திகழ்ந்தனர். இம்மூவர்க் கும் முறையே சேர, சோழ, பாண்டிய நாடுகள் உரியன வாகும். இங்ஙனமே ஊர், மலை முதலிய உறுப்புக்களும் ஆங்காங்கே கூறப்பெற்றுள்ளன.

பாண்டவர் தலைவனாகிய தருமனுக்கு முரசுக்கொடி யும், கௌரவர் தலைவனாகிய துரியோதனனுக்கு நஞ்சு மிழும் நாகக்கொடியும், இலங்கைவேந்தனாகிய இராவண னுக்கு வீணைக்கொடியும் உரியனவாக இருந்தன என்பதைப் பாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங் களால் அறிகிறோம். கொடி, தார் முதலிய உறுப்புக் களே தேவர்களினும் அரசர்களினும் வேறுபிரித்து ஒவ்வொருவரையும் இன்னாரெனச் சுட்டி அறிதற்கு ஏதுவாயிருத்தலின், அவரவர் தழுவிக்கொண்ட பொருள் களை உறுப்புக்களாகக் கூறுவது மரபு என்று தெரிகிறது.

சேரன் செங்குட்டுவன் வடநாட்டரசரை வென்று இமயமலையில் விற்கொடியை நிலைநாட்டி வந்தானென் றும், ஒருகாலத்தில் காரிகாற்சோழன் புலிக்கொடியை இமயத்திற் பொறித்து வந்தானென்றும், ஒருசமயம் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பனி மலையில் கயற்கொடியைப் பறக்கவிட்டான் என்றும்

தமிழ் நூல்கள் கூறுகின்றன. இதனால் ஒரு அரசனுடைய ஆட்சி இந்த எல்லைவரை பரவி இருந்ததென்பதற்கு அறிகுறியாக அவர்களுடைய கொடியை அவ்வெல்லையில் நிலைநாட்டிப் பறக்கவிட்டனரென்பது தெளிவாகும்.

இக்காலத்திலும் தன்னரசு பெற்று விளங்கும் நன்னாடுகளிலெல்லாம் தத்தம் கொள்கைகட்கு ஏற்ற அடையாளங்கள் எழுதப்பட்ட கொடிகளைப் பறக்கவிடுவதைக் காண்கிறோம். ஒரு மன்னனுடைய ஆட்சி நிலவுவதற்குச் சிறந்த அடையாளமாக விளங்குவது அன்னவன் கொடியேயாகும். இக்கொடிகளை அரசாங்க ஆட்சி நிலையங்களிலும், அரசாங்கச்சேனை அணிவகுப்பிலும், கப்பலின் உச்சியிலும், கடற்றுறைமுகத்திலும் இன்றும் பறக்க விட்டிருப்பதைக் காண்கின்றோம். இந்த இருபதாம் நூற்றாண்டில் அரச அங்கமாகக் கொடி, குதிரைப் படை, யானைப்படை முதலிய உறுப்புக்கள் சிறந்து விளங்குவதுபோலவே பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழ் வேந்தர் ஆட்சி நிலவியகாலத்தில் கொடி முதலியவற்றைச் சிறந்த உறுப்புக்களாக அரசர்கள் பெற்றுத் திகழ்ந்தனர் என்ற செய்தியைத் தசாங்கம் என்ற பிரபந்தத்தால் அறிந்து நாம் வியக்காமல் இருக்க முடியாது.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய அருட்கவிஞராகிய மாணிக்கவாசக சுவாமிகள் இயற்றி அருளிய திருவாசகத்தில் 'திருத்தசாங்கம்' என்னும் ஒரு பதிகம் காணப்படுகிறது. அது பத்து வெண்பாப் பாடல்களால் ஆகியது. அதில் முறையே சிவபெருமானுடைய பெயர், நாடு, ஊர், ஆறு, மலை, வாகனம், படை, முரசு, மாலை, கொடி என்னும் பத்து உறுப்புக்களும் பத்துப்பாடல்களில் கூறப்பட்டுள்ளன. அவ்வுறுப்புக்கள் எவையெனப் பார்ப்போம். சிவபெருமானுடைய பெயர் - ஆரூரான், செம்பெருமான், தேவர்பிரான், நாடு - தென்பாண்டிநாடு. ஊர் - உத்தரகோசமங்கை.



ஆறு - ஆனந்தம், மலை - முத்திமலை, வாகனம் - வான்புரவி, படை - கழுக்கடை யென்னும் சூலம், முரசு - நாதப் பறை, மாலை - தாளி அறுகு, கொடி - ஏறு அதாவது ரிஷபக்கொடி.

இவற்றுள் உதாரணமாகக் கொடியைக் குறிக்கும் பாடலொன்றைக் காண்போம்:—

> "சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
> கோலம் பொலியுங் கொடிகூறாய்—சாலவும்
> ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டும்
> கோதிலா ஏறும் கொடி."

இப்பாடலில் மாணிக்கவாசகர் கிளியைப் பார்த்து, 'சோலையில் வாழும் பசிய கிளியே தூயநீர் நிறைந்த திருப்பெருந்துறைக்குத் தலைவனாகிய சிவபெருமானுடைய அழகு விளங்கும் கொடியைப் புகழ்வாயாக! அது யாதெனில் பகைவர் மிகுதியும் திடுக்கிட்டு அஞ்சும்படி உயர்வாகத் தோன்றி அழகுடன் விளங்கும் குற்றமற்ற காளை எழுதப்பட்ட கொடி" என்று கூறியுள்ளார். அறத்தின் வடிவாகிய ரிஷபமே சிவபெருமானுக்குக் கொடியாகவும், ஊர்தியாகவும், முத்திரையாகவும் அமைந்துள்ளதென்பர் ஆன்றோர்.

இதுவரையும் கூறியதிலிருந்து கடவுளர், அரசர், முதலியவர்களுடைய மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, பரி, கரி, கொடி, முரசு, செங்கோல் ஆகிய பத்து அங்கங்களையும் புகழ்ந்து வெண்பாவால் பாடப்படுவது தசாங்கம் என்னும் பிரபந்தமாகுமென்பதும், அது ஒவ்வொருவரையுஞ் சிறப்பாய்ச் சுட்டியறிவதற்கு நல்லிசைப் புலவர்களால் வகுக்கப்பட்ட ஒரு பிரபந்தவகை என்பதும் இதனால் முன்னையோர் நாகரிகமும் வாழ்க்கைச் சிறப்பும் அறிந்து இலக்கியச்சுவையினையும் துய்க்கலாம் என்பதும் விளங்கும்.

உ

குருபாதம்

தருமபுர ஆதீன ஸ்தாபகர்

# குருஞானசம்பந்தசுவாமிகள் குருபூஜைவிழாவில்

மகாசந்நிதானமவர்கள் திருவடிகட்குச்

சமர்ப்பித்த

## வணக்கச் செய்யுள்

எழுந்தது ஞாயிறு எழுந்தது ஞாயிறு
ஆணவ இருளெலாம் அகத்தினின் றகன்றன;
மாயைக் குளிரும் மறைந்தினி தொழிந்தன;
கன்மச் சுரமும் கடுமை தணிந்தன;
பழுத்தசித் தாந்தப் பல்வளங் கெழுமிய
சிவஞா னப்பயிர் செழித்துப் பயன்தர
ஞானசம் பந்த நல்லருள் மேகம்
முன்னூ றுண்டா முதன்மழை பொழிந்தது
செம்மனச் செல்வர் சிந்தை களித்தனர்; இன்று
சுப்பிர மணிய திப்பியச் செம்மல்
இப்புவிக் கேற்ற இனிய நடையில்
செந்தமிழ்ப் பணியால் இந்துவாழ் சடையன்
பெருநெறி விளக்கங் கண்டனர்; அதாஅன்று
தமிழ்த்தாய் கோயில் தழைத்திடச் செய்யும்
தவர்முடி புனைந்த தாளுடை யெங்கள்
குருபரன் ஞானசம் பந்த குருசில்
திருவடி யெமது சிந்தையுள்
பெருவடி வாகப் பிறங்கயேத் துவமே.

தருமபுரம், }
18—5—49. }

அடிமை,
கந்தசாமித் தம்பிரான்.

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக.

சீகாழி ஆலயத்தில்

# இறைவிழாவும் முறைவிழாவும்

சைவ சமய முதற் குரவராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருவவதாரஞ் செய்ததலம்; எண்ணரிய சிவ ஞானப்பாலருந்தி சிவஞானசம்பந்தரான இடம்; அவர் பாடகளருளிய மிக்க திருப்பதிகங்களோடு ஏனைய மூவர் பாட லும் பெற்ற இடம். இத்தகைய இடத்தில் திருமுறை விழாவும் இடம்பெறுவது சிறப்புடையதல்லவா? அதுவும் திருமுலைப்பால் விழாவன்று தொடங்கி நடைபெறுவது எவ்வளவு ஏற்புடையதொன்று.

2—5—49முதல் 8—5—49வரை 7-நாட்கள் கோயிலில் விழா நடைபெற்றது. இவ்வாறு இறைவிழாவும் முறை விழாவும் ஒருசேர நடப்பது "செவிகாள் கேண்மின் களோ" "கண்காள் காண்மின்களோ" என்ற அருங் கருத்தை மக்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருந்தது. சாழிமக்களும். சிரத்தையோடு குறிப்பிட்ட காலத் திலேயே பிரசங்கமண்டபத்திற்கு வந்து குழுமியிருப்பார் கள். செவியுணவைத் தெவிட்ட உண்பார்கள்.

திருவாசகம், கே. எம். பாலசுப்பிரமணியம் B.A., B.L., காஞ்சீபுரம், கா. வச்சிரவேல் முதலியார் B.A., L.T., வித்துவான், மா. இராசமாணிக்கம் B.O.L., L.T., M.O.L., பாலகவி, வே. இராமநாதன் செட்டியார் இவர்கள் உள் ளிட்ட பல அன்பர்கள் செவி அமுதத்தை வாரிவாரி வழங்கினர்கள். இவைகளோடு சீகாழி கட்டளைவிசாரணை ஸ்ரீமத் கந்தசாமித் தம்பிரான் சுவாமிகள் மனவுறுதியும் சொல்லாற்றலும் பெருந் துணைசெய்தது.

கடைசிநாள், இவ்வாறு அரும்பெரும் விழாவினைச் சீகாழியில் நடைபெறச்செய்த ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதான மவர்களுக்கு, சீகாழி நகரவாசிகள் சார்பில் நன்றியுரை அளிக்க இருப்பதைப் பெருநிலக்கிழார் உயர்திருவாளர், C. கிருஷ்ணமூர்த்தி முதலியாரவர்கள் அறிமுகப்படுத்த

உயர்திருவாளர், சீனிவாச முதலியாரவர்கள் அவ்வுரையினை வாசித்தளித்தார்கள். அதுவருமாறு:—

மெய்கண்டான் வழித்தோன்றிய மெய்ப்பொருட் குரவ!
சித்தாந்தசைவம் செழித்திடச் செய்வோய்!!

தெய்வமணங்கமழும் தென்தமிழ் நாட்டின்கண் திருமுறைகளாம் தெய்வத்தமிழ்மறைகளின் திருமணங்கமழத் தாங்கள் ஆற்றிவரும் தொண்டு உலகோர் அறிந்ததாம். ஊர்தியிலேறி ஊரெலாம் சென்று உண்மைநெறி பரப்பும் தங்கள் பேருட்டிறத்தைத் தமிழ்நாடெங்கணும் காணலாம்:

தருமையாம் பதியின் தனிப்பெருந் தலைவ!
சைவத் தமிழ்நெறிகளைச், சலசலவென எவ்விடத்தும் பாய்ச்சிவரும்
தண்ணருட் பெருக்கே!!

ஊழிக்காலத்து இவ்வுலகம் தோன்றுதற்கு இவ்வூரே காரணமென உண்மை நூல்கள் கூறும். அதுபோல உயர் சைவத் திருமுறைகளில் முதன் மூன்று திருமுறைகளும் தோன்றக் காரணமாய் இருந்தது இவ்வூரே. இத்தகைய திருப்பதியில் இவ்விழாவின் இன்றியமையாமையைத் தங்கள் திருவுள்ளத்திற் கொண்டு ஆளுடையபிள்ளையார் ஞானப்பாலுண்ட நன்னாளில் தொடங்கி இதுகாறும் நடந்தருளத் திருவருள்பாலித்தீர்கள்.

அருமறைத் தமிழாம் திருமுறை உணர்ந்தோய்!
சைவம் வளர்க்கும் தெய்வ நாயக!!

இத் திருமுறை விழாவால் நல்லறிஞர்கள் பலரின் இனியவாம் அறவுரைகள் பலகேட்டோம். இதுபோன்றே வருகின்ற ஆண்டுகளிலும் இத்திருமுறை விழாவை வளம்படச் செய்தருள வேண்டும் என்ற வேண்டுகோளைத் தங்கள் திருமுன்னர் விண்ணப்பித்துக்கொள்கின்றோம். இத்தகைய நல்லறங்களைச் செய்தருளிய தங்கள் பேரருட்செயலுக்கு நன்றிகூறக் கடப்பாடு உள்ளோம்.

எக்காலத்தும் இன்னபல நல்லறங்களை ஆற்றிவர அருட்சந்தானத்தின் திருச்செங்கோல் நீடுவாழ்கென அம்மையப்பரின் அடிமலர் இறைஞ்சுகின்றோம்.



நீதிபதி, திரு. சிவசங்கர முதலியாரவர்கள் தலைமையுரையும் நிகழ்ந்தது. இரவு திருமுறை ஊர்வலத்தில் திரு. T. S. ஞானப்பிரகாச தேசிகர், திரு. P. சுவாமிநாதன் உள்ளிட்ட பல பண்மணிகளின் இசை ஒலியும், இடையிடையே பாடுகின்ற பதிகத்தின் கருத்துக்களையும் பதிகம் எழுந்த சந்தர்ப்பத்தினையும் பற்றி திரு. இராமலிங்க ஓதுவார் அவர்கள் பேசிய விரிவுரைப் பகுதியும் மக்களைப் பரவசப்படுத்தின. இத்தகைய சிறந்த இவ்விழாவில் கலந்துகொள்ள முடியாத பல அன்பர்களிடமிருந்து வந்திருந்த பாராட்டுக் கடிதங்கள் அவையில் படிக்கப்பட்டன. அவை இங்குத் தரப்படுகின்றன.

### யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

'அருமறைப் பொருளினும் அமுதப் பெருக்காம்
திருமறைத் தேனைச் செந்தமிழ் உலகம்
பருகித் திளைக்கப் பாலரு வாயர்
உருகிப் பாடிய உயர்சீ காழியில்
தருமை நடாத்துந் தகவுறுந் திருநாள்
பெருமை பெறுக! பிறங்குக தமிழே' சிவமே!

### மாஜி கல்விமந்திரி தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார்.

ஆண்டவனருளால் விழா சிறப்பாக மக்கள் மனதில் உயர்ந்த கருத்துகள் உண்டாக்கப் பயன்படவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

### திரு. சு. இராமசாமி நாயுடு, Mayor of Madras.

தெய்வநம்பிக்கை குறைந்துவரும் காலத்தில் இத்தகைய திருமுறைத் திருநாட்கள் மிக இன்றியமையாதன. அறிஞர்களின் சொற்பொழிவுகள் அனைத்தையும் புத்தக வடிவமாகத்திரட்டித் தந்தால் மக்களிடையேகாணும் அறியாமையும், மடமையும் அறவே மறையும். அறிவுச்சுடர்கொண்டு கொளுத்தவேண்டுவது நம்மனோர் கடமையாகும்.

### திரு. கி. வா. ஜகந்நாதன்; 'கலைமகள்' ஆசிரியர்.

"தவம்நிறை கோலத் திருவமார் அடிகேள்!
சார்ந்தநற் றிருமுறைத் திருநாள்
சிவம்நிறை காழித் தலத்தினில் நிகழ்தல்
தருதிரு முகத்தினால் உணர்ந்தேன்
நவம்நிறை சுவைசேர் சொற்பொழி வுப்ல
நடப்பதும் அறிந்துவந் தேனால்
புவனமார் பூத நாயகர் அருளால்
புகழுற விழாநிறை வுறுக".

### திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், M. A., Deputy Collector.

விழா சிறப்பாக நடைபெற இறைவனை இறைஞ்சுகின்றேன்.

### திரு. O. M. இராமச்சந்திரஞ்செட்டியார், கோவை.

திருநாள் இறைவன் அருளால் சீர்பெற்று நடைபெறுக! நீதிபதி சிவசங்கர முதலியார் தலைமையில் நன்றாக நடைபெறுவதாகுக! அறிஞர்கள் உரைகளை மக்கள்கேட்டு இறைவன் திருவருளுக்குப் பாத்திரம் ஆகுவார்களாக!

### கவியரசு, R, வேங்கடாசலம் பிள்ளை, தஞ்சை.

திருமுறைத்திருநாள் இதழ் வந்திற்றது. நிகழ்ச்சிமுறைகள் காணுந்தோறும் உள்ளம் நெகிழ்ச்சிபெறச் செய்கின்றன.

### வித்துவான் திரு. C. இலக்குவன், M. O. L. விருதுநகர்.

உண்மைச் சமயநெறி ஓங்குவதற்கு இத்திருநாள் துணைபுரிவதாக; வெற்றிபெறுக. விழா இனிதே நிறைவேறுக.



### திரு. ந. சிவகுருநாதப் பிள்ளை, தூத்துக்குடி.

வெறும் மேனாதான ஆரவாரங்களின்றி திருமுறைப் பெருமையை விளக்கும் சொற்பொழிவுகளோடு நிகழ்த்த திருவுளங்கொண்ட ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் திருவடிகட்கும், அதனை முன்னின்று சிறப்புற நடத்திவைக்கும் தேவரீர்கட்கும் அடியேனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

### மஹாவித்துவான், கே. ஆறுமுகநாவலர், நாகர்கோவில்.

பேரறிஞர் பலர் பெரும் பொருள்பலபற்றி நிகழ்த்த இருக்கும் சொற்பொழிவுகள் தற்காலத் தமிழுலகிற்குப் பெருநலம் விளைவிக்குமென்பது முடிவு.

### திரு. ஆ. முத்துக்குமாரசாமி, அம்பாசமுத்திரம்

திருஞானசம்பந்தப்பெருமான் திருஞானப்பாலுண்ட நன்னாளில், திருமுறைத் திருநாள் தொடங்கி நடைபெறுவது தமிழும், சைவமும், செய்த தவம் நிரம்ப ஏற்பட்ட நன்நிமித்தம். தங்களைப்போன்ற தவமுனிவர்களால், நாங்கள் உற்ற இடையூறுகள் எல்லாம் நீங்கும் என்ற உறுதியுடையோம்.

### திரு. தி. பொ. பழனியப்பபிள்ளை, B. O. L. திருப்பதி

"காழியர் செல்வப் பிள்ளையார் பால்வாய்க் கழறிய திருமுறை முதலா
மேழியர் செல்வப் பெருமாளருளும் வீறுசால் புராணமே யீறு
யாழிசூ ழுலகிற் செந்தமிழ்ப் பயனு யாண்டவன் றிருநெறி துலக்கு
மேழிசைப் புலமா மெந்திரு முறைக ளென்றென்றும் வாழிய வினிதே.

சென்னிய ராண்ட திருவுடை நாட்டிற் செழுந்தமிழ்ப் பழனெனத்திகழும்
பன்னிரு பகுப்பின் றிருமுறை விழாவிற் பலபெரும் புலவர்சொற் பயனை
என்னிருசெவியுங் கண்களுங்கொள்ள வேற்பிலவெனினுமென் னுள்ளம்
துன்னியக் குழுவிற் றுழாவியுந் துருவித் தோய்ந்திடு மேய்ந்திடு மாலோ"

"காழித் திருநகரிற் கண்கொள்ளாக் காட்சியெழச்
சூழும் திருமுறைநாள் தோற்றத்தின்—வாழியரோ
ஆண்டான் திருநெறியு மன்ப ருளப்பாங்கு
மீண்டுபல் லாண்டு மினி.

### திரு. S. கல்யாணசுந்தர அய்யர், சென்னை

நிகழ்ச்சி விபரங்கள் படித்துப்பார்த்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

### DR. T. S. திருமூர்த்தி, நுங்கம்பாக்கம்

திருமுறைத் திருநாள் விழா இனிதே நடைபெற்று மக்கள் பெரும் பயன் அடைவார்களாக.

### திரு. தி. சுப்பிரமணியம், B. A. Hons. A. I. R. Trichy.

தமிழையும், சைவத்தையும், பேணி வளர்ப்பதற்கெனவே தோன்றியுள்ள நம் ஆதீன கர்த்தாவின் அரும்பெரும் முயற்சிகள் பலவற்றுள் ஒன்றாய இத்திருவிழா வெற்றிகரமாய்க் கொண்டாடப் படுவதோடு, மக்களுக்குத் தமிழ்ப்பற்றையூட்டுதற்குப் பெரிதும் பயன்படுமென்று நம்புகிறேன்.

### வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார், திருச்சி.

திருமுறைத் திருநாள் சிறப்புடன் நிகழ எல்லாம் வல்ல இறைவன் திருவருள்புரிய அவனடிமலர்களை அன்புடன் வேண்டுகின்றேன்.

### பம்பாய்த் தமிழ்ச்சங்கம், மாதுங்கா

செந்தமிழும் சைவமும் சிறப்புறவாரத் தங்களும் தங்கள் ஆதீனமும் செய்யும் செயல்முறைகள் எவ்வளவோ பாராட்டற்குரியது. திருமுறைத்திருநாள் வெற்றியுற நடைபெற மலைமகள் பாகன் மலரடி இறைஞ்சுகின்றோம்.



### இளைஞர் நல்லற மன்றம், சென்னை

தக்கார் தலைமையில் விழா கொண்டாடப்பெறுவது குறிப்பிடத் தக்கது. அறிஞர்களைத் தேர்ந்து அவரவர்கட்கு அமைந்த பொருளைத் தரப்பட்டிருத்தலும் பாராட்டுதற்குரியது.

தமிழ் தழைக்க, சைவம் சிறக்க இத்தகு விழாக்கள் மிகவும் இன்றியமையாதனவாகும்.

### திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம், கும்பகோணம்

"திருத்தருமையாதீனத்துத் தலைவராக எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ குரு மஹா சந்நிதானம் அவர்கள் சைவத்தையும் செந்தமிழையும் வளர்க்கத் திருவுளம்பற்றியபடி, சீகாழித்தலத்தில் ஸ்ரீ சட்டைநாதஸ்வாமி ஆலயத்தில், வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்க புனித, வாய்மலர்தழுத ஞானசம்பந்தப் பெருமானுக்கு ஞானம் குழைத்துப் பாலளித்தவிழா நடைபெறுகின்ற புனிதநாள் (2—5—49) முதலாக நடைபெறும் "திருமுறைத் திருநாள்" விழா செவ்விதின் நடைபெற திருவருள் பாலிக்கும் வண்ணம் ஸ்ரீ அமிர்தவல்லி சமேத ஸ்ரீ அபிமுகேசப் பெருமானது திருவடித்தாமரைகளை இத் திருக்கூட்டத்தார் மனமொழி மெய்களால் வணங்குகிறார்கள்".

மலைக்கோட்டை மௌனமடம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திருக்கடவூர் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், உடற்பயிற்சி ஆசிரியர் மு. பால சுப்பிரமணியம், மாயூரம் திருநெறித் தொண்டர் கழகம் திரு. ரா. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சுந்தரப்பெருமாள் கோயில் மா. சிவகுருநாதன் முதலியோர்களிடமிருந்தும் பாராட்டுச்செய்திகள் வந்திருந்தன.

படிக்கவேண்டியவை.

## பழத்தோட்டம்

மக்களின் தேவையறிந்து வெளிவந்துள்ள நூல்களுள் இதுவும் ஒன்று. உணவுப்பொருளை எவ்வாறு விருத்திசெய்வது என்ற கேள்விக்கு இந்நூல் விடையளிக்கின்றது. பழத்தோட்டம், பழவகை, குறிப்புக்கள் என்ற மூன்று பகுப்பில் இந்நூல் அமைக்கப்பட்டிருக்கிறது. தோட்டம் அமையவேண்டியமுறை, விதைபோடுதல், பதியன்போடுதல், ஒட்டுப்பதியன் போடுதல், முதலியவைகளில் கவனிக்கவேண்டியமுறை. பயிரிடும் காலம், நீர்ப்பாய்ச்சுதல், எருவின் வகைகள், காய்ப்புமுறை ஆகியவைகள் முதல் பகுப்பில் விளக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாம் பகுப்பில் வாழை, மா, தென்னை உள்ளிட்ட பற்பல பழமரங்களின் வளர்ச்சிமுறை, காய்ப்புமுறை தரப்பட்டுள்ளன. மூன்றாம் பகுப்பில் காய்த்துபழங்களைப் பறித்தல், விற்றல், வற்றல் போடுதல், பூச்சிமுதலிய வியாதிதடுக்குமுறை ஆகிய பல குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மிக அழகானபதிப்பு, வெண்மையான காகிதம். 626 பக்கங்கள் அடங்கிய இதன் விலை ரூபாய் 10. தபாற்செலவு தனி. இவ்வரிய புத்தகத்தை எழுதி உலகிற்குபகரித்த அறிஞர் திரு. மு. அருணாசலம் அவர்கள் M.A. வேண்டுவோர் 'காந்தி ஆசிரமம்; மேழூங்கிலடி; சிதம்பரம்' என்ற விலாசத்திற்கு எழுதிப்பெறுவார்களாக.

## மேடைத்தமிழ்

'மாணவை மன்னறுத்தும் செல்வமும் உண்டு சிலர்க்கு' என்றார் குமரகுருபர அடிகள். பலர்க்கு என்று சொல்வது மிகையாகாது என்னும்படி அச்செல்வத்தை அள்ளிவீசி அவ்வவர்களையும் தன்வயமாக்கும் தகுதி இம்மேடைத் தமிழிடத்தில் இருக்கின்றது. இந்நூல் 128, 129ம் பக்கங்களில் தரப்பட்டுள்ள 'ஒன்பது தன்மைகளும் பத்து நயமொழிகளும்' என்ற பகுதி நூலின் உயிர்நாடியாக விளங்குகிறது. மேனாட்டு நாவலர், இந்திய நாவலர், தமிழ்நாட்டு நாவலர் ஆகியோர்களின் கருத்துக்களும், தமிழ்ச் சொற்பொழிவுகளும், ஆங்கிலச் சொற்பொழிவுகளுள்ளே மொழிபெயர்க்கப்பட்டனவாகிய சிலவும் மாதிரிக்காக இந்நூலிறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தமிழ் மகன் கையிலும் இருக்கவேண்டிய இந்நூல் திரு. வி. க. அவர்கள் அணிந்துரையுடன் தமிழ்மகளின் அணிகலமாக விளங்குகிறது. பலபேராசிரியர்களின் திருவுருவப்படங்களும் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன. நூலாசிரியர், தி. மு. தெய்வசிகாமணி ஆச்சாரியார், F.R.S.A. (London) 416 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை ரூ 7.80 விபரம் வேண்டுவோர், தி. தெ. ஈசன் Co. 29-A, திருவேங்கடமுதலி தெரு, பார்க்டவுன், சென்னை என்ற முகவரிக்கு எழுதித் தெரிந்து கொள்வார்களாக.

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

இவ்விதழ் ஒவ்வொரு ஆங்கிலமீ 10உ வெளிவரும்.

ஆண்டுக் கையொப்பத் தொகையை முன்னரே செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆண்டினிடையிலே சேருவோருக்குச் சேர்ந்த மாதத்திலிருந்து ஓராண்டுக்கு அவர்களின் கையொப்பத் தொகை கணக்கு வைத்துக்கொள்ளப்படும்

கடிதம் எழுதும்போதெல்லாம் தங்கள் தங்க சந்தா எண்ணைக் குறிப்பிடவேண்டும்.

இடம் மாறுபவர்கள் அடுத்த இதழ் தங்களுக் வந்து சேருமாறு தாபாலாபீசோடு ஏற்பாடு செய் புது விலாசத்தைக் காரியாலயத்துக்கும் உட அறிவித்துக்கொள்ளவேண்டும்.

பழைய இதழ்கள் கைவசமில்லை.

செயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியா

தருமபுரம், மாயூரம் P.

## இசைத்துறைக்கு ஆதரவு

தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில் மகோ
த்ஸவத்தில் 8-ந்திருநாள் (15-5-49) அன்று இன்னிசையரங்க நிக
ழ்ச்சி ஸ்ரீமதி. K. B சுந்தராம்பாள் அம்மையாருக்கு "ஏழிசை வல்ல
என்ற பட்டமும், 9-ந்திருநாள் (16—5—49) அன்று கானம
பொழிந்த ஸ்ரீ. M. K. தியாகராஜ பாகவதருக்கு "ஏழிசைச்செல்வ
என்ற பட்டமும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் வழங்கியதோ
இறையுணர்ச்சியைப் பரப்புவதற்காகவே ஞானசம்பந்தப்பெரும
முதலியவர்கள் இசையைப் போற்றிவந்தார்கள். அது போல
நீங்களும் நாட்டிலே நல்ல கடவுளுணர்ச்சி பரவ உங்களுக்கு
கிடைத்த இவ்விசையைப் பயன்படுத்துங்கள். அதற்காக எம
ஞானாதீனம் இந்தப் பரிசை வழங்குகிறது. நீங்கள் சிவத்தொண்டு
களாகத் திகழுங்கள் என ஆசீர்வதித்தார்கள்.

## ஆதீன தேவஸ்தானங்களில் லக்ஷார்ச்சனை

சீகாழி தேவஸ்தானத்தில் ஸ்ரீஞானசம்பந்தப்பெருமானுக்கு
திருக்கடவூர் தேவஸ்தானத்தில் ஸ்ரீ அபிராமியம்பாளுக்கும் லக்ஷா
ர்ச்சனை நடைபெற்று வருகின்றது.

## திருமழபாடி கோயிலில் ஆராதனை

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் மாதஜன்மநக்ஷத்திர
நாட்களில் மாதந்தோறும் நடைபெற்றுவரும் முறைப்படி இம்மா
தத்திலும் 6-6-49 சோமவாரத்தன்று திருமழபாடி கோயிலில் அபிஷே
ஆராதனைகள் செய்வித்து, தலப்பதிக வெளியீடும் வழங்கப்பெற்

## ஆச்சாள்புரத்தில் திருவிழா

தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த ஆச்சாள்புரம் ஸ்ரீசிவலோ
தியாகராஜ சுவாமி ஆலயத்தில் 31—5—49ல் தொடங்கி பிரமோ
த்சவம் நடைபெற்றுவருகிறது. 11—6—49 அன்று திருஞானசம்ப
சுவாமிகள் திருக்கல்யாணவைபவம் நிகழும். அன்று மாலை 6 மணி
தருமபுர ஆதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர, பாகவதர், பிர
S. விஜயராகவாசாரியார் & பார்ட்டியார் "திருஞானசம்பந்தர்
கல்யாண" கதாகாலக்ஷேபம் நிகழ்த்துவார்கள்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam
Gnanasambandam Press, Dharmapuram, (Mayavaram) 9—6—1949.